# இலண்டன் பயண அனுபவங்கள்









## தி.ஞானசேகரன்



# இலண்டன் பயண அனுபவங்கள்

## (பயண இலக்கியம்)

தி.ஞானசேகரன்

ஞானம் பதிப்பகம்

33ஆவது வெளியீடு

| | |
|---|---|
| நூல்: | Book: |
| இலண்டன் பயண அனுபவங்கள் | London Payana Anupavangal |
| (பயண இலக்கியம்) | (Travelogue) |
| ஆசிரியர்: | Author: |
| தி. ஞானசேகரன் | T.Gananasekaran |
| பதிப்பு: | Edition: |
| 1ஆம் பதிப்பு, செப். 2015 | First Edition, Sep 2015 |
| பதிப்பகம்: | Published By: |
| ஞானம் பதிப்பகம் | Gnanam Pathippakam |
| 3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 06 | 3B, 46th Lane, Colombo 06 |
| இலங்கை | Sri Lanka |
| தொலைபேசி: 0094 11 2586013 | Tel: 0094 11 2586013 |
| தொலைநகல்: 0094 2362862 | Fax: 0094 2362862 |
| மின்னஞ்சல்: editor@gnanam.info | Email: editor@gnanam.info |
| இணையத் தளம்: www.gnanam. info | Web: www.gnanam. info |
| கணினி வடிவமைப்பு: | Designed by : |
| திரு. ஞா. பாலசந்திரன் | Mr. G. Balachandran |
| திருமதி சுதா கோபி | Mrs. Sudha Gooby |
| அச்சுப் பதிப்பு: | Printed by: |
| குமரன் அச்சகம் | Kumaran Press (Pvt) Ltd. |
| 39, 36ஆவது ஒழுங்கை, கொழும்பு 06. | 39, 36th Lane, Colombo 06. |

Price:
SL Rs. 300/-
US $ 5

ISBN: 978-955-8354-50-6

# பதிப்புரை

*பயண இலக்கியங்களுக்கு எப்போதுமே வாசகர்களிடத்தில் பெரும் வரவேற்பு இருப்பதுண்டு. பயணி ஒருவர் தான் பயணம்செய்த நாட்டின் வரலாறு, சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டியல் அம்சங்களை விபரிக்கும்போது வாசகர்கள் அவற்றை அறிந்துகொள்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.*

*ஞானம் ஆசிரியர் 2013 ஆம் ஆண்டில் இலண்டனில் இடம்பெற்ற உலகத்தமிழியல் ஆய்வு மாநாட்டுக்குச் சென்றவேளை அங்கு தங்கியிருந்த ஒரு மாதகாலத்தில் தான் பாத்துத் தெரிந்துகொண்ட பல்வேறுதரப்பட்ட விடயங்களை ஞானம் சஞ்சிகையில் தொடராக எழுதியிருந்தார். அத்தொடரை நூலாக்கினால் பயனுள்ளதாக அமையும் என்ற வாசகர் பலரது யோசனைக்கமைய அத்தொடர் இப்போது நூல்வடிவம் பெறுகிறது.*

*20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் உலக சாம்ராஜ்யத்தில் முக்கால்வாசிப் பகுதியைத் தமது பயணங்கள் மூலம் கைப்பற்றி ஆண்டவர்கள் ஆங்கிலேயர்கள்.*

*எமது நாடாகிய இலங்கையும் 1815 முதல் 1948 வரை 133 வருடகாலம் பிரித்தானியர் ஆட்சிக்கு உட்பட்ட நாடாக விளங்கியது. அவர்கள் அக்காலப்பகுதியில் ஏற்படுத்திய ஆட்சி முறையின் தாக்கம் இன்றுவரை தொடர்கிறது. அதனால் பலதரப்பட்ட பிரச்சினைகளை எமது நாடு எதிர்நோக்கியவண்ணம் இருக்கிறது.*

*எமது நாட்டையும் உலகின் பெரும்பகுதியையும் ஒருகாலத்தில் ஆட்சி செய்தவர்களின் நாட்டைப்பற்றி அறிவதில் எம்மில் பலருக்கும் ஆர்வம் இருக்கலாம்.*

*2000 ஆண்டுகாலப் பிரித்தானியாவின் வரலாறு, அந்நாட்டு மக்களின் பழமைபேணும் ஆர்வம், இலண்டன் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற உலகத் தமிழியல் மாநாடு, அப் பல்கலைக்கழகத்தின் முன்னால் நிறுவப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலை, உலகின் முதலாவது நிலத்துக்கடியிலான ரயில் சேவை, இலண்டனில் உள்ள நவீனப்போக்குவரத்துவசதிகள், உலகப்புகழ்பெற்ற பிக்பென் மணிக்கூட்டுக் கோபுரம், இலண்டன் பிறிட்ஜ், தேம்ஸ் நதித் தீரம், உலகின் முதலாவது பாராளுமன்றம், கி.பி.600 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட 'வெஸ்ட்மின்ஸ்டர்*

அபே' தேவாலயம், அரச அரண்மனையும் அரச பரம்பரையும், இலண்டன் ஐ எனப்படும் நவீன ராட்டினம், நான்கு பரிமாண சினிமா, ஆயிரக்கணக்கான உலகப் பிரபல்யங்களை மெழுகுப் பொம்மைகளாக வடித்துக் காட்சிப்படுத்தும் 'மேடம் டூசட்' அருங்காட்சியகம், 5000 ஆண்டுகால வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களைக் கொண்ட பிரித்தானிய அருங்காட்சியகம், பலகோடி வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த டைனோஸர் விலங்கினத்தின் 108 அடி நீளமான எலும்புக் கூட்டைக்கொண்ட இயற்கை வரலாற்று அருங்காட்சியகம், முதலாம் இரண்டாம் உலகப் போர்களில் ஏற்பட்ட அழிவுகளையும், போரில் பாவிக்கப்பட்ட ஆயுதங்களையும், அந்தப் போரிலிருந்து இங்கிலாந்து மீண்ட வரலாற்றையும் காட்சிப்படுத்தும் இம்பீரியல் போர்வரலாற்று அருங்காட்சியகம், புலம்பெயர்ந்து அந்நாட்டில் வாழும் நம்மவர்களின் வாழ்க்கைமுறை இப்படியாகப் பல சுவாரஸ்யமான விடயங்கள் இந்தப்பயண இலக்கிய நூலில் அடங்கியுள்ளன.

இலண்டன் பயண அனுபவங்கள் என்ற இந்நூல் ஞானம் பதிப்பகத்தின் பயண இலக்கிய நூல்களின் வரிசையில் நான்காவதாகும். ஏற்கனவே வெளிவந்த அவுஸ்திரேலியப் பயணக்கதை, வட இந்திய பயண அனுபவங்கள், அங்கோர் உலகப் பெருங்கோயில் ஆகியவை வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன. ஞா. பாலச்சந்திரன் எழுதி ஞானம் சஞ்சிகையில் தொடராக வெளிவந்த 'அங்கோர் உலகப் பெருங்கோயில்' பயண இலக்கியம் அளிக்கை முறையில் புதிய பரிமாணத்தை அறிமுகம் செய்ததோடு இலங்கைத் தேசிய சாஹித்திய விருதினைப் பெற்றுக்கொண்டதையும் வாசகர்கள் அறிவர்.

அந்த வரிசையில் இந்நூலும் வாசகர்களின் அறிவுத்தேடலுக்கும் வரவேற்புக்கும் உரியதாக அமையும் என்பதில் ஐயமில்லை. இந் நூலுக்கு பெறுமதிவாய்ந்த அணிந்துரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாட் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் வழங்கியுள்ளார். அவருக்கு எமது மனப்பூர்வமான நன்றி உரியது. இந்தப் பயணத் தொடர்க் கட்டுரைகள் ஞானம் சஞ்சிகையில் வெளிவந்துகொண்டிருந்த காலப்பகுதியில் அவற்றை வாசித்து உற்சாகமூட்டிய வாசகர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பதிப்பாசிரியர்

**ஞானம் பதிப்பகம்**

3-பி, 46ஆவது ஒழுங்கை,
கொழும்பு - 06.
editor@gnanam.info

09-08-2015

# அணிந்துரை

டாக்டர் தி. ஞானசேகரன் ஓர் ஆக்க இலக்கிய எழுத்தாளர். இலக்கிய ஆக்கத்துக்கு உதவும் நுணுக்கமான அவதானிப்புகள் அவருக்கு நல்ல பிரயாண அனுபவ நூல்களை ஆக்குதற்கு உதவுகின்றன. அவுஸ்திரேலியப் பயணக்கதை, வட இந்தியப் பயண அனுபவங்கள் ஆகிய அவருடைய நூல்களைப் படித்தவர்களுக்கு இந்த உண்மை நன்கு புலனாகும். வட இந்தியப்பயண அனுபவங்கள் பற்றிய அவருடைய எழுத்துக்களை நான் படித்து மகிழ்ந்துள்ளேன். இந்த வகையில் தி. ஞானசேகரனுடைய இலண்டன் பயண அனுபவங்கள் சுவைத்துப் படிக்கக் கூடிய இன்னொரு பயண இலக்கியமாக அமைகின்றது.

எந்த மாநாட்டிலே பங்குபற்றுதற்கு இந்நூலாசிரியர் இலண்டன் சென்றாரோ அந்த மாநாட்டிலே (உலகத் தமிழியல் ஆய்வு மாநாடு, இலண்டன் 2013) பேராதனைப் பல்கலைக் கழக சிரேஷ்ட துணைநூலகர் திரு. இரா. மகேஸ்வரன் அவர்களால் படிக்கப்பட்ட "ஈழத்தமிழ்ப் பயண இலக்கியங்கள் - தனிநாயக அடிகளார் முதல் தற்காலம் வரை" என்னும் கட்டுரையில் "புதிய அனுபவங்களையும் புதிய உணர்ச்சிகளையும் பிறரோடு பகிர்ந்து கொள்வதற்காகப் படைக்கப்படும் இப்பயணப் படைப்பிலக்கியம் தரமான புதிய வடிவம் பெற்றுள்ளது. பல்வேறு மக்களுடைய இயல்புகள், பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள், கலாசாரங்கள், சமய நம்பிக்கைகள், கண்களால் கண்டவை, கேட்டவை எனச் சகலவற்றினையும் குறிப்பெடுத்துப் பாதுகாத்து வைத்துக் கலையம்சத்துடன் இலக்கிய வடிவம் கொடுப்பதுடன், தமக்கே உரித்தான சிறந்த நடைவளமும் சிறந்த மொழிப் பிரயோகமும் கொண்ட தரமான படைப்பிலக்கியமாக மிளிரச் செய்வதற்குத் தனித்திறமை அவசியம்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது. திரு. மகேஸ்வரன் குறிப்பிட்ட அந்தத் தனித் திறமை டாக்டர் ஞானசேகரனிடம் இருப்பதை அவருடைய பிற பயண இலக்கியங்கள் போல இலண்டன் பயண அனுபவங்கள் நூலும் சான்று கூறி நிறுவுகிறது.

சொகுசான பயணம் என்று நினைப்பது சில வேளைகளில் நாவரட்சி ஏற்படச் செய்யும் என்பது பலருக்குத் தெரியாது. டாக்டரும் துணைவியாரும் பெற்ற நாவரட்சி அனுபவம் இந்நூலில் பகிரப்படுகிறது. இலண்டன் என்றவுடன் 'பிக் பென்', 'லண்டன் பிறிஜ்', 'பக்கிங்காம் அரண்மனை', 'தேம்ஸ் நதி' என்பன அடையாளங்களாக நம் மனக்கண்ணிலே தோன்றும். அவை இந்நூலின் முகப்பிலே இடம் பெற்றுச் சிறப்புச் செய்கின்றன.

இலண்டனுக்குச் செல்லும் ஒருவர் பார்க்கவேண்டிய முக்கியமான இடங்கள் பற்றிய அனுபவப் பகிர்வுகளை ஆசிரியர் இந்நூலிலே செய்துள்ளார். குறிப்பாக நூலிலே தரப்பட்டுள்ள படங்கள் நல்ல செய்தித் தரவுகளாக அமைகின்றன. மடம் ருஸாட் மெழுகுப் பொம்மைக் காட்சிச் சாலை ஆசிரியரை மிகுந்த மகிழ்ச்சி ஊட்டி உள்ளது. மெழுகுப் பொம்மைகளான எலிஸபெத் மகாராணி, நெல்சன் மண்டேலா, விஞ்ஞானி ஐன்ஸ்ரைன் ஆகியவற்றுக்கு அருகில் நின்று நூலாசிரியர் எடுத்த படங்கள் நூலிலே பிரசுரிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு அருகில் உண்மையாகவே நின்று எடுத்தது போன்ற மகிழ்வினை ஆசிரியருடைய முகத்திலே காண்கிறோம்.

இலண்டன் பழைமைக்குப் பெயர்பெற்றது. அவற்றையெல்லாம் ஓரளவு தன் நூலிலே தொட்டுச் செல்லும் ஆசிரியர் புதுமையினையும் அறிமுகப்படுத்துகிறார். இவ்விரண்டையும் ஓரிடத்தில் அருகருகே ஆசிரியர் தன்னுடைய எழுத்துத் திறமையால் நமக்குக் காட்டுகிறார்:

"இந்தத் தேவாலயத்தைவிட்டு நாங்கள் வெளியே வந்தபோது 2000 ஆண்டுப் பழமைக்குள் புகுந்து வெளியே வந்த ஓர் உணர்வு - ஓர் ஆழம் என்மனதுள் நிறைந்திருந்தது.

தேம்ஸ் நதியின் தீரத்தில் அமைந்துள்ள ஓர் இராட்சத இராட்டினம்தான்(சக்கரம்) 'இலண்டன் ஐ'. இது ஐரோப்பாவிலேயே மிகப் பிரபலமான சுற்றுலா மையமாகத் திகழ்கிறது. இந்த 'இலண்டன் ஐ' இலண்டனின் புதுமைக்குச் சான்றாக விளங்குகிறது. புதிய நூற்றாண்டைச் சிறப்பிக்கவென இந்த இராட்சத இராட்டினம் அமைக்கப்பெற்றது. ஒரு சைக்கிளின் சில்லைவிட உருவத்தில் 200மடங்கு பெரியது. மூவாயிரம் தொன் அடித்தளத்தில் எழுநூறு தொன் இரும்பினால் அமைக்கப்பட்ட இந்த இராட்சத சக்கரம் 135 மீற்றர் உயரமும் 120 மீற்றர் விட்டமும் கொண்டது. சக்கரத்தில் 32 இராட்சத கண்ணாடிக்கூண்டுகள்

*அமைந்துள்ளன. ஒவ்வொரு கண்ணாடிக் கூண்டிலும் ஒரே நேரத்தில் 25 பேர்பயணம் செய்யலாம்."*

*இலண்டன் வெஸ்ற்மினிஸ்ரர் தேவாலயத்தைப் பார்த்துப் பழைமையிலே பிரமித்தவர்களை 'இலண்டன் ஐ' காட்டி புதுமையை வியக்கவைக்கிறார் ஆசிரியர். டாக்டர் ஞானசேகரின் தமிழ்நடை எல்லாக் காட்சி வர்ணனைகளுக்கும் கருத்துப் புலப்பாட்டுக்கும் இசைவுபெற்று நிற்கின்றது. நம்முடைய இளையவர்கள் இந்நூலைப் படித்துப் பயன்பெறுவார்கள். இலண்டனுக்கு முன்னர் போகாதவர்கள் கட்டாயம் படிக்கவேண்டிய நூல். சென்றவர்கள் தம்முடைய பழைய அனுபவங்களை மீட்டுப் பார்க்கவும், "அடடா நாம் பார்த்த இலண்டனை விட இப்போது பல மாற்றங்களுக்கு உட்பட்ட இலண்டனையல்லவா இந்நூலிலே காண்கிறோம்" என்று வியப்படையவும் இந்நூல் உதவும். இந்த சுவையான நூலை நமக்களித்த டாக்டர் தி. ஞானசேகரனை வாழ்த்தி இந்த அணிந்துரையை நிறைவுசெய்கிறேன்.*

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**

தகைசார் வாழ்நாட் பேராசிரியர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



# 1

# இலண்டன் பயணம்

*11-08-2013*

'ஓமன் எயர்' விமானம் இலண்டன் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தது.

பயணிகள் நிறைந்த அந்த விமானத்தில் நானும் மனைவியும் பயணக்களைப்பு மேலிட அமர்ந்திருந்தோம். இலங்கையிலிருந்து புறப்பட்டு ஏறத்தாழ ஆறாயிரம் மைல்தாண்டி அந்த விமானம் பறந்துகொண்டிருந்தது.

'விமானத்தில் பயணம் செய்வதே இவ்வளவு அலுப்பாய் இருக்கிறதே. விமானப் போக்குவரத்து இல்லாத காலத்திலேயே இந்த ஆங்கிலேயர்கள் கடல்மார்க்கமாக எப்படித்தான் மாதக்கணக்கில் பயணம் செய்து கீழைத்தேய நாடுகளைக் கைப்பற்றினார்களோ!' என வியப்புடன் கூறினாள் மனைவி.

20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் உலக சாம்ராஜ்யத்தில் பெரும்பகுதியை தமது பயணங்கள் மூலம் கைப்பற்றி ஆண்டவர்கள் ஆங்கிலேயர்கள்.

இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, ஜாவா சுமத்திரா, போர்னியோ, தென் ஆபிரிக்கா, கரபியன் நாடுகள், என இப்பட்டியல் நீளும். ஆங்கிலேயரின் ஆட்சியில் சூரியன் அஸ்தமிப்பதில்லை என்று அக்காலத்தில் பெருமையாகச் சொல்வார்கள். அதாவது அவர்களது ஆட்சியின்கீழ் இருந்த நாடுகளில் ஒரு நாட்டில் சூரியன் மறையும்பொழுது வேறொரு நாட்டில் சூரிய ஒளி இருக்குமாம்.

19ஆம் நூற்றாண்டில் கைத்தொழிலாலும், கடல் ஆதிக்கத்தாலும் பலம்பெற்ற நாடாகப் பிரித்தானியா விளங்கியது. நவீன இலக்கியம், விஞ்ஞான வளர்ச்சி ஆகியவற்றிலும் உயர்ச்சி பெற்றிருந்தது.

எங்களது பயணக் களைப்புக்குக் காரணம் இலங்கையிலிருந்து நேரடிப் பயணத்துக்கான விமான டிக்கற் கிடைக்காததால் நாம் இந்த ஓமன் எயர் விமானத்தில் பயணம்செய்யவேண்டி ஏற்பட்டதுதான். இலங்கையில் இருந்து காலை 8.45க்குப் புறப்பட்ட இந்த விமானம் ஓமன் தலைநகரான மஸ்கட்டில் உள்ள விமான நிலையத்தில் மூன்று மணிநேரம் தரித்திருந்த பின்னரே தன் பயணத்தைத் தொடர்ந்தது.

விமான நிலையத்தில் தரித்திருந்த நேரத்தில் களைப்புத்தீர ஏதாவது அருந்தலாம் என்ற எண்ணத்துடன் அங்கு இருந்த சிற்றுண்டிச் சாலைகளில் சென்று விசாரித்தால் அவர்கள் தங்கள் நாட்டுப் பணமான ரியாலிலே விலை சொன்னார்கள். நாம் வைத்திருந்த கிறெடிற் கார்ட்டை சிற்றுண்டிச் சாலைகளில் ஏற்க மறுத்தார்கள். கிறெடிற் கார்ட்டுக்கு வியாபாரம் செய்யும் வசதி அந்தச் சிற்றுண்டிச்சாலைகளில் இருக்கவில்லை.

கிறெடிற் கார்ட்டைவிட எம்மிடம் அமெரிக்கன் டொலர் இருந்தது. யூ.கே. பவுண்ஸ் இருந்தது. அந்தப்பணத்தை அவர்கள் பெற்றுக்கொண்டு எமக்குத் தேவையான குளிர்பானத்தைத் தரத்தயாராக இருந்தார்கள். ஆனால் மிகுதிப்பணத்தை அவர்களது நாட்டு ரியாலில்தான் தருவார்களாம். அவர்கள் எம்மை ஏமாற்றி விடுவார்களோ என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டது. அது ஒருபுறமிருக்க அவர்கள் தரும் மீதிப்பணமான ரியாலை வைத்துக்கொண்டு நாம் எதிர்காலத்தில் என்னதான் செய்ய முடியும்?

மஸ்கட் ஒரு முஸ்லிம் நாடு. ஆனால் விமான நிலையத்தில் பல இந்தியத் தமிழ்த் தொழிலாளர்கள் சிற்றூழியர்களாக வேலை செய்வதைக் காணக்கூடியதாக இருந்தது. அவர்கள் சிலரிடம் கதை கொடுத்துப் பார்த்தேன். அவர்கள் சொன்ன தகவல்கள் எனக்கு ஆச்சரியத்தைத் தந்தன. மஸ்கட்டில் நிறைய இந்தியர்கள் வேலை செய்கிறார்கள். இந்தியக் கடைகள் நிறைய இருக்கின்றன. இந்தியப் பொருட்களும் தாராளமாகக் கிடைக்கின்றன. மஸ்கட் தமிழ்ச்சங்கம் என்ற அமைப்புக்கூட இருக்கிறதாம். அங்கு தமிழர் கலைநிகழ்வுகள் அடிக்கடி நடைபெறுவதாகவும் கூறினார்கள். கேட்பதற்கு மகிழ்ச்சியாக இருந்தது. மஸ்கட்டில் வரண்ட கால நிலையே வருடம் முழுவதும் நிலவும் என்ற செய்தியையும் அறிய முடிந்தது.

விமானத்தில் இருந்து இறங்கி பயணிகள் பேருந்தில் ஏறி விமான நிலையத்துக்குள் நுழையும்போது அதிக உஷ்ணத்தை எம்மால் உணரமுடிந்தது. அதேபோன்று திரும்பி விமானத்தில் ஏறிச் செல்லும்போதும் அதே உஷ்ணந்தான். மஸ்கட் விமான நிலையத்தில் மீண்டும் நாம் விமானத்துக்குள் ஏறியதும் முதல் வேலையாகப் பணிப்பெண்ணிடம் தண்ணீர் கேட்டு வாங்கி எமது தாகத்தைத் தணித்துக்கொண்டோம். அவ்வளவுக்கு நாவரட்சி இருந்தது.

விமானத்துள் இருந்தபடி லண்டன் தொடர்பான எண்ணங்களில் நான் மிதந்து கொண்டிருந்தேன்.

நான் சிறுவனாக இருந்த காலத்தில் இலண்டனில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் என்றால் அதற்கு ஒரு தனி மௌசு இருந்தது. உறுதியானவை, தரத்தில் மேலானவை என்ற உத்தரவாதம் எல்லாம் இருக்கும். கார்களைப் பொறுத்தவரையில் போர்ட், பேர்ஜோ, றோவர், ஒஸ்ரின், வக்ஸோல் இவையெல்லாம் உலகப் புகழ்பெற்ற கார்கள். ஹம்பர் சைக்கிள், அந்தக் காலத்தில் ஓடிய பி.எஸ்.ஏ. மோட்டார் சைக்கிள்கள் எல்லாம் புகழ்பெற்றவை. வீடுகளில் 'பிக் பென்' சிறிய மேசை மணிக்கூடுகள் இருந்தால் அதற்குத் தனிமதிப்பு. இங்கிலிஷ் மேக் பூட்டுகள் திறப்புகள், மின்சார உபகரணங்கள் என எல்லாவகைப் பொருட்களிலுமே ஆங்கில



தேசத்து உற்பத்தியிலே மோகம் கொண்டகாலம் அது. இந்த உற்பத்திப் பொருட்களுக்கான தனி மதிப்பெல்லாம் இப்போது பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போய்விட்டது.

இன்று ஜப்பான், சீனா, போன்ற நாடுகளின் உற்பத்திப் பொருட்கள் உலகசந்தையை ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டன.

யூ.கே. என்று பொதுவாக யாவராலும் அழைக்கப்படும் ஐக்கிய இராச்சியம், பெரிய பிரித்தானியா, இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, வேல்ஸ், வட அயர்லாந்து ஆகியவற்றை உள்ளடக்கிய பெரிய நாடு. இலண்டன் இவற்றிற்கெல்லாம் தலைநகரம்.

இவற்றுள் பெரிய பிரித்தானியா இலங்கையிலும் பார்க்க மூன்று மடங்கு பெரியது. இங்கு 602 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள்.

எமது நாடு 1948ல் சுதந்திரம் அடைந்தது. அதற்கு முன்னர் பிரித்தானியாவின் ஆட்சியின் கீழ் இருந்தது. 1815இல் இலங்கையைப் பிரித்தானியர்கள் கைப்பற்றினர். அவர்களது வருகைக்கு முன்னர் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் வெவ்வேறான இரண்டு இராசதானிகள் இருந்தன. பிரித்தானியர்கள் தமது ஆட்சி வசதிக்காக அவை இரண்டையும் ஒன்றிணைத்து ஒற்றை ஆட்சியின் கீழ் கொண்டுவந்தார்கள். ஆனால் அவர்கள் நாட்டை விட்டுப் போகும்போது இரண்டு இனங்களுக்குமான இராசதானிகளைப் பிரித்துக் கொடுக்கவில்லை. இதுவே இன்று இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணமாக அமைந்துவிட்டது.

இந்த இனப்பிரச்சினை காரணமாக எழுந்த உரிமைப் போர் காரணமாக இன்று உலகெங்கும் புலம்பெயர்ந்து தமிழர்கள்

வாழ்கிறார்கள். ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிப்பட்ட 310 நாடுகளில் 132க்கு மேற்பட்ட நாடுகளில் புலம்பெயர் தமிழர்கள் வாழ்கிறார்கள்.

இலங்கையிலிருந்து மட்டும் ஏறத்தாழ மூன்று லட்சம் தமிழர்கள் புலம்பெயர்ந்து இலண்டனில் வாழ்வதாக அறிய முடிகிறது. பிரித்தானியாவில் 'மனித உரிமைச்சாசனம்' என்று ஒரு சட்டம் இருக்கிறது. இந்தச் சட்டத்தின்படி இனப்படு கொலைகள், இனக்கலவரங்கள், சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள், உரிமை மீறல்கள் இடம்பெறும் நாடுகளில் இருந்து தப்பி பிரித்தானியாவுக்குள் வந்து தஞ்சம் கோருவோருக்கு பிரித்தானியா தஞ்சமளிக்கிறது. அகதி அந்தஸ்த்துக்கோரி இங்கு வந்த ஈழத்தமிழர்களின் தொகை சுமார் ஒன்றரை இலட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாறு அகதி அந்தஸ்த்து கோரியவர்களில் கணிசமானோரின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டு அவர்கள் சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படும் செயற்பாடுகளும் நிகழ்ந்துள்ளன.

பிரித்தானியாவுக்கு வேலை செய்வதற்கான அனுமதிப் பத்திரத்துடன் வந்து தொடர்ந்து ஐந்து வருடங்கள் வேலை செய்தால் நிரந்தரமாக இங்கு வாழ்வதற்கான தகுதியைப் பெறலாம். பதினான்கு ஆண்டுகள் விஸாவோ வேறு அத்தாட்சிப் பத்திரங்களோ இல்லாமல் தொடர்ச்சியாக இங்கு வாழ்ந்ததை நிரூபித்தால் அவர்கள் காலவரையின்றி இங்கு தங்கிவிடலாம்.

இலங்கையில் இருக்கும் தமிழர்களானாலும்சரி புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களானாலும்சரி பிரித்தானியாவின் பி. பி. சி. உலகச்சேவை செய்தி ஒலிபரப்பைக் கேளாதவர்கள் இருக்க முடியாது. சுமார் 33 மொழிகளில் உலகிலேயே தரமான செய்திச் சேவையை இந்த பி.பி.சி நிறுவனம் செய்து வருகிறது. இந்த நிறுவனம் சகல நாடுகளிலும் செய்தி சேகரிக்கும் நிருபர்களை வைத்திருக்கிறது. இலங்கையில் நடக்கும் சம்பவங்களை குறிப்பாக ஈழப்போர்க் காலத்தில் உடனுக்குடன் உலகம் எங்கும் அறியத்தந்த பெருமை இந்த பி.பி.சி. நிறுவனத்துக்கே உரிய சிறப்பு. இதன் காரணமாக இலங்கையைத் தாயமாகக் கொண்ட தமிழர்களிடையே



இந்த பி. பி.சிக்கு ஒரு ஈர்ப்பு உண்டு. செய்திகளை ஒலிபரப்புவதுடன் மட்டும் நின்றுவிடாது சர்ச்சைக்குரிய விஷயங்களை சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் தொலைபேசியில் அழைத்து அவர்களது கருத்துக்களை நேயர்களுக்கு அறியத்தரும் பெருமையும் பி.பி.சி.க்கு உண்டு.

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னர் எனது மாணவப் பருவத்தில் ஆரம்பபாடசாலையில் படித்த காலத்தில் பிரிட்டிஷ் எலிசபெத் மகாராணியின் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் ஒவ்வொரு வருடமும் பாடசாலையில் நடைபெறும். அந்நாட்களில் மாணவர்களிடையே விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்று மாணவர்களுக்குப் பரிசுப்பொருட்களும் இனிப்புகளும் வழங்குவார்கள்.

இரண்டாவது எலிசபெத் மகாராணி இப்போது பிரித்தானியா நாட்டின் தலைவியாக இருக்கிறார். இவர் 21-04-1926இல் பிறந்தவர். இந்த மகாராணிக்கு 1953ஜூன் மாதம் இரண்டாம் திகதி பட்டாபிஷேகம் நடைபெற்றது. அந்தப் பெருவிழாவுக்கு எமது வன்னிப் பிரதேச நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அடங்காத்தமிழன் என வர்ணிக்கப்பட்ட திரு. சி.சுந்தரலிங்கம்

அவர்களுக்கு தனிப்பட்ட அழைப்பிதழ் வந்ததாம். ஏனெனில் மகா ராணியின் கணித ஆசிரியராக ஒருகாலத்தில் அவர் இருந்தாராம்.

பிரித்தானியாவில் பாராளுமன்ற ஆட்சி முறையும் உள்ளது. பிரதமராக தற்போது டேவிட் கமரூன் பதிவியிலுள்ளார்.

இந்த நினைவுகளில் மூழ்கியிருந்த என்னை விமான அறிவிப்பு மீட்டுவந்தது.

இன்னும் சிறிது நேரத்தில் விமானம் ஹீத்ரோ விமான நிலையத்தில் இறங்கப்போகிறது என்ற செய்திதான் அது.

ஹீத்ரோ விமான நிலையம் ஐக்கிய இராச்சியத்தில் உள்ள முதல்தரமான விமான நிலையமாகக் கணிக்கப்பட்டுள்ளது. உலகின் வேறேந்த விமான நிலையத்தை விடவும் அதிகூடிய பயணிகள் போக்கு வரத்துக் கொண்ட விமான நிலையமாகவும் இது கணிக்கப்படுகிறது. மத்திய இலண்டனில் மேற்குப்புறத்தில் 24 கிலோமீற்றர் தொலைவில் அமைந்திருக்கும் இந்த விமான நிலையம் 4.69 சதுர மைல் பரப்பளவு கொண்டது. இந்த விமான நிலையத்தில் இரண்டு மாபெரும் ஓடுபாதைகள் செயற்பாட்டில் உள்ளன. ஒரு ஓடுபாதை விமானம் புறப்படுவதற்கும் மற்றது விமானம் இறங்குவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

நாங்கள் சென்ற வேளையில் மூன்றாவது ஓடுபாதையொன்று புதிதாக அமைக்கப்படும் நிலையில் இருந்தது.

கடும்பனிக்காலத்தில் இந்த ஓடுபாதைகளில் பனி நிறைந்து விமானப்போக்குவரத்து தடைப்படுவதுமுண்டு.

இலண்டனுக்கான எமது இந்தப் பயணம் சற்றேனும் எதிர்பாராததொன்று.

இந்த வருடத் தொடக்கத்தில் நான் தமிழ்நாடு செல்லவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. சுஜாதா - உயிர்மை அறக்கட்டளை நடத்திய போட்டியில் சிறந்த சிற்றிதழுக்கான விருதை நாம் நடத்தி வரும் ‘ஞானம்‘ சஞ்சிகை பெற்றுக்கொண்டது. அந்த விருதைப் பெற்றபின் தரமணி என்ற இடத்தில் இயங்கிவரும் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சில நூல்களைக் கொள்வனவு செய்யும் நோக்கத்துடன் சென்றிருந்தேன். தமிழ் நாட்டுக்கு வந்திருந்த எழுத்தாளர் வி.ஜீவகுமாரனும் என்னுடன் இருந்தார்.

அவ்வேளையில் அந்நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவரான முனைவர் சிதம்பரம் அவர்கள், ‘இலண்டனில் தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டையொட்டி உலக இலக்கிய மாநாடு ஒன்று இடம்பெறுவுள்ளது. அதற்கு நீங்களும் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்கலாமே’ எனக்கூறி அந்த மாநாடு தொடர்பான விபரங்களைத் தந்தார்.

அந்தக்கணமே அந்த மாநாட்டில் நான் எப்படியும் கலந்து கொள்ளவேண்டும் எனத் தீர்மானித்தேன்.

அந்த மாநாட்டில் இலக்கியம், சமயம் சார்ந்த கட்டுரைகள் உட்பட பலதரப்பட்ட தலைப்புகளில் ஆய்வுக்கு கட்டுரைகள் கோரப்பட்டிருந்தன. நான் இலக்கியம் சார்ந்தும் மனைவி சமயம் சார்ந்தும் எழுதிய ஆய்வுக்கட்டுரைகள் தேர்வுக்குழுவினரால் அங்கீகரிக்கப்பட்ட நிலையில் நானும் மனைவியும் இந்தப் பயணத்தை மேற்கொண்டோம்.

இந்த மாநாட்டுக்கு இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இருந்தும் விரிவுரையாளர்கள், கலாநிதிகள், பேராசிரியர்கள் பலர் செல்வதற்கான ஆயத்தங்களை மேற்கொள்கிறார்கள் என அறிந்தபோது நாம் பெரிதும் உற்சாகம் அடைந்தோம். பயணத்துக்கான ஆயத்தங்களை மேற்கொண்டோம்.

யூ.கே.விசா பெற்றுக்கொள்வதற்கு நாம் விண்ணப்பித்தபோது, எமது மனுக்கள் தமிழ்நாடு சென்னையில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு அங்கிருந்தே தீர்மானம் எடுக்கப்படும் என்று கூறினார்கள். இது புதிய நடைமுறை. சென்ற வருடத்தில் எனது உறவினர் ஒருவர் இலண்டன் சென்றபோது கொழும்பில் இருந்த பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்திலேயே விசா பெற்றுக்கொண்டதாகக் கூறினார். இப்போது கொழும்பில் பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் இல்லை. இந்த மாற்றம் சில அரசியல் காரணங்களால் ஏற்பட்டது எனப் பின்னர் அறிந்துகொண்டேன்.

விசா கிடைப்பதில் எமக்கு எவ்வித சிக்கல்களும் இருக்கவில்லை. ஒருமாதகாலம் இலண்டனில் தங்குவதற்கான விசாவுக்கு விண்ணப்பித்திருந்தோம். நாம் சற்றும் எதிர்பாராத விதத்தில்

ஆறுமாதகால விசா தந்தார்கள், அதுவும் இந்த ஆறுமாதகாலத்துள் எத்தனை தடவை வேண்டுமானாலும் இலண்டனுக்குச் சென்று திரும்பக்கூடிய வசதியுடன் விசா வழங்கியிருந்தார்கள்.

இந்த மாநாட்டுக்குச் செல்வதற்கு விண்ணப்பித்த ஒரு சிலரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. சிலரது விசாக்கள் தாமதமாகின. ஆனாலும் அதிகமானோரது விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு விசாக்கள் வழங்கப்பட்டன.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் ஐக்கிய இராச்சியம் விசா விடயத்தில் தாராளமாக நடந்துகொள்கிறது என்றே கூறலாம். விசா வழங்குவதற்கு தகுதியுடைய எல்லோருக்கும் குறைந்தது ஆறுமாத காலத்திற்கு விசா வழங்குகிறது.

விமானம் தரையிறங்கியதும் பயணிகள் முண்டியடித்துக் கொண்டு விமானத்தில் இருந்து இறங்கினார்கள். ஏன்தான் இவர்கள் இத்தனை அவசரப்படுகிறார்களோ என நினைத்தபடி நாம் சாவதானமாக இறங்கி குடிவரவு - குடியகல்வு அதிகாரிகளின் கருமபீடத்தை நோக்கி நடந்தோம்.

அங்கு சென்றபோதுதான் விமானத்தில் இருந்து பயணிகள் ஏன் முண்டியடித்துக் கொண்டு இறங்கினார்கள் என்பதற்கான காரணம் எமக்கு விளங்கியது.

# 2

# பாரம்பரியத்தைப் பேணும் பிரித்தானியர்கள்



**வி**மானத்திலிருந்து சாவதானமாக இறங்கி குடிவரவு - குடியகல்வு கருமபீடத்தை நோக்கி நடந்தோம். அப்போதுதான், விமானத்திலிருந்து பயணிகள் ஏன் முண்டியடித்துக்கொண்டு அவசர அவசரமாக இறங்கினார்கள் என்பது எமக்குப் புரிந்தது. அங்கே ஒரு நீண்ட கியூவைக் காணமுடிந்தது. பிரித்தானிய பாஸ்போட் உள்ளவர்களுக்குத் தனியான கருமபீடமும் வெளிநாட்டவர்களுக்குத் தனியான கருமபீடங்களும் இருந்தன. வெளிநாட்டவர்களுக்கான கியூவில் நாங்கள் இணைந்து கொண்டோம். நீண்டு வளைந்து சென்ற அந்தக் கியூ வரிசையில் ஆங்காங்கே அறிவிப்புகள் காணப்பட்டன. நாம் நின்றிருந்த இடத்தில் இன்னும் 45 நிமிடங்கள் வரை கருமபீடத்தை அடையக் காத்திருக்க வேண்டி இருக்கும் என்று எழுதப்பட்டிருந்தது. கியூவில் முன்னேறிச் சென்றால், இன்னுமோர் இடத்தில் 30 நிமிடம்வரை காத்திருக்க வேண்டும் என்ற அறிவிப்பு இருந்தது.









அதனின்றும் முன்னேறி நடந்தால் 15 நிமிடங்கள் காத்திருக்கவேண்டும் என்று எழுதப்பட்டிருந்தது. நேரத்தைப் பொன்னாக மதிப்பவர்களுக்கு அத்தகைய அறிவிப்புகள் தேவைதான்.

வரிசையில் நின்றிருந்த பல வெளிநாட்டு இளந்தலைமுறையினர் தமக்குக் கிடைத்த அந்தப் பொன்னான நேரத்தைப் பிரயோசனப்படுத்திக் கொண்டிருந்தார்கள். ஆம், கையில் புத்தகத்தை வைத்து வாசித்தபடி நின்றிருந்தார்கள். இத்த கைய நேர அறிவுப்புகள் பல இடங்களில் பிரயாணிகளுக்குக் கொடுக்கப்படுவதை பின்னர் இலண்டனில் இருந்த காலகட்டத்தில் நான் பல தடவை அவதானித்திருந்தேன். பஸ்தரிப்பில் நிற்கும்போது குறித்த பஸ் எவ்வளவு நேரத்தில் வரும், புகையிரத நிலையத்தில் நிற்கும்போது குறித்த றெயில் எவ்வளவு நேரத்தில் வரும், என்றெல்லாம் காத்து நிற்கவேண்டிய காலப்பொழுதைத் துல்லியமாக நிமிடங்களில் அறிவித்தல் தருகிறார்கள்.



புத்தகங்களைக் கையில் வைத்து வாசித்துக் கொண்டிருந் தவர்களைப் பார்த்தபோது எனது இளமைப்பருவம் ஞாபகத்தில் வந்தது.

நானும் ஒரு காலத்தில் இப்படிப் புத்தகங்களை வைத்து வாசித்துக்கொண்டிருந்த காலம் ஒன்றிருந்தது. அது அச்சு ஊடகம் முதன்மை பெற்றிருந்த காலம். அந்தக் காலத்தில் பலருக்கு இரசனையைத் தரக்கூடிய முக்கிய ஊடகமாக நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள்தான் விளங்கின. அக்காலத்தில் அடுப்பூதும் மங்கையர்களாக இருந்தவர்கள்கூட 'கல்கி'யின் தொடர் வரலாற்று நாவல்களை வாசித்ததால் சிறந்த வாசகர்களாக மாறினார்களாம்.

அன்று அச்சு ஊடகம் தந்த இரசனையை இன்று ஒலி, ஒளி ஊடகங்களும் இலத்திரனியல் ஊடகங்களும் தரத் தொடங்கிவிட்டன. வாசிப்புப் பழக்கம் அருகிவருவதற்கு இதுவும்

ஒரு காரணமாகிவிட்டது. சிறுவர் முதல் பெரியவர்கள் வரை தினமும் தொலைக்காட்சிப் பெட்டியின் முன் அமர்ந்து இந்திய நாடகங்களை குடும்ப சமேதரராய் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருகாலத்தில் நிலாவைக் காட்டி குழந்தைகளுக்கு சோறூட்டிய பாட்டிமார் குழந்தைகளின் கைகளில் IPad ஐக் கொடுத்து விட்டு நாடகம் பார்த்தபடி சோறு ஊட்டுகிறார்கள். இதுதான் பலவீடுகளில் இன்றைய நடைமுறை. இவையெல்லாம் காலத்தின் கோலம்!

பக்கத்தில் நின்றிருந்த மனைவியிடம் நூல்களை வாசித்துக் கொண்டிருக்கும் அந்த இளசுகளைக்காட்டி, 'இப்படியான நிலைமை எமது நாட்டில் இல்லையே' என ஏக்கத்துடன் கூறினேன். அதற்கு மனைவி கூறினாள், 'எமது நாட்டின் கல்வித் திட்டத்திலேதான்




குறைபாடு இருக்கிறது. எமது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் பரீட்சையை மையமாகக் கொண்டவை. மாணவர்களின் அறிவை விருத்தி செய்யக்கூடிய நிலையில் கல்வித்திட்டம் அமையவில்லை. மாணவர்களின் தேடல் முயற்சிகளுக்கு எங்கள் கல்வித்திட்டத்தில் இடம் மிகக் குறைவாகவே உள்ளது. அவர்கள் எதையும் தேடி

வாசித்து அறிவைப் பெருக்கும் பயிற்சி எமது கல்வித்திட்டத்தில் இல்லை. மேலை நாடுகளில் வாசிப்புப் பழக்கம் சிறுவயதிலேயே ஏற்படுவதற்கு அவர்களது கல்வித்திட்டமே காரணமாக இருக்கிறது' என்றாள். அரச கல்விச்சேவையில் நீண்டகாலம் பணியாற்றிய அவளது அனுபவக் கூற்று இது. இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்போல எனக்குத் தோன்றியது. ஏனெனில் மேலைநாடுகளில் எத்தனையோ விதமான கவனக் குழப்பான்கள் இளைஞர்களுக்கு இருந்தபோதும் அவர்கள் வாசிப்புப் பழக்கத்தைக் கைவிடுவதில்லை.

அப்படியானால் எனது இளமைக் காலத்தில் சரியான கல்வித்திட்டம் இலங்கையில் இருந்ததா? அல்லது வேறு ஊடகங்கள் முக்கியம் பெறாத நிலையில் நாங்கள் புத்தகங்களில் மூழ்கினோமா? எது எப்படியோ, இது சர்ச்சைக்குரிய விடயம்தான்.

நாங்கள் குடிவரவு குடியகல்வு கருமபீடத்தில் எமது பாஸ் போட்டைக் கொடுத்தபொழுது, அங்கே இருந்த உத்தியோகத்தர், ஏன் இலண்டனுக்கு வருகிறீர்கள்? எனக் கேட்டார். 'நாங்கள் ஒரு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வருகிறோம்' எனக்கூறி, உலகத் தமிழியல் மாநாட்டு அமைப்பாளர் எமக்கனுப்பிய கடிதத்தை அவரிடம் காட்டினோம். வேண்டிய பதிவுகளை மேற்கொண்டபின் எம்மை நாட்டின் உள்ளே செல்ல அனுமதித்தார்கள். எவ்விதப் பிரச்சினையும் எமக்கு அங்கு இருக்கவில்லை.

உலகத் தமிழியல் மாநாட்டு அமைப்பாளர்கள் எம்மை விமான நிலையத்துக்கு வந்து அழைத்துச் செல்வதற்கும் மாநாடு நடக்கும் நாட்களில் நாங்கள் தங்கி இருப்பதற்குமான இடவசதி, உணவுவசதி யாவற்றையும் ஏற்பாடு செய்திருந்தனர்.

எனினும் எனது மைத்துனர் சுதாகரன் தனது விருந்தாளியாகவே எம்மை வைத்திருக்க விரும்பினார். மைத்துனரின் தந்தை எஸ். பி. ஐயர் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரியராகக் கடமை புரிந்தவர். 'ஐயர் மாஸ்ரர்' என்ற பெயரில் புகழ்பெற்ற ஆங்கில ஆசிரியராக விளங்கியவர். அவர் எனது



தாயாரது சகோதரராவார். எனது மைத்துனர் 20 வருடங்களுக்கு மேலாக இலண்டனில் குடும்பமாக வாழ்பவர். தனது வீட்டிலிருந்து மாநாட்டுக்குத் தினமும் சென்று வரலாம், அதற்கான சகல ஏற்பாடுகளையும் தான் செய்து விட்டதாகவும் தொலைபேசி மூலமும் மின் அஞ்சல் மூலமும் தெரிவித்திருந்தார். எமக்கும் அது வசதியாகவே இருந்தது.

நாங்கள் விமான நிலையத்திலிருந்து வெளியே வந்தபோது, எனது மைத்துனரின் மனைவி சோபனாவும், அவரது மூத்த மகன் சரணும் எங்களை அழைத்துப்போகக் காரில் வந்திருந்தனர்.

கார் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு அவர்களது வீட்டைநோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது அவர்கள் இலங்கைப் புதினங்கள் பற்றி அறிய ஆவலாக பலதும் பத்தும் பேசிக்கொண்டே வந்தார்கள். ஆனாலும் எனது கவனமெல்லாம் தெருவின் இருமருங்கிலும் காணப்பட்ட வீடுகளிலும், மாடிக்கட்டிடங்களிலும் கடைத் தெருக்களிலுமே பதிந்திருந்தது.

எங்கு பார்த்தாலும் பழைமை பேணும் கட்டிடங்கள்! உயரமான கட்டிடங்களை அதிகம் காணமுடியவில்லை. செங்கற்களால் அமைந்த கட்டிடங்களுக்குச் சாந்துகூடப் பூசப்பட்டிருக்கவில்லை. வர்ணங்கள் பூசப்படவுமில்லை. பலநூறு வருடங்கள் பழைமைவாய்ந்த ஒரு

நகருக்குள் சென்று கொண்டிருப்பதான ஓர் உணர்வுதான் ஏற்பட்டது. உலகின் பெருமைமிக்க வளர்ச்சியுற்ற நாடாக விளங்குகின்ற இலண்டனா இது! வீடுகளின் முன்புறத்தை மாற்றி அமைத்து புது மெருகூட்ட அங்குள்ள நகரசபை அனுமதிப்பதில்லையாம். ஒரு வீடு கட்டும்போது அந்த வீட்டின் செங்கல்லின் நிறத்தைக்கூட அந்தப்பகுதி நகரசபைதான் தீர்மானிக்கும். இதனால் ஒரு வீட்டின் வெளிப்புறத் தோற்றத்திலிருந்து அருகே உள்ள வீடுகளின் வெளிப்புறத் தோற்றங்கள் மாறுபடுவதில்லை. சில வீடுகளின் முன்னால் 1600, 1700, 1800 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்ட வீடு என்று பெருமையாகக் குறிப்பிட்டிருப்பார்கள். இங்கு நகரசபை அலுவலங்களில் ஒருவர் குடியிருக்கும் வீட்டில் இதுவரை யார் யார் குடியிருந்தார்கள் என்ற தகவல்களையும் அறிந்து கொள்ளமுடியும் என்று கூறுகிறார்கள். தாங்கள் பழம்பெரும் நாகரிகத்தின் சொந்தக்காரர் என்பதை நிலை நாட்டுவதில் அங்குள்ள மக்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். அரசாங்கமும் கண்ணும் கருத்துமாக இருக்கிறது. தெருக்களின் இருமருங்கிலும் பச்சைப் பசேலென பசுமையாக இருந்தது.

இன்று உலகின் பல்வேறு நாடுகளில் அகலமான பல ‘லேன்’களைக் கொண்ட தெருக்களைக் காணமுடிகிறது. எங்களது நாட்டின் நகர்ப்புறங்களில் இப்போது அகலமான தெருக்கள் வந்துவிட்டன. ஆனால் இலண்டனில் உள்ள தெருக்கள் பெரும்பாலும் இரண்டு ‘லேன்’கள் கொண்டவையாகவே இருக்கின்றன. இந்தத் தெருக்களில் இரண்டு பஸ்கள் எதிரும் புதிருமாக வரும்போது மிக நெருக்கமாகச் செல்வதை அவதானிக்க முடிகிறது.

இங்கு அனேகமான வீடுகளில் கார்களை நிறுத்திவைக்க ‘கராஜ்’ இருப்பதில்லை. வீட்டுச் சொந்தக்காரர்கள் தத்தம் வீடுகளின் முன்னால் வெளிப்புறத்தில் கார்களை நிறுத்திவைக்கிறார்கள். அந்த இடம் அவர்களுக்கென அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட இடம் என்கிறார்கள். தெருவின் இருமருங்கிலும் வீடுகளின் முன்னால் கார்கள் நிறுத்தப்படுவதால் தெருவும் ஒடுக்கமானதாகிவிடுகிறது.

இன்று உலகில் உள்ள தொண்ணூறு வீதமான நாடுகளில் முடியாட்சி ஒழிந்து மக்களாட்சியே நடைபெறுகிறது. ஆனால்



பழைமை பேணும் பிரித்தானியாவில் இன்னும் அரசிதான் நாட்டின் தலைவராக இருக்கிறார். இதில் கவனிக்கவேண்டிய விடயம் என்னவெனில் இங்கு ஒரு பாராளுமன்றமும் இருக்கிறது. பிரதமராக டேவிட் கமரூன் விளங்குகிறார். 646 அங்கத்த வர்களைக் கொண்ட கீழ்ச்சபையும் 670 பேர்களுடனான பிரபுக்கள் சபை என்னும் மேல் சபையும் இருக்கிறது. ஆனாலும் பரம்பரை பரம்பரையாக ஆட்சி செய்துவரும் மன்னர் அல்லது மகாராணியே ஆட்சியைத் தொடர்ந்து வைத்துள்ளார். இதற்குக் காரணம் பாரம்பரியத்தைப் பேண விரும்பும் ஆங்கிலேயர்கள் இன்னும் அந்தப் பாரம்பரியத்தில் இருக்கவேண்டும் என விரும்புவதுதான்.

பழைமை நிறைந்த கட்டடங்களைப் பார்த்துக்கொண்டு வந்த எனக்கு, இதே பிரித்தானியா நாட்டைச் சேர்ந்த ஆங்கிலேயரால் ஆக்கப்பட்ட அவுஸ்திரேலிய நாட்டின் தெருக்களும் வீடுகளும் அவற்றின் தோற்றமும் ஞாபகத்தில் வந்தன. இன்றைய அவுஸ்திரேலியாவின் வரலாறு ஏறத்தாழ 200 வருடங்களினைக்கொண்டது. ஆங்கிலேயர்கள் தமது நாட்டில் குற்றாவாளிகளாகக் காணும் கைதிகளை சிறைப்படுத்தவே இக்கண்டத்தைப் பயன்படுத்தினார்கள். தமது நாட்டில் பாரிய குற்றங்களைப் புரிந்தவர்களை கப்பல் மூலம் தூரத்தே இருக்கும் அவுஸ்திரேலியாவுக்கு ஏற்றிவந்து அங்கு கைதிகளாக்கினர். சிறைக்கைதிகளாலான வெள்ளையர்களால் உருவாக்கப்பட்டதே இன்றைய அவுஸ்திரேலியா. ஆனால் அவுஸ்திரேலியாவில் உள்ள

வீடுகள் தெருக்கள் யாவும் நவீன பாணியில் அமைந்துள்ளன. அங்கு பல லேன்களைக்கொண்ட அகலமான தெருக்களையும் காணமுடியும். தமது நாட்டில் பழைமைபேணும் வெள்ளையர்கள் தாம் உருவாக்கிய நாடான அவுஸ்திரேலியாவில் அந்தப் பழைமைபேணும் பாரம்பரியத்தை, கலாசாரத்தை ஏனோ கைக் கொள்ளவில்லை.

19ஆம் நூற்றாண்டில் மாபெரும் சாம்ராஜ்யமாக இருந்த பிரித்தானியா 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து படிப்படியாகத் தனது ஆதிக்கத்தை இழக்கத் தொடங்கியது. பிரித்தானிய ஆட்சியின்கீழ் இருந்த நாடுகளில் ஏற்பட்ட சுதந்திரதாகம், சுதந்திர விடுதலைப்போராட்டமாக மாறியபோது பிரித்தானியாவுக்கு அந்நாடுகளுக்கு சுதந்திரம் அளிப்பதைத் தவிர வேறுவழி இருக்கவில்லை.

பாராளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறையை உலகத்துக்கு வழங்கிய பெருமை பிரித்தானியாவுக்குத்தான் உண்டு. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தை உலக நாடுகளில் உள்ள பாராளு மன்றங்களுக்கெல்லாம் தாய் – Mother of Parliament என்று கூறுவார்கள்.

பிரித்தானியாவின் மொத்தச் சனத் தொகையில் 90 வீதமானோர் ஆங்கிலேயர்கள். மிகுதி பத்து வீதமானோரில் ஆபிரிக்க நாட்டு வம்சாவளியினரே அதிகம். அடுத்தபடியாக இந்திய நாட்டவர்கள் இருக்கிறார்கள். அடுத்ததாகப் பாகிஸ்தான் - பங்களதேஷ் இனத்தவர்களும் மிகுதியாக இதர கலப்பு இனத்தவர்களும் இருக்கிறார்கள்.

பிரித்தானியா இரண்டு உலக மகா யுத்தங்களைச் சந்தித்த நாடு. இந்த உலக யுத்தங்களைத் தொடர்ந்து ஏற்பட்ட நிலைமையை பிரித்தானியாவால் ஈடு செய்ய முடியவில்லை. ஆனாலும் காலப் போக்கில் தன்னைப் புனரமைப்புச் செய்து சாதனை படைத்துள்ளது. ஐரோப்பிய நாடுகளுக்கெல்லாம் இன்று முன்னணியில் திகழும் நாடாகவும் சகல செல்வங்களும் கொண்ட நாடாகவும் தன்னை மீள் கட்டமைப்புச் செய்துகொண்டது.

பிரித்தானியா இன்று ஐ.நா. பாதுகாப்புச் சபையின் பலம் பொருந்திய அதிகார வலுப்பெற்ற 'ஸுப்பர் பவர்' கொண்ட நாடாக அங்கத்துவம் பெற்றுள்ளது. இந்த வகையில் ஏனைய பலம்பொருந்திய நாடுகளாக அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், சீனா ஆகிய நாடுகள் விளங்குகின்றன. 'கொம்மன் வெல்த்', 'நேற்றோ' அமைப்புகளை உருவாக்கிய பெருமையும் பிரித்தானியாவுக்கே உரியது.

ஆசிய நாட்டவர்களைப் பொறுத்தவரை இலண்டன் மிக நெருங்கிய அறிமுகத்தைக் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம், உலக முக்கியதரம் வாய்ந்த மாநாடுகள் இங்கு நடைபெறுகின்றன. உலக முக்கிய தலைவர்கள் இங்கு கூடுகிறார்கள். உலகத் தலைநகர்களுடன் போட்டிபோட்டு பல துறைகளிலும் இலண்டன் முன்னணி வகிக்கிறது. அதனால் இலண்டனை ஒரு தனிநாடாகவே பலர் கருதுகிறார்கள். பலர் பிரித்தானியா என்ற பெயரைச் சொல்வதில்லை. இலண்டன் என்றே கூறுகிறார்கள்.

இன்று உலகில் தொலைத் தொடர்பு சேவைகள் பெரிதும் விரிவடைந்து விட்டன. அனேகமானோர் இன்று கையடக்கத் தொலைபேசிகளைப் பாவிக்கத் தொடங்கிவிட்டனர். எந்த நேரத்திலும் எந்த இடத்திலிருந்தும் உலகில் எந்த மூலையில் உள்ளவர்களுடனும் தொடர்பு கொள்ளக்கூடிய வசதிகள் வந்து விட்டன. இன்று கைத்தொலைபேசி பாவிக்காதவர்கள் இல்லை என்று எண்ணுமளவுக்கு சிறுவர்களின் கைகளிலேகூடக் கைத் தொலைபேசிகள் இருக்கின்றன. இலண்டன் போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள குடும்பங்களில் குடும்ப அங்கத்தவர்கள் அத்தனை பேரின் கைகளிலும் கைத்தொலைபேசிகள் இருக்கின்றன. ஆனாலும் இலண்டன் தெருக்களின் முக்கிய இடங்களில் பழைய பாணியில் அமைந்த மரப்பலகையினால் செய்யப்பட்ட தொலைபேசிச் சாவடிகளைப் (Telephone Booths) பார்த்தபோது நான் பெரிதும் ஆச்சரியமடைந்தேன். இந்தச் சாவடிகளை அவர்கள் இன்னும் தெருக்களின் ஓரங்களில் விட்டு வைத்திருப்பது தமது பழைமையைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஒரே காரணத்தினாலேதான். இந்தச் சாவடிகள் சிகப்பு வர்ணம் பூசப்பட்டு காண்போரின் காட்சிப்பொருளாகின்றன.

பிரித்தானியாவில் நிலவும் முடியாட்சியை அதாவது பரம்பரை பரம்பரையாக ஆட்சி செய்துவரும் மன்னர் அல்லது மகாராணி ஆட்சியைத் தொடர்ந்தும் வைத்திருப்பதா என்ற சர்ச்சை பிரித்தானிய வரலாற்றில் அடிக்கடி ஏற்படும் ஒரு நிகழ்வாகும். திடீரென இப்பிரச்சினை எரியும் பிரச்சினையாக மாறும். ஆனால் சில நாட்களில் அது தணிந்து விடும். பிரித்தானியாவில் இருக்கும் இரு பெரும் அரசியல் கட்சிகளான தொழிற் கட்சியும் (Labour) கன்சர்வேற்றிவ் (Conservative) கட்சியும் பாரம்பரியத்தை விரும்பும் பிரித்தானிய மக்களுக்கு மாறாக முடியாட்சியில் கைவைக்கத் தயங்குகின்றன. - அதாவது நாட்டுக்குப் பெருமை தரும் கிரீடத்தைத் தொடத் தயங்குகிறார்கள். இதுவரையில் 52 பிரதமர்கள் பிரித்தானியாவில் பதவி வகித்துள்ளார்கள். இன்றைய பிரதமராக இருப்பவர் டேவிட் கமரூன். இவர்கள் எவருமே முடியாட்சியில் கைவைக்கவில்லை.

பிரித்தானிய அரசியல் வரலாற்றில் ஒரேயொருவர் பெண் பிரதமராக இருந்திருக்கிறார் மார்க்கிரட் தாச்சர். இவர் போக்லான்ட் Falkland யுத்தத்தை நடத்தியதால் Iorn Lady என்று பெருமையுடன் அழைக்கப்பட்டார்.

உலகில் முதன்முதலாக தபால் சேவையை அறிமுகம் செய்தவர்கள் பிரித்தானியர்கள்தான். இங்கிலாந்தில் 1712ஆம் ஆண்டில் சான்குகார் என்ற இடத்தில் முதலாவது தபால்நிலையம் அமைக்கப்பட்டது. 300 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமை வாய்ந்த இந்தத் தபால் நிலையத்தில் இருந்து ஆரம்ப காலத்தில் நடந்து சென்றுதான் தபாற்காரர்கள் தபால்களை விநியோகித்தார்களாம். பின்னர் பார்சல்களை அனுப்பும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து குதிரைகளில் சென்று விநியோக முறை ஆரம்பிக்கப்பட்டதாம். இதற்காகத் தபால் முத்திரைகளை அறி முகப்படுத்தியவர்களும் பிரித்தானியர்கள்தான். இந்தத் தபால் முத்திரைகளில் நாட்டின் பெயர் இருப்பதில்லை. பிரித்தானிய மன்னர், அல்லது மகாராணியின் தலைச் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கும். 1840இல் முதன் முதலில் ஜோர்ஜ் மன்னரின் தலைச்சின்னத்துடன் முத்திரை வெளியிடப்பட்டதாம். இன்றும் இலங்கை உட்பட

அநேக நாடுகளில் உள்ள காணிகளின் தாய் உறுதிகளில் ஜோர்ஜ் மன்னரின் தலைச்சின்னம் பொறிக்கப்பட்ட முத்திரைகள் ஒட்டப்பட்டிருப்பதைக் காணலாம். இந்தப் பாரம்பரியத்தை பிரித்தானியாவின் போக்கு வரத்துக்குப் பொறுப்பான 'றோயல் மெயில்' ஸ்தாபனம் நீக்கிவிட்டதாகக் கூறுகிறார்கள். பழைமை விரும்பிகள் இந்தத் தலைச்சின்னம் நீக்கப்பட்டதற்கு இப்போது எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கிலாந்தில் உள்ளவர்கள் எந்த அளவிற்குப் பழைமை பேணுகிறார்கள் என்பதற்கு, அங்கிருந்த காலத்தில் என்னால் அவதானிக்கப்பட்ட இன்னுமொரு விடயத்தையும் இங்கு பதிவு செய்யலாம். இங்குள்ள தெருக்களில் ஓடும்பஸ்களில் அநேகமானவை இரட்டைத்தட்டு சிவப்புநிற பஸ்கள். பழைய காலத்தில் பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போது ஒரு இடத்தில் இறங்கவேண்டும் என்றால் அந்த பஸ்ஸில் கட்டியிருக்கும் ஒரு மணியைப்பிடித்து இழுப்பார்கள், சாரதி பஸ்ஸை நிறுத்துவார். அதே போன்று, இப்பொழுதும் பஸ்ஸை நிறுத்த அழுத்தும் 'சுவிட்'சில் இருந்து அதே பழைய மணியோசை வருகிறது. இப்படியாக ஒவ்வொரு விடயத்திலும் மிகவும் நுணுக்கமாக பழைமையைப் பேணிக் கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் பயணஞ் செய்த தெருவின் எதிர்ப்புறமாக பழைய மொடல் '∴பியற்' கார் ஒன்று வந்துகொண்டிருந்தது. இந்த மொடல்கார்களை நான் எனது இளமைப் பருவத்தில் 65 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் பார்த்திருக்கிறேன், இங்கு மீண்டும் பார்க்கிறேன். இந்தக் கார்களின் வடிவமைப்பிலும் பெரிய மாற்றம் எதுவும் நடந்திருப்பதாக எனக்குத் தோன்ற வில்லை. 'ராக்ஸி'- வாடகைக்கார் என்ற வாசகம் அந்தக்காரில் பொறிக்கப்பட்டிருந்தது. இத்தகைய கறுப்பு நிறத்தில் அமைந்த பழைய மொடல் '∴பியற்' வாடகைக் கார்கள் பல இலண்டன் தெருக்களில் ஓடிக்கொண்டிருக்கின்றன. உல்லாசப் பயணிகள் அநேகமாக இந்தக் கார்களைத்தான் வாடகைக்கு அமர்த்துகிறார்கள்.

நாங்கள் மைத்துனரின் இல்லத்திற்குச் சென்றபோது, மைத்துனரும் அவரது பிள்ளைகளும் எம்மைக் குதூகலமாக வரவேற்றார்கள். பாரம்பரியம் பேணும் மோஸ்தரில் அமைந்த அவர்களது இல்லத்தில் களைப்பாற வெந்நீரில் குளித்தோம். மைத்துனரும் பிள்ளைகளும் எமக்குத் தமது வீட்டின் சகல பகுதிகளையும் மகிழ்ச்சியுடன் சுற்றிக் காண்பித்தார்கள். அவர்களது பூசை அறைக்குள் நுழைந்தபோது அங்கு ஓர் அற்புதம் நிகழ்ந்து கொண்டிருப்பதைக் கண்டு அதிசயித்தேன். என் வாழ்நாளில் அங்கேதான் அப்படியொரு அதிசயத்தைக் கண்டேன்.

❍ ❍ ❍

# 3

# உலகத் தமிழியல் ஆய்வு மாநாடு - 2013



சென்ற அத்தியாயத்தின் இறுதிப்பகுதியில் எனது மைத்துனரது வீட்டின் பூசை அறைக்குள் நுழைந்தபோது அங்கு ஓர் அற்புதம் நிகழ்ந்து கொண்டிருப்பதைக் கண்டு நான் அதிசயித்தது பற்றிக் குறிப்பிட்டிருந்தேன்.

அவர்களுடைய பூசை அறையில் சுவாமி படங்களுக்கு மத்தியில் சத்தியசாயி பாபாவின் படம் காணப்பட்டது. அந்தப் படத்துக்கு அணியப் பட்டிருந்த மல்லிகைச் சரம் அறையின் மத்திய பகுதிவரை நிலத்திலே படர்ந்திருந்தது.

'ஏன் இத்தகைய நீண்ட மாலையை படத் துக்குச் சாத்துகிறீர்கள்?' என மைத்துனரின் மனைவி சோபனாவிடம் கேட்டேன்.

'நாங்கள் சிறிய மாலையாகத்தான் சாத்து கிறோம். ஆனால் அவ்வாறு அணியும் மாலைகள் தினம் தினம் வளர்ந்து பெரிதாகி நிலத்திலே படர்கிறது. மாதாமாதம் அவ்வாறு வளர்ந்து வரும் மாலைகளைக் கழற்றி மாற்றுகிறோம்' எனக்கூறி அவ்வாறு முன்னர் வளர்ந்த மாலைகளை ஒரு பெட்டியில் சேகரித்து வைத்திருந்ததையும் எடுத்துக் காட்டினார்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது, நம்புவதற்கும் முடியவில்லை.


எனது மைத்துனரின் தந்தையார் எஸ்.பி.ஐயர் (எனது மாமா) அவர்கள் ஒரு சத்தியபாபா பக்தராக இருந்தவர். அவர் அமரராகிவிட்டார். அவரது மகனும் குடும்பத்தினரும் அவரது சத்திய பாபா வழிபாட்டைத் தொடர்ந்து மேற்கொள்கின்றனர். மைத்துனர், சாயிபாபா பஜனையில் குடும்பத்தினருடன் இணைந்து ஈடுபடுவார்.

மாமா கொழும்பில் இருந்த காலத்திலும் சாயிபாபா பஜனைகளில் தீவிரமாக ஈடுபட்டவர். சத்திய பாபாவின் இருப்பிடமான புட்டப்பத்திக்குச் சென்று பாபாவின் தரிசனம் பெற்றவர். அக்காலகட்டத்தில் அவர் எமக்கும் பாபாவின் மகிமைகளைப்பற்றிக் கூறி எம்மையும் புட்டப்பத்திக்குச் சென்று பாபாவின் தரிசனத்தைப் பெறவேண்டும் என அறிவுரை கூறினார். அதற்கமைய நானும் எனது தம்பியும் குடும்பமாக 1995ல் புட்டபத்திக்குச் சென்றோம். அக்காலத்தில் வருடா வருடம் புட்டப்பத்தி யாத்திரையை முன்னாள் பத்திராதிபர் எஸ்.டி. சிவநாயகம் அவர்கள் ஒழுங்குசெய்து வந்தார். அவர் ஒழுங்கு செய்த யாத்திரையில் நாங்கள் சேர்ந்துகொண்டோம். 102 பேர்வரை அந்த யாத்திரையில் கலந்திருந்தனர். புட்டப்பத்தியில் நாங்கள் பாபாவைத் தரிசித்தபோது எனது மனைவிக்கு பாபாவின் ஆசிகிடைத்தது. பாபா எனது மனைவியிடம் எங்கிருந்து வந்தீர்கள் எனக்கேட்டு, கைகளை உயர்த்தி ஆசி வழங்கியதோடு விபூதி பிரசாதமும் வழங்கினார்.

பாபா, பக்தர்கள் மத்தியில் வலம் வந்து கைகளை உயர்த்தி விபூதி, இனிப்பு வகைகளை வரவழைத்து பக்தர்களுக்கு வழங்குவது வழக்கம்.

என்னைப் பொறுத்தவரை பாபா கையை உயர்த்தி விபூதி வரவழைப்பதெல்லாம் ஒரு சித்து விளையாட்டு என்றே நான் நினைத்தேன்.

ஆனால் இப்போது பாபா சமாதி அடைந்துவிட்டாரே. எப்படி அவருக்கு அணியும் மாலை வளர்கிறது?




அன்று இரவு நித்திரைக்குப் போகுமுன் அவர்களது சுவாமி அறைக்குச் சென்று பாபாவின் மாலை வளர்ந்து நிலத்திலே படர்ந்திருக்கும் அளவில் ஒருவருக்கும் தெரியாமல் பேனாவால் ஓர் அடையாளம் இட்டுவிட்டு வந்து படுத்துக்கொண்டேன்.

மறுநாள் காலை சுவாமி அறைக்குச் சென்று பார்த்தபோது, என்ன அதிசயம்! மாலை முன்னரைவிட அரை அடி தூரம் வரை வளர்ந்திருந்தது.

பாபாவின் படத்தை நிமிர்ந்து பார்த்தேன். புன்னகை சிந்தும் அவரது முகத்தில் தெய்வீக ஒளிவீசிக்கொண்டிருந்தது. என்ன என்னைச் சோதித்துப் பார்க்கிறாயா? என அவரது கண்கள் என்னிடம் கேட்பது போலிருந்தது.

அவரது அபயவரதம் என்னை ஆசீர் வதித்தது.

புலம்பெயர்ந்து வாழும் நம்மவர்கள், அவர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் தமது ஆன்மீகத் தேவைகளை நிறைவேற்றுவதில் மிகவும் அக்கறையோடு இருப்பார்கள் என்பதை நான் சென்றுவந்த நாடுகள் பல வற்றில் அவதானித்திருக்கிறேன். அவர்கள் முதலில் கூட்டாகச் சேர்ந்து கோயில்களை அமைப்பார்கள். இலண்டனில் இப்போது பன்னிரண்டு அம்மன் கோயில்களும், ஏழு பிள்ளையார் கோயில்களும், ஏழு முருகன் கோயில்களும், ஆறு சிவன் கோயில்களும் ஒரு ஐயப்பன் கோயிலுமாக முப்பத்து மூன்று கோயில்கள் இருக்கின்றன.




கோயில்களைவிட ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அமைப்புகளும் இருக்கின்றன. ‘சாயிபாபா இயக்கம்’, ‘ஹரேகிருஷ்ணா இயக்கம்’, ‘குருமகராஜ் இயக்கம்,’ ‘சின்மியா மிஷன்’ ஆகியன நமது மக்களின் ஆன்ம ஈடேற்றத்துக்கு உதவுவதோடு பிறமக்களினதும் குறிப்பாக இலண்டன்வாழ் ஆங்கிலேயரது ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் இந்த அமைப்புகள் உதவுகின்றன. இலண்டனில் நாங்கள் இருந்தகாலத்தில் இத்தகைய பல அமைப்புகள் பற்றி அறிந்து கொண்டோம். சில கோவில்களுக்கும் சாயிபாபா இயக்க அமைப்பு ஒன்றிற்கும் சென்று அங்குள்ள வழிபாட்டு முறைகளை அவதானித்தோம்.

எங்களது இந்த இலண்டன் பயணத்தின் முக்கிய நோக்கம் அங்கு நடைபெறும் உலகத்தமிழியல் மாநாட்டில் கலந்து

கொள்வதுதான் என்பதை இக் கட்டுரைத் தொடரின் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

இந்த இடத்தில் பிரித்தானியாவில் நிலவும் காலநிலை பற்றியும் தெரிந்து கொள்வது அவசியமாகிறது. இங்கு நான்கு பருவ காலங்கள் நிலவும். அவையாவன வசந்த காலம், கோடை காலம், இளவேனிற் காலம், குளிர் காலம் என்பனவாம்.

டிசம்பர் நடுப் பகுதியிலிருந்து மார்ச் நடுப்பகுதிவரை இங்கு குளிர்காலமாகும். குளிர் காலத்தில் இங்கு கடுங்குளிர் நிலவும். வெப்ப நிலை சில நாட்களில் பூஜ்யம் 'செல்சியஸ்'க்கும் கீழே இறங்கிவிடும். இரவில் படுக்கும்போது மெத்தையில் படுத்துக் கொண்டு இன்னுமொரு குளிர்தாங்கும் மெத்தையால் போர்த்துக் கொள்ள வேண்டியிருக்கும். மாலை வேளைகளில் மூன்று மணிக்கே படிப்படியாக இருள் கௌவத் தொடங்கி விடும். மறுநாள் காலை எட்டு மணிக்குத்தான் பொழுது விடியும். இக்காலத்தில் தினமும் பதினைந்து மணித்தியாலங்களுக்குமேல் இருள் மண்டியிருக்கும். நாடே சோபை இழந்துவிடும்.

இந்தக் காலநிலையில் இலங்கை இந்தியா போன்ற நாடுகளிலிலிருந்து பிரித்தானியாவைச் சுற்றிப்பார்க்க வருவது உசிதமல்ல. இக் காலத்தில் விருந்தாளிகள் வீட்டுக்கு வந்துவிட்டால் அவர்கள் குளிர் தாங்கக்கூடிய அளவுக்கு வீட்டைச் சூடாக வைத்திருக்க எரிவாயு அல்லது மின்சாரத்தினால் இயங்கும் சூடாக்கிகள் வீட்டில் எந்த நேரமும் இயங்கிக் கொண்டிருக்க வேண்டும். பிரித்தானியாவில் எரிவாயு, மின்சாரத்துக்கான கட்டணம் மிகவும் அதிகம்.

இக்காலத்தில் அணிந்துகொள்ள பிரத்தியேகமான உடைகள் வேண்டும். உடைக்கு மேல் உடையணிந்து அதற்குமேல் கம்பளிச் சட்டை அணிந்து அதற்கும்மேல் 'ஓவர்கோற்' அணிய வேண்டும். கைகளையும் விரல்களையும் குளிரிலிந்து பாதுகாக்க கையுறை அணிந்து கொள்ளவேண்டும். இவையெல்லாம் மனித இயக்கத்தையே குறைத்துவிடும்; வாழ்க்கையே வெறுத்துவிடும்.

இங்கு கோடைகாலம் மே மாதத்தில் தொடங்கி ஆகஸ்ட் மாதம்வரை நீடிக்கும். கோடைகாலம் பிறந்துவிட்டால் இங்குள்ள




இலண்டன் பல்கலைக்கழக வளாக
முன்றலில் திருவள்ளுவர் சிலை



மக்களுக்கு குதூகலம் பிறந்து விடும். மக்கள் இக்காலத்திலேதான் வெளியிடங்களுக்கு அதிகமாகச் செல்வார்கள். சுற்றுலா மற்றும் கடற்கரைக்குச் செல்லுதல் போன்ற பொழுது போக்குகளில் ஈடுபடுவார்கள். கிரிக்கட், கால்பந்து, பாஸ்கற் போல், டெனிஸ், நீர்ச்சறுக்கல், போன்ற விளையாட்டுகளில் ஈடுபடுவார்கள்.

பாடசாலைகள் ஜூலை மாத மத்தியல் விடுமுறை விடுவார்கள். பாடசாலை மாணவர்களுக்கும் இது குதூகலமான காலம்தான்.

காலநிலை நன்றாக இருக்கும். காலை ஐந்து மணிமுதல் இரவு பத்து மணிவரை வெளிச்சம் இருக்கும். நாங்கள் இலண்டன் செல்வதற்கு இரண்டு மாதத்திற்கு முன்னர் 2013ஜூலை மாதத்தில் 32 டிகிரி செல்சியஸ் அளவுக்கு வெயில் சுட்டெரித்ததாக அறிய முடிகிறது. வில்லியம் ஷேக்ஸ்பியர் 'எமிட் சம்மர்நைட் டிரீம்' என்ற நாடகத்தை கோடை உச்சம்பெற்ற, வருடத்தின் மிகவும் இரவு நேரம் குறைந்த காலத்தில் அரங்கேற்றினார் என்பதையும் இங்கு குறிப்பிடலாம்.

இந்தக் கோடைகாலத்தில் பலர் தமது பழைமை வாய்ந்த கார்களில் இலண்டன் வீதிகளில் பவனி வருவார்கள். இதன் ஓர்அங்கமாக, இத்தகைய கார்கள் வைத்திருப்பவர்கள் ஒருநாள் 'அன்ரீக் கார் பவனி' வருவார்கள். இந்தக்கார் பவனி நாங்கள் இலண்டனில் இருந்த காலத்தில் ஆகஸ்ட் 23ஆம் திகதி நடைபெற்றது. அடுத்த வருடம் இந்தக் கார்பவனித் திருவிழா 2014

ஆகஸ்ட் மாதத்தில் இடம்பெறும் என்றும் அறிவித்துள்ளார்கள். இந்தக்கார் வைத்திருப்பவர்கள் பெரும் செலவில் இக்கார்களைப் பராமரித்து வருகிறார்கள் எனவும் அறிய முடிகிறது.

இக்கோடை காலத்திலேதான் இலண்டனில் இடம்பெறும் உலகம் தழுவிய மாநாடுகள் நடைபெறுவது வழக்கம். இப்படியாக இலண்டன் மாநகர் மகிழ்ச்சியில் திளைத்திருந்த காலகட்டத்திலேதான் நாம் சென்றிருந்த உலகத் தமிழியல் ஆய்வு மாநாடும் நடைபெற்றது.

இந்த மாநாடு நடைபெறும் நான்கு நாட்களும் எம்மை அந்த மாநாட்டுக்கு அழைத்துப் போகவென மைத்துனர் லீவு எடுத்திருந்தார். எமக்கு அது சங்கடமாக இருந்தது. ஏனெனில் இலண்டனில் நாங்கள் ஒரு மாதகாலம் தங்கியிருந்து இடங்களைச் சுற்றிப்பார்க்க வேண்டும். இந்த ஒருமாத காலம் அவர் லீவு எடுப்பதும் எம்மோடு வருவதும் சாத்தியமில்லை. அதற்கான ஒரு மாற்றுவழி எமக்குத் தென்பட்டது. அவரது பிள்ளைகளுக்கு அது பாடசாலை விடுமுறைக்காலம். ‘பிள்ளைகளில் ஒருவரை எமக்கு வழிகாட்டியாக அனுப்புங்கள். நாங்கள் சமாளித்துக் கொள்வோம்’ என்று மைத்துனரிடம் கூறினேன். அதற்கமைய அவரது மகள் சந்தியா நாங்கள் இலண்டனில் இருக்கும் காலம்வரை எமக்கு வழிகாட்டியாக அமைந்தாள்.

முதல் தடவையாக இலண்டன் மாநகரில் இடம்பெற்ற இந்த மாநாடு உலகப் புகழ்பெற்ற இலண்டன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இந்தப் பல்கலைக்கழகம் மாணவர் தொகை அடிப்படையில் ஐக்கிய இராச்சியத்தின் மிகப் பெரிய பல்கலைக் கழகமாகும். பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இங்கு கல்வி பயில்கிறார்கள் என அறிய முடிகிறது. இந்தப் பல்கலைக்கழகம் பல பீடங்கள் கொண்ட - பல வளாகங்கள் கொண்ட மிகப்பெரிய பல்கலைக் கழகமாகும். இப்பல்கலைக்கழகம் 1836ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது. காலத்துக்குக் காலம் பல்வேறு பீடங்கள் இணைக்கப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்டது. எங்கள் நாட்டவர்களில், பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் சி. பத்மநாதன், பேராசிரியர்




**கட்டுரையாளரும் பாரியாரும் மாநாட்டு மண்டபத்தின் முன்னால்**

ஆ. கந்தையா ஆகியோர் இந்தப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்கள். சுவாமி விபுலானந்தர் 1920இல் இந்தப் பல்கலைக்கழகம் நடத்திய பி.எஸ்.ஸி. தேர்வில் சித்தியடைந்தவர். இங்கு மாநாடு நடைபெற்ற காலகட்டத்தில் என்னைச் சந்தித்த எழுத்தாளர் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் அவர்கள் தானும் இந்தப் பல் கலைக்கழகத்தில் கல்வி கற்றதாகக் கூறினார். ஆசிய ஆபிரிக்க மத்தியகிழக்கு நாடுகளுக்கான கல்விக்கான உலகின் முதல் தரமான பல்கலைக் கழகமாக விளங்கும் இந்தப் பல்கலைக்கழகம் பிரித்தானியாவின் அதியுயர்ந்த பல்கலைக்கழகமாகவும் விளங்குகிறது.

இந்தப் பல்கலைக்கழகத்தின் ஒரு பீடமாக அமைந்திருப்பது S.O.A.S (School of Oriental and Affrica Studies) என்ற பகுதியாகும். இங்குதான் இந்த உலகத்தமிழியல் மாநாடு நடைபெற்றது.

இந்தப் பீடத்தின் முன்பாக எமது தமிழ்ப்பெரும் புலவர் திருவள்ளுவரின் பெரிய சிலை ஒன்றை அமைத்திருக்கிறார்கள்.

அதனைப் பார்த்தபோது எமக்குப் பெருமையாக இருந்தது. எம்மை அங்கு அழைத்துச் சென்ற எமது மைத்துனரின் மகள் சந்தியாவுக்கு திருவள்ளுவர் பற்றியும் திருக்குறள் பற்றியும் விளக்கம்கொடுத்து அவர் இயற்றிய திருக்குறள் உலகின் 90 மொழிகளில் இதுவரை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்ற தகவலையும், 2500 வருடங்கள் பழமை வாய்ந்த மொழியின் சொந்தக்காரர் நாங்கள் என்பதையும் கூறி விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தார் என் மனைவி.

அவள் ஆச்சரியத்தில் ஆழ்ந்துவிட்டாள். அவளது ஆச்சரியத்தை அதிகரிக்கும் வகையில், 'எமது தமிழ்ப்புலவர்களில் ஒருவரான கணியன் பூங்குன்றன் எழுதிய 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற வாசகம் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான மண்டபத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய பெருமைமிக்க மொழியின் சொந்தக்காரர் நாங்கள்' என்பதனையும் நான் கூறினேன்.

பதினைந்து வயது நிரம்பிய அவள் ஒரு பாடசாலை மாணவி. அவள் பிறந்ததிலிருந்து இலண்டனிலேயே இருக்கிறாள். எக்காலத்திலும் இலங்கைக்கு வந்தவலல்லள். இவள் போன்று எமது இளந்தலைமுறைகள் தமிழின் பெருமை தெரியாது வளரவேண்டிய சூழலில் இருக்கிறார்கள் என்பதை நினைத்தபோது எனக்கு மனதிலே உறுத்தலாக இருந்தது. சந்தியா நாம் கூறுபவற்றை ஆச்சரியம் மேலிடக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவளுடைய ஆச்சரியத்தை அதிகரிக்கும் வகையில் நான் மேலும் ஒரு தகவலைக் கூறினேன் 'உலகில் முதலில் தோன்றிய மொழி தமிழ் மொழி. உலகின் மூத்த மொழி தமிழ் மொழி. மனித இனம் இந்த உலகில் தோன்றியபோது அந்த மனிதன் பேசிய மொழி தமிழ் மொழி. இதனை அமெரிக்காவின் மிகப்பெரும் மொழி ஆராய்ச்சி வல்லுனரான அலெக்ஸ் கொலியர் (ALEX COLLIER) நிரூபித்து அறிஞர்கள் மத்தியில் உரையாற்றியதோடு அதனைப்பதிவும் செய்துள்ளார்.'

'வாவ்!' என அதிசயித்தாள் சந்தியா.

'இது தொடர்பான அலெக்ஸ் கொலியரின் உரையை வேண்டுமானால் கணினி 'யூ ரியூப்பில்' கேட்கலாம்' என, எனது கூற்றுக்கான அத்தாட்சியையும் சந்தியாவிடம் கூறி அவளது ஆர்வத்தை மேலும் தூண்டினேன்.

இப்படி நான் சொன்னதற்கு வேறொரு காரணமும் இருந்தது. பரஸ்பரம் நாங்கள் உரையாடும்போது ஏற்படுகின்ற மொழிப் பிரச்சனைதான் அது.

ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொள்ளாத ஒருவர் ஆங்கிலத்தில் உரையாடும்போது அவரது தாய் மொழியின் ஒலிக்கூறுகள் அவரது ஆங்கில உச்சரிப்பில் கலந்திருக்கும்.

தமிழர்களாகிய நாங்கள் பேசும் ஆங்கிலத்துக்கும் இலண்டனில் பிறந்து வளர்ந்த ஒரு சிறுமி பேசும் ஆங்கிலத்துக்கும் இடையில் உச்சரிப்பு வேறுபாடுகள் (Accent) இருக்கும். சில சந்தர்ப்பங்களில் நாங்கள் கூறுவதை அவள்புரிந்து கொள்வதற்கும் அவள் சொல்வதை நாங்கள் புரிந்து கொள்வதற்கும் சிரமங்கள் ஏற்படும்போது நாங்கள் கூறியவற்றை மீண்டும் கூறிப்புரியவைக்க வேண்டி ஏற்படும்.

மேலதிக விளக்கங்கள் தேவைப்படும்போது இணையத்தில் பார்த்துக் கொள்ளும்படி நான் கூறுவது வசதியாக இருந்தது. உடனுக்குடன் அவற்றைத் தனது கைத்தொலைபேசியில் உள்ள இணையத்தில் பார்த்துக் கொள்ளக்கூடிய வசதி அவளிடம் இருந்தது.

உலகத் தமிழியல் மாநாட்டின் தொடக்க விழா இலண்டன் பல்கலைக்கழகத்தில் உள்ள கல்விப்பீடத்தின் 'லோகன் ஹோல்' என்னும் மண்டபத்தில் இடம்பெற்றது. அன்று சம்பிரதாயபூர்வமான நிகழ்ச்சிகளே இடம்பெற்றன. இந்த மாநாட்டின் அமைப்பாளராக திரு. செல்வா செல்வராஜா அவர்களும், தலைவராக எமது நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களும் பணிபுரிந்தார்கள்.

காப்பாளராக கலாநிதி அவ்வை நடராஜன் அவர்களும் துணைத்தலைவர்களாக கலாநிதி. எம். முத்துவேலு, முனைவர் கே. சிதம்பரம், முனைவர் ஆர். சுந்திரசேகரன், திரு.மு. நித்தியானந்தன் ஆகியோர் பணிபுரிந்தார்கள். பேராசிரியர் பாலசுகுமார் செயலாளராகவும் உதவிச் செயலாளராக எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களும், இணைப்பாளராக திரு. எஸ். ஜே. பற்றிமாகரன், உதவி இணைப்பாளராக திரு.கெ. சஞ்சய் ஆகியோரும் கடமையாற்றினர். ஆய்வுத் தெரிவுக்குழுவில் பேராசிரியர் பீட்டர் ஷாக், பேராசிரியர் வி.அரசு, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் ஏ.ஜே.வி. சுந்திரகாந்தன், பேராசிரியர் அறிவு நம்பி, பேராசிரியர் குமரன் சுப்பிரமணியன், திரு.எஸ். சச்சிதானந்தம், பேராசிரியர் செல்வா கனகநாயகம், பேராசிரியர் சேரன், திருமதி ரி. குணபாலசிங்கம் ஆகியோர் பணிபுரிந்தனர்.

தொடக்கவிழாவில் மேளக்கச்சேரி, மங்கல விளக்கேற்றல் மற்றும் பிரமுகர்களின் உரைகள் ஆகியன இடம்பெற்றன. இந்த மாநாட்டிற்கு தமிழியல் தொடர்பான பதினைந்து விடயப்பரப்புகளிலும் உட்பிரிவுகளிலும் விடயங்கள் கோரப் பட்டிருந்தன. கிடைக்கப்பெற்ற ஆய்வுக்கட்டுரைகளில் 124 ஆய்வுக் கட்டுரைகள் தேர்வின் பின்னர் மாநாட்டில் சமர்ப்பிப்பதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், நியூசிலாந்து, கனடா, ஐக்கிய இராச்சியம், டென்மார்க், சுவீடன், பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து ஆய்வுக்கட்டுரைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. இலங்கையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 38 ஆய்வுக்கட்டுரைகளில் 15க்கும் மேற்பட்டவர்கள் மாநாட்டில் கலந்து தமது கட்டுரைகளை நேரில் சமர்ப்பிப்பதற்குத் தயாராக இருந்தனர். இவர்களில் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, பேராசிரியர் துரை மனோகரன், பேராசிரியர் வ. மகேஸ்வரன், பேராசிரியர் கி. விசாகரூபன், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், கலாநிதி சிவ நிர்த்தானந்தா, டாக்டர் தி. ஞானசேகரன், திரு. இராசையா மகேஸ்வரன், திருமதி ஞானம் ஞானசேகரன், ரூபி வலன்ரீனா பிரான்சிஸ் ஆகிய 10 பேராளர்களே மாநாட்டில் கலந்து ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்தனர். மற்றவர்களுக்கு உரிய நேரத்தில் விசா கிடைக்கவில்லை.

மாநாடு ஆரம்பமாகிய வேளையில் இந்த மாநாட்டின் நோக்கத்திற்கு எதிராக இலங்கையில் இருந்து இனவாதச் சக்திகளால் அரசியல் சாயம் பூசப்பட்டது. இந்த மாநாடு இலங்கை அரசாங்கத்துக்கெதிராக புலம்பெயர்ந்து வாழும் புலிகள் சார்பானவர்களால் நடத்தப்பெறும் மாநாடு எனப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. இப்பிரசாரங்கள் ஒலி ஒளி அச்சு ஊடகங்கள் மூலம் பெரிதுபடுத்தப்பட்டன. இதற்கான காரணம் என்னவாக இருக்கலாம் என அறிந்து பார்த்ததில் இந்த மாநாட்டின் அமைப்பாளர் திரு. செல்வா செல்வராஜா நாடு கடந்த தமிழ் ஈழத்தின் முக்கிய உறுப்பினராக இருந்தவர் என்பது தெரிய வந்தது. ஆனால் அவர் இந்த மாநாடு நடப்பதற்கு ஆறுமாத காலத்துக்கு முன்னரே தமது பதவியிலிருந்து நீங்கிவிட்டார் என்பதையும் அறிய முடிந்தது.

இந்தப்பிரசாரங்களால் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தமிழ் அறிஞர்களே பெரிதும் சங்கடத்துக்கு உள்ளானார்கள். அரசாங்கத்தின்கீழ் இயங்கும் பல்கலைக்கழகத்தில் தொழில் புரிபவர்கள் அரசாங்கத்திற்கு எதிராக இடம்பெறும் மாநாட்டில் கலந்துகொள்வதால் அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும் என இனவாதிகள் ஊடகங்களில் பிரசாரப்படுத்தினர்.

இங்குள்ள பல்கலைக்கழகங்களில், பங்குபற்றியோர் தொடர்பான விசாரணைகள் ஆரம்பமாகின. இதனால் இலங்கையில் இருந்து சென்றவர்களும் இந்த மாநாட்டை முன்னின்று நடத்திய முக்கியஸ்தர்கள் சிலரும் கலக்கமடைந்தனர்.

மாநாட்டின் ஆய்வரங்குகள் 15, 16, 17ஆம் திகதிகளில் இடம்பெற்றன. 18ஆம் திகதி ஞாயிறு காலை ஊர்வலமும் அதனைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள் சிறப்புச் சொற்பொழிவுகள், நாடகங்கள், சான்றிதழ் வழங்கல் ஆகிய நிகழ்ச்சிகள் 'இல் ஃபோட்' என்னும் இடத்தில் அமைந்த வலன்ரைன் பார்க்கில் இடம் பெற்றன.

மறுநாள் இலண்டன் நகரினைப் பேராளர்கள் சுற்றிப் பார்ப்பதற்கும் மாநாட்டு அமைப்பாளர்கள் ஒழுங்கு செய்திருந்தனர். இதில் இந்திய இலங்கைப் பேராளர்கள் சிலர் கலந்துகொண்டனர்.

நன்நோக்கோடு நடைபெற்ற மாநாடு மகவும் சிறப்பாகவே நடந்தேறியது.

இந்த மாநாடு நிறைவு நாளன்று 18-8-2013 அன்று மாலை 6 மணிக்கு நூல்தேட்டம் நூலியலாளர் என். செல்வராஜா அவர்கள் இலங்கையில் இருந்து வருகைதந்துள்ள தமிழறிஞர்கள் சிலருடன் சந்திப்பொன்றை ஈஸ்ட்காம் திருவள்ளுவர் மன்றத்தில் ஏற்பாடு செய்திருந்தார். இந்தச்சந்திப்பில் இலண்டனில் இருக்கும் தமிழறிஞர்களும் கலந்து கொண்டனர். இச்சந்திப்பானது அங்கு வருகை தந்தோர் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் சந்தித்து உரையாடவும் புரிந்து கொள்ளவும் ஏதுவாக அமைந்தது. எனக்குப் பெரும் மகிழ்ச்சியை அந்தச் சந்திப்பு ஏற்படுத்தியது. நீண்ட நெடுங்காலமாக நான் சந்திக்க விரும்பிய சிலரை நான் அங்கு சந்தித்தேன். அதுபற்றி அடுத்த இதழில் கூறுவேன்.



# 4

# உலகின் முதலாவது நிலத்துக்கு அடியிலான ரயில்சேவை!

சென்ற அத்தியாயத்தில் இலண்டனில் உள்ள எனது மைத்துனரின் இல்லத்தில் பூஜை அறையில் இருக்கும் பகவான் சத்திய பாபாவுக்கு அணியப்படும் மல்லிகைச் சரம் வளர்வதை நான் கண்டு அதிசயித்ததைக் குறிப்பிட்டிருந்தேன். அது தொடர்பாக பல வாசகர்கள் நேரிலும் தொலைபேசி மூலமும் தமது ஆச்சரியத்தைத் தெரிவித்திருந்தனர்.

ஆனால் எனது தம்பி சாமிநாதஐயர் தற்போது இலங்கை வங்கி திருகோணமலை மேல்தரக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளராகக் கடமைபுரிபவர் என்னிடம் கூறினார், “இது எனக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. இங்கு திருகோணமலையிலும் சாயிபாபாவின் மாலை வளரும் அதிசயம் நிகழ்வதை நான் கண் களால் கண்டேன். திரு புவனேந்திரன் என்பவர் மேலதிக அரசாங்க அதிபராகக் கடமைபுரிந்து ஓய்வுபெற்றவர். இவர் ஒரு சாயி பக்தர். அவரது வீட்டில் சாயிபாபா பஜனை வியாழக்கிழமைகளில் இடம்பெறுகிறது. பாபாவுக்கு அணியப்படும்

மாலை இங்கும் தினம்தினம் வளருகிறது. திருகோணமலையில் வசிப்பவர்கள் பலருக்கு இந்த விடயம் தெரியும்” என்றார்.

நான் இலண்டனில் இருந்த காலத்தில் ஒரு நாள் எழுத்தாளர்கள் வவுனியூர் இரா. உதயணனும் தம்புசிவா அவர்களும் என்னைச் சந்திக்க எனது மைத்துனர் இல்லம் வந்திருந்தார்கள். அவ்வேளை யில் அவர்களையும் அழைத்துச் சென்று மாலை வளரும் அதிசயத்தை அவர்களுக்கும் காட்டினேன்.

இனி இக்கட்டுரைத்தொடரின் அடுத்த அத்தியாயத்துக்கு வருகிறேன்.

இலண்டன் செல்பவர்கள் தங்களது உறவினர்கள், நண்பர்கள், தாங்கள் சந்திக்க விரும்பியவர்கள் யாபேரையும் சந்தித்து மகிழலாம் என்பது பெரும்பாலும் சாத்தியமற்ற விடயமாகவே இருக்கும். அதற்கு முக்கிய காரணம், இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திக்கில் வாழ்வார்கள், தூர இடங்களில் இருப் பார்கள். எமக்கு அவர்களைச் சந்திக்க வசதியான நேரத்தில் அவர் களுக்கு வசதி யிருக்காது. அவர்கள் தொழிலுக்குச் செல்லும் நேரமாக இருக்கும். இத்தகைய சிரமங்களையெல்லாம் ஓரளவுக்கேனும் குறைக்கும் வகையில், இலங்கையிலிருந்து இலண்டன் தமிழியல் மாநாட்டுக்கு வருகை தந்த தமிழறிஞர்களுடனான சந்திப்பொன்றை நூலிய லாளர் நூல்தேட்டம் என். செல்வராஜா அவர்கள் ஒழுங்கு செய்திருந்தார். இச்சந்திப்பு 18.8.2013 அன்று மாலை 6 மணிமுதல் 9 மணிவரை ஈஸ்ட்ஹாம் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் உள்ள ஈஸ்ட் அவென்யூ என்ற இடத்தில் இடம்பெற்றது.




2013ஆம் ஆண்டில் 150 ஆண்டு நிறைவைக் கொண்டாடிய

உலகின் முதலாவது நிலத்துக்கு அடியிலான ரயில்சேவை!

நூலியல் செல்வராஜாவைத் தெரியாத தமிழறிஞர்கள் இருக்க முடியாது. 2002 முதல் நூல்தேட்டம் என்ற பாரிய நூலியல் பதிவு முயற்சியில் ஈடுபட்டு இதுவரை ஏறத்தாழ 10,000 ஈழத்தமிழ் நூல்களை




**என்.செல்வராஜா ஒழுங்கு செய்த தமிழறிஞர் சந்திப்பு**

குறிப்புரைகளுடன் பதிவு செய்து தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். தனிமனித முயற்சியாக எவ்வித நிறுவன நிதியுதவியுமின்றி இவர் செய்யும் பணி ஈழத்தமிழ்ப் படைப்புலகின் வரலாறு தேடிச் செல்லும் எமது அடுத்த தலைமுறையினருக்கு உசாத்துணையாக அமையப்போகிறது. பிரித்தானிய தபால் சேவையில் முழுநேர ஊழியராகக் கடந்த 15 வருடங்களுக்கு மேலாகப் பணிபுரியும் இவர் தனது வருவாயில் பெரும்பகுதியை இந்த நூலியல் பதிவு முயற்சியில் செலவுசெய்து வருகிறார்.

தமிழியல் மாநாட்டு நிறைவுநாள் நிகழ்வுகள் முடிந்தபின் நாம் நேராக அவர் ஒழுங்கு செய்த தமிழறிஞர் சந்திப்பில் கலந்து கொள்ளச் சென்றோம்.

மண்டபவாயிலில் திரு.செல்வராஜா அவர்கள் எமக்காகக் காத்து நின்று எம்மை உள்ளே அழைத்துச் சென்றார். நாங்கள் அங்கு செல்வதற்கு முன்பாகவே இலங்கையைச் சேர்ந்த பேராசிரியர் துரை. மனோகரன், பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நூலகர் மகேஸ்வரன், எழுத்தாளர் தம்புசிவா ஆகியோர் வந்திருந்தனர். இவர்களோடு இலண்டனில் வசிக்கும் பிரபல எழுத்தாளர் வவுனியூர் இரா உதயணன், முன்னாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசியல்துறை விரிவுரையாளரான திரு. மு. நித்தியானந்தன், பிரபல சட்டத்தரணி திரு. சையட் பஷீர், எனது பால்ய நண்பரும் முன்னாள் லண்டன் லூசியம் சிவன்கோயில் ட்ரஸ்ட் உறுப்பினருமான என். சச்சிதானந்தன், சுடரொளி ஆசிரியர் ஐ.தி.சம்பந்தன், இலக்கியவாதியான திருமலை பாலா, பிரபல எழுத்தாளரும் ஊடகவியலாளருமான அம்பலவாணர் மயூரன் ஆகியோருடன் திருமதி விஜி செல்வராஜா, அவர்களது மகளும்

எழுத்தாளருமான மௌலியா செல்வராஜா ஆகியோரும் வந்திருந்தனர்.

தமிழகத்தைச் சேர்ந்த முனைவர் வீ. அரசு மற்றும் கலாநிதி இளங்கோவன் ஆகியோரும் அங்கு சமூகமளித்திருந்தனர். முதலில் பேராசிரியர் முனைவர் வீ. அரசு அவர்கள் நூலியலாளர் என். செல்வராஜா அவர்களது நூல்தேட்டம் பற்றியும், அதன் அவசியம் பற்றியும் முக்கியத்துவம் பற்றியும் பேசியதோடு செல்வராஜாவின் பணிபற்றிய ஓர் அறிவியல் சார்ந்த கணிப்பீட்டை வழங்கினார். கலாநிதி இளங்கோவன், பேராசிரியர் அரசுவின் மாணவர். நாட்டார் கலைகள் பற்றிப் பேசினார். இவர்கள் இருவரும் பேசியபின் அவர்களது தமிழகத் தொடர்பாளர்களுடன் இரவு விருந்துக்காக வெளியே சென்றனர்.

அதன்பின்னர் இலங்கையிலிருந்து சென்றவர்களின் சந்திப்பு இடம்பெற்றது. அங்கு சமூகம் அளித்த ஒவ்வொரு வரும் தம்மைப்பற்றி அறிமுகம் செய்ததோடு இலக்கியம் சார்ந்த தத்தமது முயற்சிகள் பற்றியும் எடுத்துக் கூறினர்.



**இலண்டன் வலயப் பயண அட்டை**

அதன்பின்னர் செல் வராஜா தம்பதியினர் அங்கு சமூகம் தந்தவர்களுக்கு சுவை யான இரவுப்போசன விருந்தளித்து மகிழ்வித்தனர். இந்தச் சந்திப்பில் நான் நீண்டகாலமாகச் சந்திக்கக் காத்திருந்த எனது பால்ய நண்பன் சச்சி, இலங்கையில் இருந்த காலகட்டத்தில் எனது ‘குருதிமலை’ நாவலுக்கு முக்கியம் அளித்து சிறந்த விமர்சனம் ஒன்றைத் தந்த விரிவுரையாளர் மு. நித்தியானந்தன், மற்றும் ஞானம் சஞ்சிகை வெளியிட்ட சிற்பி சிவசரவணபவன் சிறப்பு மலருக்கு பகுதி அனுசரணை வழங்கிய சுடரொளி சம்பந்தன் ஆகியோரைச் சந்தித்து அளவளாவியது எனக்குப் பெரும் மகிழ்வைத்தந்தது.

நான் அங்கு சந்தித்த பிரமுகர்கள் பற்றியும் அவர்கள் எவ்வாறு எமது இலண்டன் பயணம் வெற்றிப்பயணமாக அமைவதற்கு உதவினார்கள் என்பது பற்றியும் மேலும் இக்கட்டுரைத் தொடரில் அதற்கான சந்தர்ப்பம் வரும்போது விபரிப்பேன்.

நாங்கள் லண்டனில் இருந்த காலத்தில் செல்லவேண்டிய இடங்களுக்கு அனேகமான சந்தர்ப்பங்களில் பஸ்ஸிலும் ரயிலிலுமே பயணித்தோம்.

போக்குவரத்து நிர்வாக வசதிக்காக இலண்டன் நகரை ஆறு வலயங்களாகப் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு வலயத் துக்கும் எல்லைகள் வகுக்கப்பட்டுள்ளன. இலண்டன் பெரு நகர்ப்பகுதியைச் சேர்ந்த இடத்தை முதலாம் வலயம் (Zone-1) எனக் குறித்துள்ளார்கள். பெருநகர்ப் பகுதியிலிருந்து சற்றே தள்ளி இருக்கும் பகுதியாக விளங்கும் இடங்கள் தூரத்துக்கு ஏற்றவாறு வலய எண்கள் கூடிச் செல்கின்றன. வலயம் 6 என்பது இலண்டன் பெரும் பகுதியோடு அண்மைய காலத்தில் இணைந்த பகுதியாகும். 'ஒயிஸ்ரர்' அட்டை (Oyster card) எனப்படும் பயணச் சீட்டை நாம்விரும்பிய வலயத்துக்கு ஏற்ப வாங்கமுடியும். இந்தப் பயணச் சீட்டுடன் அந்த வலயத்துக்குள் பஸ்ஸிலோ ரயிலிலோ அல்லது இரண்டிலுமோ பயணிக்கமுடியும்.

எமது நாட்டில் உள்ளதுபோல அங்கே பஸ்களிலோ ரயில்களிலோ டிக்கற் பரிசோதகர்கள் இருப்பதில்லை. இந்த ஒயிஸ்ரர் அட்டையை ரயில் நிலைய வாசலில் உள்ள இயந்திரத்தில் பொருத்தினால் வாசல் திறந்து உள்ளே செல்ல வழிவிடுகிறது. அதேபோன்று பஸ்ஸில் ஏறியதும் சாரதிக்குப் பக்கத்தில் உள்ள இயந்திரத்தில் பொருத்தியபின்பே பஸ்ஸில் உள்ளே செல்ல வேண்டும். இந்தப் பயண அட்டையில் பணம் போதிய அளவில் இல்லாவிட்டால் இயந்திரம் எம்மை உள்ளே செல்ல அனுமதிக்காது. இந்த ஒயிஸ்ரர் அட்டையில் எவ்வளவு பணப்பெறுமதி உள்ளது என்பதை அறியவும் தேவைப்படின் மேலதிக பணத்தை இட்டு நிரப்பவும் வசதிகள் இருக்கின்றன.

இந்தப் பயணச் சீட்டுக்களை ரயில் நிலையங்களிலும் பஸ்தரிப்பு நிலையங்களுக்கு அருகே உள்ள அதற்கான விற்பனை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.




**ஜி.பி.எஸ். வழிகாட்டித்திரையில்**
**ஞானம் பணிமனையிலிருந்து**
**கொழும்புத் தமிழ்ச் சங்கத்துக்கான பாதை.**

இத்தகைய இலத்திரனியல் (Electronic) தொழில் நுட்பப் பயணச்சீட்டுகள் இன்று மேலைநாடுகள் பலவற்றில் பாவனையில் உள்ளன.

வழமைபோல மைத்துனரின் மகள் சந்தியாவே நாம் செல்லும் இடங்களுக்கு எமக்கு வழிகாட்டியாக வருவாள்.

திரு. செல்வராஜா ஒழுங்கு செய்த அறிஞர் சந்திப்புக்குச் செல்லுமுன் அது நடைபெறும் இடமான "ஈஸ்ட்ஹாம் என்ற இடத்துக்கு எம்மைக் கூட்டிச்செல்லும் வழி உனக்குத் தெரியுமா?" என்று சந்தியாவைக் கேட்டேன்.

அந்தக்கேள்வியைப் புரிந்து கொள்ளாதவள் போல அவள் என்னை விநோதமாகப் பார்த்தாள்.

மேலை நாடுகளில் உள்ளவர்கள் தாம் முன்பொருபோதும் செல்லாத இடத்திற்குச் செல்ல வேண்டுமெனில் யாரிடமும் வழியை




**நிலத்துக்கு அடியில் ரயில் நிலையம்**

விசாரித்து அறியமாட்டார்கள். தமது கைத்தொலைபேசியில் இணையத் தொடர்பை ஏற்படுத்தி ஜி.பி.எஸ். (Global Positioning System) என்ற வழிகாட்டியில் தெரிந்துகொள்வார்கள். தற்போது இருக்கும் இடத்தையும் தாம்செல்லவேண்டிய இடத்தின் பெயரையும் அதில் பதிந்துவிட்டால் கைத்தொலைபேசியின் திரையில் செல்லவேண்டிய வழி தென்படத் தொடங்கும். நாம் எந்த இடத்தில் இருக்கிறோம், வழியில் உள்ள முக்கிய கட்டிடங்கள், சந்திகள், சந்தியில் எந்தப்பக்கம் திரும்பவேண்டும் போன்ற விடங்களைக் கைத்தொலைப்பேசித் திரையில் கண்டு கொள்ளலாம்.

இந்த வசதியைப் பயன்படுத்திப் பழகிய சந்தியா என்னை விநோதமாகப் பார்த்ததில் வியப்பில்லைத்தான்.

இத்தகைய வசதி எங்கள் நாட்டில் இருக்கிறதா எனத் தகவல் தொழில் நுட்பத்துறையில் விரிவுரையாளராக இருக்கும் எனது மகன் பாலச்சந்திரனிடம் கேட்டேன்.

“மனித இனம் தற்போது தகவல் யுகத்தில் (Information Age) வாழ்ந்து கொண்டிருக்கிறது. சென்ற நூற்றாண்டின் எழுபதுகளில் கணினியின் வரவுடன் இந்தத் தகவல் யுகம் தொடங்கிவிட்டது. இந்த ஜி. பி. எஸ். வழிகாட்டி உலகப் பொதுவானது. எல்லா

நாடுகளிலும் இந்த வசதி இருக்கிறது. எனக்கூறி, எங்கள் வீடு அமைந்திருக்கும் இடத்தில் இருந்து கொழும்புத் தமிழ்சங்கத்துக்கு எப்படிப் போகலாம் என்ற வழிகாட்டியை கைத்தொலைபேசித் திரையில் எப்படிப் பெறுவது எனச் செயல்முறை விளக்கம் தந்தார். அதனைப் பார்த்து நான் ஆச்சரியமடைந்தேன்.

மகன் மேலும் ஒரு விளக்கத்தையும் தந்தார். “ஆசியா போன்ற கீழைத்தேய நாடுகளில் இந்த ஜி.பி.எஸ். வழிகாட்டிகளைவிட மனித வழிகாட்டிகளையே நாம் அதிகம் மதிக்கிறோம். ஆசிய நாடுகளைப் பொறுத்தவரை நாம் எங்கு சென்று எவரிடமும் அறியாத இடத்துக்கு வழிகேட்டால் எவரும் முகம் சுழிக்காது சந்தோஷமாக எமக்காக சில நிமிடங்களை ஒதுக்கி வழிகாட்டுவர். அதில் அவர் மனத் திருப்திகொள்வர். நாமும் சந்தோஷமாக அவருக்கு நன்றிகூறுவோம். இத்தகைய ஒரு சமூக இசைவாக்கம் கீழைத்தேய நாடுகளில் இருக்கிறது. மேலைத்தேய நாடுகளில் பொதுவாக மனிதரோடு மனிதர் ஒட்டியுறவாடாத தன்மையையே காணமுடியும். அவர்கள் தனித்தனி தீவுகளாக வாழ்வதையே விரும்புகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைமுறைக்கு இத்தகைய ஜி. பி. எஸ். வழிகாட்டி தேவைதான்” என்றார்.

இந்த இடத்தில் எனக்கு வழிகாட்டல் பற்றி சங்க இலக்கியங்களில் காணப்படும் பாடல்கள் நினைவில் வந்தன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழன் பண்பாடாக வழிகாட்டல் இருந்திருக்கிறது. இதனை ஆற்றுப்படை இலக்கியத்தில் காண்கிறோம். பரிசு பெற்ற கலைஞன் வறுமையில் வாடும் கலைஞனிடம் தானே வருகிறான்.



அவனிடம் பரிவோடு பேசுகிறான். தனது கலைத்திறனைப் பாராட்டி பரிசு வழங்கிய வள்ளலின் கொடைத்திறனைப் புகழ்கிறான். அவனிடம் சென்றால் வறுமை தீரும் என்று நம்பிக்கை ஊட்டுகிறான். அவனிடம் செல்வதற்கான வழியை விரிவாகக் கூறி வாழ்த்தி அனுப்புகிறான். பழந்தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்து இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் இந்தப் பண்பாடுமிக்க செயலைப் புலவர்கள் பாடாண்திணையின் ஒரு துறையாகப்பாடி இருப்பதைக் காட்டுகிறார். இதுவே ஆற்றுப்படை - வழிகாட்டல் ஆகும்.

இலண்டன் செல்பவர்கள் எவராக இருந்தாலும் அங்குள்ள ரயில்களில் பயணம் செய்வது தவிர்க்க முடியாத ஒரு செயற்பாடாக இருக்கும். இந்த ரயில்களில் பயணம் செய்வதே புதிய அனுபவம்தான். ரயில்கள் நிலத்துக்கு அடியிலே அமைக்கப்பட்ட பாதைகளில் ஓடுகின்றன. நிலத்துக்கடியில் ஓடும் இந்த ரயில்களை 'ரியூப்' (Tube) என்கிறார்கள். இந்த ரயில்கள் யாவும் மின்சாரத்தில் ஓடுபவை. இந்த ரயில் வலையமைப்பில் 270 புகையிரத நிலையங்கள் இருக்கின்றன. 402 கிலோ மீற்றர் தூரத்தைக்கொண்ட தண்டவாளங்களில் இந்த மின்சார ரயில்கள் ஓடுகின்றன. இதில் 55 வீதமான பாதைகள் நிலத்தின் மேலே அமைந்துள்ளன. இங்குள்ள புகையிர நிலையங்களுக்கெல்லாம் தலைமைப் பீடமாக விக்ரோறியா புகையிரத நிலையம் அமைந்துள்ளது.

நிலத்துக்கு அடியில் ரயில்பாதையை அமைக்கும் எண்ணம் ஏன் தோன்றியது என்பது சுவாரஸ்யமானது. இன்றைய காலகட்டத்தில உலகின் உள்ள நாடுகள் பலவற்றில் தெருக்களில் வாகன நெரிசல் அதிகமாக இருப்பது ஒரு பாரிய பிரச்சினையாக இருக்கிறது. கீழைத்தேயங்களில் வாகன நெரிசல் கூடுதலாக உள்ள சந்திகளில் மேம்பாலங்களை அமைப்பதை அதற்கான தீர்வுகளில் ஒன்றாக நடைமுறைப்படுத்துகிறார்கள்.

இலண்டனில் 1830களிலேயே வாகன நெரிசல் பெரும்பிரச்சனையாக இருந்ததாம். எப்படியெனில் அக்காலத்தில், குதிரை வண்டில்களே அதிகமாகப் பாவனையில் இருந்தன. மக்கள்

போக்குவரத்து மற்றும் பொருட்களை ஓர் இடத்தில் இருந்து வேறோர் இடத்துக்குக் கொண்டுசெல்லல்போன்ற சேவைகளுக்கு குதிரை வண்டில்களே பாவிக்கப்பட்டன. இந்த வண்டில்கள் ஏற்படுத்திய நெரிசல் காரணமாக வியாபார நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டதாம். அப்போதிருந்த இலண்டன் மாநகரசபைக்கான சட்ட ஆலோசகர் சாள்ஸ் பியர்சன் என்பவர் இந்தப் போக்கு வரத்து நெரிசல்களைத் தவிர்ப்பதற்கு நிலத்துக்கு அடியிலான போக்குவரத்துச் சேவையை ஏற்படுத்துவதே பொருத்தமானது என்ற முன்மொழிவைச் சமர்ப்பித்தார். ஆனால் அதனை அப்போது யாரும் பொருட்படுத்தவில்லை. அவரோ விடுவதாயில்லை. இலண்டன் மாநகர சபையில் இதற்காகப் பணம் ஒதுக்குமாறு தொடர்ந்தும் அறிக்கை சமர்ப்பித்துக்கொண்டே இருந்தார். கடைசியாக 30 வருடங்களின் பின்னரே உலகின் முதலாவது நிலத்துக்கடியிலான ரயில்பாதையின் தொடக்க வேலைகள் ஆரம்பமாகின.

முதலில் பரீட்சார்த்தமாக மூன்று மைல் நீளமான பாதாள ரயில் பாதையை அமைத்தார்கள். எப்படியெனில் மூன்று மைல் நீளத்துக்கு ரயில் பாதை அமைக்கக்கூடிய ஆழமும் நீளமும் அகலமும் கொண்ட பெரிய கிடங்குப் பாதையை வெட்டினார்கள். அதன் இரண்டு பக்கங்களிலும் செங்கட்டிகளாலான சுவர்களை அமைத்தார்கள். கிடங்கின் அடிப்பாகத்தில் தண்டவாளங்களைப் பொருத்தினார்கள். அதன்பின்னர் மேற்பகுதியை வளைவான ஆர்ச் வடிவில் கூரையை செங்கட்டிகளால் அமைத்து மூடிவிட்டார்கள். அதன்மேல் தெருக்களை அமைத்து வழமையான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தினார்கள். இந்த நிலத்துக்கடியிலான ரயில் பாதைவேலைகளை பல்லாயிரம் தொழிலாளர்கள் இரவு பகலாகச் செய்து முடித்தார்கள். இவ்வாறு வேலை செய்யும்போது நிலத்துக்கடியில காணப்பட்ட தண்ணீர்க் குழாய்கள், வாயுக்குழாய்கள், மலக்குழிகள், கால்வாய்கள் ஆகியவற்றைச் சீர்செய்வது பெரும்பாடாக இருந்ததாம். ஒருவாறு புகையிரதப்பாதை அமைக்கப்பெற்று இந்தப்பாதையில் ‘கரிக்கோச்சி’கள் ஓடத்தொடங்கின.

1863ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் திகதியன்று இந்த நிலத்துக்கடியிலான ரயிலின் வெள்ளோட்டம் நடைபெற்றது. அன்று இலண்டன் மாநகரின் பெரும் புள்ளிகள் 600 பேர்வரை ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு ரயில்களில் பயணம் செய்ததோடு அது தொடர்பான பெரும் கொண்டாட்டங்களையும் நடத்தினராம். ஏனெனில் அதுவே உலகின் முதலாவது நிலத்துக்கடியிலான ரயில் அல்லவா! அடுத்த நாள் பொதுசனப் போக்குவரத்துக்கு அந்த ரயில்பாதை திறந்து விடப்பட்டபோது ஏறத்தாழ 30 ஆயிரம் பேர் புகையிரத நிலையத்தில் கூடிவிட்டார்கள். ரயில் பாதையின் மேலே தெருவில் நின்ற சனநெரிசல் காரணமாக சுரங்கப் பாதையின் கூரை உடைந்து விழப்போகிறது; சனங்கள் சுரங்கப்பாதையில் விழப்போகிறார்கள் என்றெல்லாம் கதை பரவி மக்களிடையே பீதி உண்டாகியதாம்!

அன்றைய லண்டன் ரைம்ஸ் பத்திரிகை இந்த நிலத்துக்கு அடியிலான ரயில் போக்குவரத்து பற்றிக் குறிப்பிடுகையில் 'இது அன்றைய நாளின் மாபெரும் பொறியியல் தொழில்நுட்பச் செயற்பாடு' என்று வருணித்ததாம். ஆனாலும் அக்காலத்தில் கரிக்கோச்சிகளில் இருந்து புறப்பட்ட புகையை அவர்கள் சகித்துக் கொள்ளவே வேண்டியிருந்தது.

அதன்பின்னர் காலத்துக்குக் காலம் நிலத்துக்கடியிலான ரயில் பாதைகளின் விஸ்தரிப்பு தொடர்ச்சியாக இடம்பெற்றது. காலப்போக்கில் நிலத்தை ஆழமாகத் துளைத்து அதனூடாக ரயில்பாதை அமைக்கும் தொழில் நுட்பம் ஏற்படுத்தப்பட்டதோடு மின்சாரத்தில் இயங்கும் ரயில்களும் பாவனையில் ஈடுபடுத்தப்பட்டன. இது 1890 ஆம் ஆண்டில் இடம்பெற்றது. அன்றிலிருந்து இந்த ரயில் சேவை 'ரியூப்' எனவும் அழைக்கப்பட்டது.

இந்த ரயில் பாதைகள் அமைக்கப்படும்போது மண்பாறைகள் இடிந்து விழுந்து இலட்சக்கணக்கானோர் மாண்டுபோயினர். இப்படி மாண்டுபோனோரில் ஆபிரிக்க நாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட கறுப்பினமக்களே அதிகம் எனக்கூறுகிறார்கள். இந்த ரயில் நிலையங்கள் பலவற்றில் ரயில் பாதை அமைக்கும் வேலையில்

உயிரிழந்தவர்களின் பெயர்களைப் பொறித்து வைத்துள்ளார்கள். ரயில் பாதையின் பக்கச் சுவர்களில் பல இடங்களில் வர்த்தக விளம்பரங்கள் காணப்படுகின்றன. சில ஆங்கிலக் கவிஞர்கள் தமது கவிதைகளையும் காட்சிப்படுத்தியிருக்கிறார்கள்.

இந்த நிலத்துக்கடியிலான போக்குவரத்தின் 35 ஆண்டுகள் நிறைவையொட்டி 1898ல் ஒரு முத்திரை வெளியிடப்பட்டது.

வெள்ளையர்கள் இத்தகைய பாரிய வேலைத்திட்டங்களை ஒரு நாட்டில் மேற்கொள்ளும்போது தமது ஆட்சிக்குட்பட்ட வேறு நாடுகளிலிருந்து தொழிலாளர்களைக் கொண்டுவந்து அந்த வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தனர். இலங்கை மலைநாட்டில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டபோதும் அதன் தொடர்ச்சியாக புகையிரதப்பாதை அமைக்கப்பட்ட போதும் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட தொழிலாளர்களே வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள் என்பதும் அவர்களில் பலர் மாண்டு மடிந்தனர் என்பதும் வரலாறு.

இந்த ரயில்பாதை அமைக்கும் வேலைகள் முதலாம் உலகமகா யுத்தம் நடந்த 1917ஐ அண்டிய காலப்பகுதியில் தாமதமாகியதாம். அதற்குக் காரணம் மேலே இருந்து ஆகாய விமானக்குண்டுகள் சரமாரிய விழும்போது அவற்றில் இருந்து தமது உயிரைக் காப்பாற்ற பொதுமக்கள் இந்த ரயில் பாதைகளுக்குள் உள்நுழைந்து சிறு கொட்டில்களை அமைத்து அங்கு வாழத்தலைப்பட்டனராம்.

இத்தகைய செய்திகளை நான் அறிந்தபோது எமது நாட்டில் ஈழப்போர் நடந்த காலகட்டத்தில் ரயில் தண்டவாளங்கள் கழற்றப்பட்டு அவை பங்கர்கள் அமைக்கப் பயன்பட்டதும், இடம்பெயர்ந்து வந்த பொதுமக்கள் ரயில்பாதைகளில் தமது வாழ்விடங்களை அமைத்துக் கொண்டதும் நினைவில் வந்தன.

இன்று இலண்டன் ரயில்சேவை மிக உயர்ந்த தரத்தில் இருக்கிறது. குறித்த நேரம் தவறாது ஓடும் ரயில்களில் அடுத்து வரப்போகும் ரயில் நிலையம் எது, எங்கு செல்லும் பிரயாணிகள் அடுத்த நிலையத்தில் மாறி ஏறவேண்டும் போன்ற விபரங்கள்

காட்சிப்படுத்தப் படுவதோடு ஒலிபரப்பப் படுகின்றன. ரயில் நிலையத்தில் பயணிகள் ஏறும்போதும் இறங்கும்போதும் ரயிலின் கதவுகள் தானே திறந்து மூடுகின்றன. கவனமாக ஏறி இறங்குங்கள் என்ற எச்சரிக்கை ஒலிகளும் ஒலிபரப்பாகின்றன.

இலண்டனில் உள்ள ரயில் நிலையங்களில் செய்திப் பத்திரிகைகள் இலவசமாகக் கிடைக்கின்றன. காலையில் ஒருவர் தனது அலுவலகத்துக்கோ அல்லது வேறு தொழில் நிமித்தமோ ரயிலில் பயணம் செய்யும்போதே செய்திகளை வாசித்து அறிந்து விடமுடிகிறது. பாடசாலை செல்லும் மாணவர்கள் பலர் தமது பாடசாலை செல்லும் வழியிலேயே நாட்டின் அன்றைய முக்கிய செய்திகளை அறிந்து கொள்கிறார்கள் இந்தச் செய்தித்தாள்களில் அரசியல், பொருளாதார, சமூக விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. செய்தித்தாள்களைப் படிப்பவர்கள் இரயிலில் பயணம் செய்துவிட்டு இறங்கும்போது அதனை அந்த ஆசனத்தில் விட்டுவிட்டுச் செல்கிறார்கள். விரும்பியவர்கள் எடுத்துப் படிக்கலாம் தேவைப்படின் வீட்டுக்கும் எடுத்துச் செல்லலாம்

காலையில் 'மெட்றோ' என்னும் இலவச ஆங்கிலப்பத்திரிகையும் மாலையில் 'ஈவினிங் ஸ்ரான்டட்' என்ற பத்திரிகையும் ரயில்களில் கிடைக்கின்றன. ரயிலில் போகும்போது மற்றவர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் படிக்க வசதியாக இந்தப்பத்திரிகைகள் அளவில் சிறிதாக உள்ளன. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உதயன், வலம்புரி போன்ற பத்திரிகைகளின் சைஸ்களில் வெளிவருகின்றன. 60முதல் 80 பக்கங்களில் வெளிவரும் இந்தப்பத்திரிகைகள் விளம்பரங்கள் மூலம் தமது உற்பத்திச் செலவை பெற்றுக்கொள்கின்றன. இங்கு சிறியோர் முதல் பெரியோர்வரை எல்லோருமே ரயிலில் பயணம் செய்தபடியே பத்திரிகை வாசிக்கிறார்கள். பத்திரிகை வாசிப்பதற்கென தனியாக நேரம் ஒதுக்கவேண்டிய தேவை இங்கு இருப்பதில்லை. எல்லோருக்குமே அன்றைய செய்திகள் அத்துப்படியாக இருக்கின்றன.

இந்தப் பத்திரிகைகளைவிட பதினொரு தேசிய தினசரிப் பத்திரிகைகளும் பதினொரு வாரப்பத்திரிகைகளும் வெளி வருகின்றன என அறிய முடிகிறது.

இந்தப் பத்திரிகைகளை வாசித்தால் இலண்டனில் உள்ள ஊடக சுதந்திரத்தை அறிந்து கொள்ளலாம். காலத்துக்குக் காலம் இப்பத்திரிகைகளில் அரசியல் பிரமுகர்கள் மட்மல்ல அரசகுடும்பத்தினரும் மிகவும் கடுமையான விமர்சனத்துக்குள்ளாகி இருப்பதை அறியமுடிகிறது.

இந்த ஊடக சுதந்திரத்தை புலம்பெயர்ந்து வாழும் நம்மவர்களும் இங்கு வசதியாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். வானொலி தொலைக்காட்சி நிலையங்களையும், பத்திரிகைகளையும், பிரசுரங் களையும் அவரவர் தத்தம் போக்குக்கும் தத்தமது அரசியலுக்கும் அமைய நடத்திக் கொண்டிருக்கிறார்கள். 'ஈழ அரசியல்' இங்கு தூள்பறக்கிறது.

இங்கு நிலவும் ஊடக சுதந்திரத்தைப் பார்க்கும்போது எமது நாடாகிய இலங்கையின் ஊடக சுதந்திரம் எந்நிலையில் இருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தால் பெருமூச்சுத்தான் ஏற்படுகிறது.

❍ ❍ ❍



# 5

# தேம்ஸ் நதித் தீரத்திலே...

சென்ற அத்தியாயத்தில் நிலத்துக் கடியில் ஓடும் பாதாள ரயில்கள் பற்றிய கட்டுரையை எழுதியிருந்தேன். அதனை வாசித்துவிட்டு இலண்டனில் வாழும் நூலகர் என். செல்வராஜா அவர்கள் அது தொடர்பான மேலதிக செய்தி ஒன்றினை அனுப்பியிருந்தார். 150 வருடங்களுக்கு முன்னர் முதல் முதலில் ஓடிய பாதாள ரயிலின் ஓவியம் அங்குள்ள புகையிரத நிலையமொன்றில் வரையப்பட்டுள்ளதாம். அந்த ஓவியத்தைப் பிரதிபண்ணி நினைவு முத்திரை ஒன்று சென்ற வருடத்தில் பாதாளரயிலின் 150 ஆவது வருட நிறைவு தொடர்பான கொண்டாட்டத்தின்போது வெளியிட்டார்களாம். அந்த முத்திரையின் படத்தையும் அவர் அனுப்பி வைத்திருந்தார்.

இலண்டன் சென்று சமீபத்தில் நாடு திரும்பிய பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் வேறு ஒரு தகவலைத் தந்தார். இந்த ரயில்களில் மக்களோடு மக்களாக இலண்டன் பாராளுமன்றப் பிரதிநிதிகள், மந்திரி பிரதானிகள் பயணம் செய்வார்களாம்!

அவர் இதனைக் கூறிய போது முன்பு வாசித்த பத்திரிகைச் செய்தி யொன்று என் நினைவில் வந்தது. முன்னைய பிரதம ராக இருந்த ரோனி பிளயரின் மனைவி செறி பிளயர் ஒருமுறை ரயிலில் ரிக்கற் இன்றிப் பயணம் செய்தாராம், அதிகாரி களினால் அது கண்டு பிடிக்கப்பட்டு அவர் *10* பவுண்ஸ் அபராதம் செலுத்தவேண்டி ஏற்பட்டது.



நிலத்துக்கடியிலான ரயிலின் வெள்ளோட்ட நினைவு முத்திரை

இலண்டன் ரயில்களில் மக்கள் பிரதிநிதிகள் மக்களோடு மக்களாகப் பயணிக்கும்போது நமது நாட்டில் எங்களது பிரதிநிதிகள் எத்தகைய பந்தாக்களுடன் நடமாடுகிறார்கள் என்பதை எண்ணிப்பார்த்தேன்.

ஓர் அற்புதமான காலை வேளையில் நானும் மனைவியும் மைத்துனரின் மகள் சந்தியாவும் இலண்டனின் மையப் பகுதியாகிய தேம்ஸ் நதித் தீரத்தை அடைந்தோம். இலண்டனின் இதயம் என்றுகூட இந்தப் பகுதியைச் சொல்வார்கள். இலண்டன் நகரின் எழில் கொஞ்சும் அழகையும் நகர வாழ்வையும் பிரதிபலிக்கும் மையப்புள்ளியாக தேம்ஸ்நதி வளைந்தும் நெளிந்தும் மிக அமைதியாக ஓடிக்கொண்டிருக்கிறது.

இந்தத் தேம்ஸ் நதியின் தீரத்திலேதான் இலண்டன் நகரின் சரித்திரம் தோன்றியது என்பது வரலாறு. பொதுவாக நதிக்கரைகளிலேதான் நாகரீகங்கள் தோன்றி வளர்வது வழக்கம். ஏறத்தாழ *2000* ஆண்டுகளுக்கு முன்னர், கி.மு. *43*ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ரோமானியர்கள் முதன் முதலில் இந்த தேம்ஸ் நதிக்கரையிலே வந்து குடியேறினார்கள். இலண்டனின் அழகும், பாதுகாப்பான சூழலும் நாடுகள் தேடிப்பயணம் செய்த ரோமானியர்களைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. அவர்கள்



**இலண்டன் பிறிட்ஜ்**

அங்கு தங்கி தேம்ஸ் நதியின்மேல் பாலங்களை அமைத்து நதிக்கரையோரங்களில் வாழத்தலைப்பட்டனர். ரோமேனியர்கள் இங்கு வந்தபோது ஆதிவாசிகள் அங்கு வசித்துவந்ததாகச் சரித்திரச் சான்றுகள் உள்ளன. நதியின் கரையோரமாக வீடுகளையும் கட்டடங்களையும் அமைத்ததோடு வசதியாக அவர்கள் அங்கு ஒரு நகரையும் அமைத்துக் கொண்டார்கள். அந்த நகருக்கு **'லண்டூனியம்'** என்று பெயரிட்டார்களாம். அவர்கள் அன்று வைத்த பெயரே பின்னர் இலண்டன் எனத் திரிபடைந்துவிட்டது. இந்நகரின் அருகில் உள்ள கடலில் பயணம் செய்யும் கப்பல்கள் தேம்ஸ் நதிக்கும் வந்தன. அதன் காரணமாக நகர் வளர்ச்சியடையத் தொடங்கியது. அக்காலத்தில் சுமார் 50000 பேர்வரை அங்கு வாழ்ந்தார்கள் என அறிய முடிகிறது. ஆனால் ஏதோ காரணத்தால் இந்த ரோமானியர்கள் இலண்டனை விட்டுத் தமது சொந்த நாட்டுக்குச் சென்று விட்டார்கள். கைவிடப்பட்ட நிலையில் இருந்த லண்டூனியம் வெறிச்சோடிப் பாழடைந்தது. கட்டிடங்கள் இடிந்து வீழ்ந்தன. இந்நிலையில் சுமார் ஐநூறு ஆண்டுகளின் பின்னர் டென்மார்க் படைவீரர்கள் அங்கு வந்தனர். அவர்கள் நகரைச் சேதப்படுத்தத் தொடங்கினர். அப்போது அரசராக இருந்த

அல்பிரட் என்பவர் டென்மார்க் வீரர்களை வெளியேற்றிவிட்டு நகரைப் புனருத்தாரணம் செய்தார். அவ்வேளையில் பிரான்சிய மன்னனாகிய வில்லியம் என்பார் நாட்டைக் கைப்பற்றி இலண்டனைப் புதிதாக நிர்மாணித்தார் என வரலாற்றுப் பதிவுகள் உள்ளன. எட்டாவது ஹென்றி மன்னரின் காலம்வரை இலண்டன் படிப்படியாக வளர்ச்சி கண்டது.

1665ல் சுகாதாரமற்ற சூழ்நிலையில் 'கொள்ளை' நோய் இலண்டனைப் பாதித்தது. இந்தக் கொள்ளை நோயால் ஏறத்தாழ 12000 பேர் ஒரு கிழமையில பலியானார்கள் என அறியமுடிகிறது.

02-09-1666இல் ஏற்பட்ட மிகப் பெரிய தீ (The Great Fire) இலண்டனின் முக்கால்வாசிப் பகுதியைச் சாம்பராக்கி விட்டது. 13000 வீடுகள் நான்கே நாட்களில் எரிந்து சாம்பராகின. 25இலட்சம் மக்கள் இதனால் தங்கள் வசிப்பிடங்களை இழந்தார்களாம். சரித்திரப் புகழ்பெற்ற சென்ற் போல்ஸ் தேவாலயம் உட்பட மொத்தம் 80 தேவாலயங்கள் அந்தத் தீவிபத்தால் சாம்பராகியதாக வரலாற்றுப் பதிவுகள் உள்ளன.

பீனிக்ஸ் பறவை சாம்பரில் இருந்து உயிர்த்தெழுவது போல இலண்டன் நகரம் புதிதாய் மீண்டெழுந்தது. 1675-1711 காலப் பகுதியில் சென்ற் போல்ஸ் தேவாலயம் மீண்டும் கட்டி எழுப்பப்பட்டது.

11ஆம் நூற்றாண்டில் அத்தேசத்தின் தலை நகராக விளங்கிய லண்டன், 18ஆம் நூற்றாண்டில் உலகின் பல நாடுகளுக்குத் தலைநகராக மாறியது.

நாங்கள் தேம்ஸ் நதியைச் சென்றடைந்ததும் அங்கிருந்த பாலமொன்றிலிருந்து நதியின்மேல் பார்வையைச் செலுத்தினோம். நதி அப்படியொன்றும் அகலமானதாகவோ ஆழமானதாகவோ தெரியவில்லை. கரை என்று ஒன்றைக் காணவில்லை. அங்கு சுவர்களைக் கட்டிப் பல கட்டிடங்களை எழுப்பியுள்ளார்கள். நதியில் ஏராளமான ஓடங்களில் உல்லாசப் பயணிகள் பயணித்து மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்.

தேம்ஸ் நதியில் நீர் வற்றுவதில்லை. வருடத்தின் 12 மாதங்களிலும் நீர் ஓடிக்கொண்டே இருக்கும் என்ற தகவலை சந்தியா எமக்குக் கூறினாள். இலண்டனில் மொத்தக் குடிநீர்த்





**தேம்ஸ் நதிக்கரையில்**



Big Ben

தேவையின் மூன்றில் இரண்டு பகுதி தேம்ஸ் நதிமூலமே நிறைவேற்றப்படுகிறது எனவும் அறியமுடிந்தது. இலண்டனில் பெரும்பாலான வீடுகளில் குளிப்பதற்கும் ஏனைய தேவைகளுக்கும் தேம்ஸ் நதியின் தண்ணீரே உபயோ கிக்கப்படுகிறது. குடிப்பதற்கு இந்நீரைச் சுத்தப்படுத்தி அனுப்புகிறார்கள். இங்குள்ள வீடுகளில் 24 மணி நேரமும் குழாயைத் திறந்தால் தண்ணீர் கொட்டுகிறது. தண்ணீருக்கான பஞ்சம் எக்காலத்திலும் இருந்ததில்லையாம்.

வெஸ்ட்மின்ஸ்டர் (Westminster) என்ற இடம், தேம்ஸ் நதியின் வடக்குக் கரையில், இலண்டனின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. இலண்டனின் வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் பெருமைமிக்கதுமான பல இடங்கள் இங்குதான் உள்ளன. வெஸ்ட் மின்ஸ்டர் அரண்மனை, பக்கிங்காம் அரண்மனை, வெஸ்ட் மின்ஸ்டர் இடம், வென்ஸ்மின்டர் தேவாலயம், போன்ற முக்கிய இடங்கள் இங்கு உள்ளன. இந்த வெஸ்ட்மின்ஸ்டர் பகுதி இங்கிலாந்து அரசின் இடமாகவும் பின்னர் பிரித்தானிய அரசின் இருப்பிடமாகவும் ஆயிரம் ஆண்டுகளுக்குமேல் இருந்து வந்திருக்கிறது.

பிரித்தானியாவின் பாராளுமன்றத்தை 'வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனை' என்றும் அழைப்பார்கள். இது உலகப் பாரம் பரியக் களங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது. இந்தப் பாராளுமன்றத்துக்கும் ஒரு வரலாறு இருக்கிறது. முதன்முதலில் பாராளுமன்றத்துக்கான ஒரு தனிக்கட்டிடம் இருக்கவில்லை. 1547ல் அங்குள்ள புனித ஸ்டீபன் தேவாலயத்தில் மக்கள் பிரதிநிதிகள் கூடி பாராளுமன்றச் செயற்பாடுகளை நடத்தினர். 1834இல் ஏற்பட்ட தீவிபத்தில் அத்தேவாலயம் தீக்கிரையானது. அதனைத்

தொடர்ந்து அத்தேவாலத்தின் கீழ்ப்பகுதியொன்றில் நாடாளுமன்றச் செயற்பாடுகள் இடம்பெற்றன. 1941இல் இரண்டாம் உலகப்போரில் ஜேர்மனியரின் குண்டுவீச்சில் இந்தப் பாராளுமன்றமும் அழிந்தது. இன்றைய பாராளுமன்றம் 1950இல் ஸேர் கையில்ஸ் கில்பர்ட் என்பவரின் கட்டிடக் கைவண்ணத்தில் உருவாகியது.

உலகப்புகழ் பெற்ற ‘பிக்பென்’ மணிக்கூண்டுக் கோபுரம் வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையின் வடக்கு முனையில் அமைந் திருக்கிறது. நான்கு பக்கங்கள் கொண்ட மணிக்கூண்டுகளில் இதுவே உலகின் மிகப்பெரியதாகும். இதில் உள்ள மணி 13500 கிலோ எடைகொண்டது. இம்மணிக்கூண்டுக் கோபுரம் 1858 ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதி கட்டி முடிக்கப்பட்டது. இதன் மொத்த உயரம் 315 அடி. இது 200 அடிவரை செங்கல்லால் கட்டப்பட்டது. மணல் நிறத்திலான சுண்ணாம்புக்கல் மேற்புறப்பூச்சுடன் கூடியது. கோபுரத்தின் உயரத்தைப் பொறுத்தவரை உலகின் மூன்றாவது உயரமான கோபுரமாக இது கணிக்கப் படுகிறது. இரண்டாம் உலகப் போரின்போது ஜேர்மனி இந்த மணிக்கூண்டுக் கோபுரத்தைக் குண்டுவீசித் தகர்க்க முயன்றும் அது முடியாமல் போயிற்று.

பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஒலி, ஒளி பரப்பாகும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் சரியான கால அளவு இந்த பிக்பென் மணியோசைதான். அந்த ஓசை பிரித்தானிய ஒலி ஒளி ஊடகங்களூடாக உலகெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

இங்கிலாந்தின் அரசி எலிசபெத் அரியணையில் அமர்ந்து 60 வருடங்களைப் பூர்த்தி செய்ததன் நினைவுக் கொண்டாண் டத்தின்போது 2012 ஆம் ஆண்டில் இந்த மணிக்கூண்டு எலிசபெத் கோபுரம்’ எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இருந்தபோதிலும் மக்கள் வாயிலிருந்து பிக்பென் என்ற பெயரை மாற்ற முடியவில்லை.

இந்த பிக்பென் மணிக்கூண்டிலிந்து எழும் மணியோசை இலண்டனில் பல கிலோமீற்றர் வரை கேட்கிறது. பகல் பன்னிரண்டு மணி அடிப்பதைக் கேட்டு மகிழ்வதற்கு மக்கள் அங்கு கூடிவிடுகிறார்கள். நாங்களும் அந்த ஓசையின் அழகையும் இனிமையையும் கேட்டு மகிழ்ந்தோம்.



**பாராளுமன்றம் – இலண்டன்**




**10ஆம் இலக்க வீடு – பிரதமர் இல்லம்**

அருகில் உள்ள பாராளுமன்றத்தில் தொடர் கூட்டம் நடந்து கொண்டிருந்தால் அதனை மக்களுக்கு அறியத்தரும் வகையில் இந்த மணிக்கூண்டின் உச்சியில் சிகப்பு நிற வெளிச்சம் ஏற்றப்பட்டிருக்குமாம்.

தேம்ஸ் நதியின் மேலே பல பாலங்கள் காணப்படுகின்றன. அவையாவும் சீரான முறையில் பராமரிக்கப்படுவதையும் காணமுடிகிறது. எந்த நேரத்திலும் இந்தப் பாலங்களில் உல்லாசப பயணிகள் நிறைந்து காணப்படுகின்றனர்.

இந்தப்பாலங்களில் முக்கியமான பாலமாகத் திகழ்வது உலகப் புகழ்பெற்ற 'லண்டன் பிறிட்ஜ்'. இந்த இலண்டன் பிறிட்ஜ் பற்றி இன்று மூன்று வயதுக் குழந்தைக்கும் தெரிகின்றது. எப்படியெனில் அவர்கள் செல்லும் Nursary முன்பள்ளிகளில் "London Bridge is Falling down … my Fair Lady.." என்கிற பாடலைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். ரி.வி.களிலும் சிறுவர்களுக்கான அலைவரிசையைத் திறந்தால் இந்தப் பாடல் அடிக்கடி ஒலிக்கிறது.

அவர்களது பாடப்புத்தகத்திலும் படத்துடன் இந்தப்பாடல் இருக்கிறது. இலண்டன் பாலம் உடைந்து விழுகிறது என்ற கருத்தில் இந்தப்பாடல் ஒலிக்கிறது. நாங்கள் சிறு வயதில் 'நிலா நிலா வா.. வா.. நில்லாமல் ஓடிவா.. மலைமேல் ஏறிவா.... மல்லிகைப்பூ கொண்டுவா..' என்று பாடித்திரிந்த Nersary Rhymes போன்றதுதான் இந்தப்பாடலும். இப்போது எங்கள் குழந்தைகளின் பாடல்களில் ஆங்கிலம் புகுந்துகொண்டது காலத்தின் கோலம்!

நானும் மனைவியும் இலண்டன் புறப்படுவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டபோது அதனைக் கவனித்த எனது மூன்றரை வயது நிரம்பிய பேரனும் எங்களுடன் வரவேண்டும் என்றான். 'தாத்தா, நான் இலண்டன் பிறிட்ஜை பார்க்க வேண்டும்' என்றான். குழந்தையிடம் நாம் எப்படித்தான் மறுப்புக் கூறுவது? மௌனமாக இருந்தோம். தனது பாடக் கொப்பியில் தான் பார்க்கப்போகும் லண்டன் பிறிட்ஜை நீலக் கலர்ச் சோக்கட்டியால் வரைந்து காட்டினான். தனது ஸ்கூல் பாய்க்கில் ஒரு சில உடுப்புகளை எடுத்துவைத்து எமது பயணப் பொதிகளின் அருகில்

வைத்தான். எங்களது மௌனம் அவனுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அவனது முகம் வாடிவிட்டது.

எனது தந்தையின் பெயர் தியாகராச ஐயர். எனது பேரனுக்கும் அதே பெயரை எனது மகன் வைத்திருக்கிறார். நான் எனது தந்தையை 'ஐயா' என்று அழைப்பது வழக்கமாக இருந்தது. இப்போது பேரனை 'குஞ்சையா' என்று அழைப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறேன்.

'சரி குஞ்சையா, லண்டன் பிறிட்ஜ் பார்க்கக் கூட்டிப் போகிறேன்' என்று கூறி அவனைச் சமாதானப்படுத்தினேன்.

அன்று இரவு நாங்கள் விமான நிலையத்துக்குப் புறப்பட்டபோது குஞ்சையா நல்ல தூக்கத்தில் இருந்தான்.

இலண்டன் பிறிட்ஜைப் பார்த்தபோது அந்தப் பிஞ்சுக் குழந்தையின் வேண்டுதலை நிறைவேற்ற முடியாமல் போனது நினைவில் வந்து மனதை அலைக்கழித்துக் கொண்டிருந்தது. சந்தோஷமாக இருக்கமுடியவில்லை.

இலண்டன் பிறிட்ஜ் என உலகப்பிரசித்தி பெற்ற இந்தப் பாலத்தின் உண்மையான பெயர் 'டவர் பிறிட்ஜ்'. முன்பொரு காலத்தில் இந்தப் பாலம் அமைந்துள்ள இடம் பெரிய துறைமுகமாக விளங்கியதாம். அந்த இடத்திலேயே இந்தப்பாலத்தை 1894இல் அமைத்துள்ளார்கள். இலண்டனின் முக்கிய அடையாளமாகத் திகழும் இந்தப்பாலம் 43 மீற்றர் உயரமும் 200அடி நீளமும் கொண்டது. இரண்டு கோபுரங்களுக்கு இடையில் இந்தப்பாலம் கட்டப்பட்டுள்ளது. இந்தப்பாலம் ஆங்கிலக் கட்டிடப்பாணியில் 'கோதிக்' Gothic முறையில் கட்டப்பட்டது.

இந்தப்பாலத்தின் அருகே சில பிரமாண்டமான கட்டிடங்கள் இருக்கின்றன. அவை அரச அலுவலகங்கள். அவற்றை விட ஹோட்டல்களும், மியூசியம், வீடுகள், மதுபானக்கடைகள் ஆகியவையும் காணப்படுகின்றன.

பாலத்தில் ஏறிநின்று பார்த்தபோது தேம்ஸ் நதியில் சூரிய கிரணங்கள் பட்டு நதி தங்கப்பாளம் போலப் பளபளத்துக் கொண்டிருந்தது.

பாலத்தின் அடியில் கப்பல்கள் போகும்போது, பாலம் நடுவில் இரண்டாகப் பிரிந்து மேலெழுந்து கப்பலுக்கு வழிவிடும் பொறிமுறையுடன் இப்பாலம் அமைக்கப் பட்டுள்ளது. பாலத்தின் மேலுள்ள தெருவில் பஸ்கள், கார்கள் எதிரும் புதிருமாக ஓடிய வண்ணம் இருக்கின்றன. பாலத்தின் இருமருங்கிலும் பாதசாரிகளுக்கான பாதைகள் அமைந்துள்ளன.

இந்தப் பாலத்தில் ஆங்காங்கே உட்கார்ந்துகொள்ள இருக்கைகள் உள்ளன. அந்த இருக்கைகளில் எங்கு பார்த்தாலும் இளஞ் சிட்டுக்களைக் காணமுடிந்தது.

இந்தப்பாலத்தைப் பார்த்துவிட்டு சிறிது தூரம் நடந்து சென்றோம். அங்கே 'டவ்னிங் ஸ்றீற்' Downing Street என்ற புகழ்பெற்ற தெரு இருக்கிறது. பிரித்தானியாவின் முதலாவது ஹவார்ட் பல்கலைக்கழகப் பட்டதாரியான சேர் ஜோர்ஜ் டவ்னிங் (1642) என்பவரின் ஞாபகார்த்தமாக இந்தத் தெருவிற்கு அவரது பெயரைச் சூட்டியிருக்கிறார்கள்.

இந்தத் தெருவின் பத்தாம் நம்பர் வீடு பிரித்தானியப் பிரதமரின் வாசஸ்தலமாகும்.

இந்த தேம்ஸ் நதியின் தீரத்தில் மெலும் பல அற்புதக் காட்சிகளை நாங்கள் பார்த்து மகிழ்ந்தோம். அவை பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.

❍ ❍ ❍

# 6

# முன்னைப் பழைமைக்கும் முன்னைப் பழைமையாய் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்...

தேம்ஸ் நதியின் வட கரையில் வெஸ்ட் மின்ஸ்டர் பிரதேசம் அமைந்துள்ளது என்பதையும் அங்குதான் இலண்டனின் வரலாற்றுச் சிறப்புமிக்க பல இடங்கள் அமைந்துள்ளன என்பதையும் முன்னைய அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

வெஸ்ட் மின்ஸ்டர் தேவாலயம் இலண்டனில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க தேவாலயமாகும். அதனை வெஸ்மின்ஸ்டர் அபி (மடம்) என ஆங்கிலேயர்கள் வாஞ்சையுடன் அழைக்கிறார்கள். இந்தத் தேவாலயத்திற்கு சென்ற் மேரிஸ் சேர்ச் என்ற பெயரும் உண்டு.

இந்தத் தேவாலயத்திலேதான் பிரித்தானிய மன்னர்களின் திருமணங்கள் முடிசூட்டுவிழாக்கள் காலாதிகாலமாக இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தேவாலயத்தில் அரச திருமணங்கள், முடிசூட்டு விழாக்கள் இடம்பெறுவது போன்று மன்னர்களின் பூதவுடல்களும் இங்கேதான் அடக்கம் செய்யப்படுகின்றன. அரசர்களைவிட பிரதமர்கள், ஓவியர்கள், பிரபல வைத்தியர்கள், கவிஞர்கள், பிரபல நடிகர்கள், போர் வீரர்கள்,

மாலுமிகள், அரசியல்வாதிகள் எனப் பலதரப்பட்டோரின் சமாதிகளும் இந்தத் தேவாலயத்தின் சூழலிலே அமைந்துள்ளன.

இன்னொருவகையில் கூறுவதானால் இங்கிலாந்தை ஆண்ட அரசர்களினதும் அரசிகளினதும் பிரபுக்கள் கவிஞர்களினதும் கவித்துவமான கல்லறை என்று கூடச் சொல்லலாம். பழமைக்கே உரிய தொடவியலாத காலத்தை ஏதோ ஒருவகையில் தொடும் பிரமிப்பு அந்த நினைவாலயத்தில் இருந்தபோது என்னுள் ஏற்பட்டிருந்ததை உணர்ந்தேன். நமக்கு எட்டாததை ஆராதிக்கும் திவ்விய தரிசன பாவத்துடன் பலர் அங்கு உலவிக்கொண்டிருந்ததை நான் கவனித்தேன். தரையில் எழுதப்பட்டிருக்கும் எழுத்துக்களை மிதிக்கும்போது நூற்றாண்டுகளையே மிதிப்பதுபோல கால்கூசியது. நீளப்பாட்டில் படுத்த வாக்கில் கிடந்த மன்னர்களின் சிலைகளைத் தொடும்போது ஒருவகை அதிர்வும் பயமும் அமானுஷ்யமாக உடலில் பரவின.

'கவிஞர்களின் மூலை' என்ற பகுதியில் ஷேக்ஸ்பியர், ஷெல்லி, கீட்ஸ் போன்ற கவிஞர்கள் சிலைகளாக நின்றிருந்தனர்,

முதலாவது உலகமகா யுத்தத்தின்போது ஏறத்தாழ 10 இலட்சம் போர்வீரர்கள் இறந்தார்களாம். அந்நிகழ்வை நினைவுகூரும்முகமாக இந்தத் தேவாலயத்தின் தெற்குவாயிலில் ஒரு போர் வீரனின் கல்லறை காணப்படுகிறது. இது சகல தரத்தினரான மக்களினதும் சேவையைக் கௌரவிக்கும்முகமாக அமைக்கப்பட்ட கல்லறையாகும். இந்தத் தேவாலய வளாகத்தில் அடக்கம் செய்யப்பட்டோரில்



வெஸ்ட் மின்ஸ்டர் அபே தேவாலயம்



**வெஸ்ட் மின்ஸ்டர் தேவாலயத்தின்**
**அருகில் ஒரு போர்வீரனின் கல்லறை**

முக்கியமானவர்களாக முதலாவது எலிசபெத் மகாராணி, இரண்டாவது ஜோர்ஜ் மன்னர், விஞ்ஞானி சேர். ஐசாக் நியூற்றன், டார்வின், எழுத்தாளர்களான றஸ்கின், கோல்ட் ஸ மித், வேட்ஸ்வேத், மில்ரன், சாம்வெல் ஜோன்சன், டிக்கன்ஸ், ஆகியோர் அடங்குவர்.

பழைமையான இந்தத் தேவாலயத்தில் அமைந்திருக்கும் மாடக்கூண்டு உரோமாபுரியில் உள்ள தேவாலயத்தின் மாடக்கூண்டுக்கு அடுத்ததாக ஐரோப்பாவின் இரண்டாவது பெரியதாக அமைந்துள்ளது. இத்தேவாலயமானது கி.பி.600ஆம் ஆண்டளவில் மரத்தினால் கட்டப்பட்டு காலப்போக்கில் மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு 1614ஆம் ஆண்டில் இன்றைய வடிவத்தைப்பெற்றுள்ளது.

இந்தத் தேவாலயத்தில் உள்ள எண்கோண மண்டபம் 13ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது. அந்த எண்கோண மண்டபம் பலதடவைகள் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டபோதிலும்

அதன் நிலப்பரப்பில் பதிக்கப்பட்ட மாபிள் கற்கள் இன்றும் அதே நிலையில் அழியாமல் காப்பாற்றப்பட்டு வருகின்றன.

இத்தேவாலயம் 150 வருடங்கள் இங்கிலாந்தின் பாராளு மன்றமாகவும் 1547வரை இயங்கி வந்துள்ளது. இலண்டனில் பார்க்கவேண்டிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இத்தேவாலயம் அமைந்திருப்பதால் எந்தநேரமும் உல்லாசப் பிரயாணிகள் இங்கு நிறைந்து காணப்படுகின்றனர்.

ஆங்கிலேயர்கள் இந்தத் தேவாலயத்தையும் அதனைச் சூழவுள்ள இடங்களையும் தமது பாரம்பரிய கலாசார மையமாகக் கருதுகிறார்கள். வெஸ்ட் மின்ஸ்டர் அபேயின் உயர்ந்தோங்கிய கூம்புக் கோபுரங்கள், விதானங்களில் விரிந்திருந்த ஓவியங்களும் வர்ணக் கண்ணாடிகளும் பிரமாண்டம் பிரமாண்டமாய் மலைக்க வைத்தன.

கல்லறைகள்கூட கவித்துவத்தோடிருந்தன.

இந்தத் தேவாலயத்தைவிட்டு நாங்கள் வெளியே வந்தபோது 2000 ஆண்டுப் பழமைக்குள் புகுந்து வெளியே வந்த ஓர் உணர்வு - ஓர் ஆழம் என்மனதுள் நிறைந்திருந்தது.

**இலண்டனின் கண்** (London Eye)

தேம்ஸ் நதியின் தீரத்தில் அமைந்துள்ள ஓர் இராட்சத இராட்டினம்தான்(சக்கரம்) “இலண்டன் ஐ”. இது ஐரோப்பாவிலேயே மிகப் பிரபலமான சுற்றுலா மையமாகத் திகழ்கிறது. இந்த ‘இலண்டன் ஐ’ இலண்டனின் புதுமைக்குச் சான்றாக விளங்குகிறது. புதிய நூற்றாண்டைச் சிறப்பிக்கவென இந்த இராட்சத இராட்டினம் அமைக்கப்பெற்றது.

ஒரு சைக்கிளின் சில்லைவிட உருவத்தில் 200மடங்கு பெரியது. மூவாயிரம் தொன் அடித்தளத்தில் எழுநூறு தொன் இரும்பினால் அமைக்கப்பட்ட இந்த இராட்சத சக்கரம் 135 மீற்றர் உயரமும் 120 மிற்றர் விட்டமும் கொண்டது. சக்கரத்தில் 32 இராட்சத கண்ணாடிக் கூண்டுகள் அமைந்துள்ளன. ஒவ்வொரு கண்ணாடிக் கூண்டிலும் ஒரே நேரத்தில் 25 பேர பயணம் செய்யலாம்.



**இலண்டனின் கண்** (London Eye)

இச்சக்கரம் மிக மெதுவாக சுற்றுகிற போது தேம்ஸ்நதியின் அழகு, அதன் மேலுள்ள பாலங்கள், பாராளுமன்றம், பிக்பென் மணிக் கூண்டுக் கோபுரம், தேவாலயங்கள் முதலிய வற்றை கல்லெறிதூரத்தில் கண்டுகொள்ளலாம்.

இலண்டன் மாநகரின் சகல பகுதிகளையும் இதில் இருந்து 45 கிலோ மீற்றர்வரை பார்க்கலாம். சக்கரம் உச்சிக்குப் போகும்போது பருந்துப் பார்வையாக நீண்ட தூரம் தெரிகிறது. ஒரு நேரத்தில் 800 பேர்வரை இந்தச் சக்கரத்தில் பயணிக்கமுடிகிறது.

2010ஆம் ஆண்டில் இந்த 'லண்டன் ஐ' கண்ணாடிக்கூண்டுக்குள் 433 திருமணங்கள் நிகழ்ந்ததாக அறிய முடிகிறது. காதலர் தினம் கொண்டாடும் நாளன்றும் இந்தக்கண்ணாடிக் கூண்டுக் குள் காதலர்தினத்தைக் கொண்டாட இளம் சிட்டுக்கள் வருகிறார் களாம்.

ஒவ்வொரு வருடமும் ஜனவரி முதலாம் திகதி புது வருடம் பிறக்கும்போது 10 நிமிட வாணவேடிக்கையைப் பார்த்து மகிழ இலண்டன் மாநகரமே இங்கு கூடிவிடும் என அறியமுடிகிறது.

இந்த 'இலண்டன் ஐ'யை பார்க்கச் செல்பவர்களுக்கு ஒரு புதிய அனுபவமும் கிட்டுகிறது. நான்கு பரிமாணங்கள் கொண்ட திரைப்படம் காட்டுகிறார்கள். முப்பரிமாணப் திரைப்படங்கள் பார்த்த அனுபவம் வாசகர்களுக்கு இருக்கலாம். அதாவது தற்கால சினிமாத்திரையில் நீளம் அகலம் ஆகிய இரு பரிமாணங்களையே நாம் பார்க்கிறோம். முப்பரிமாணம் என்பது

நீள அகலத்துடன் உயரமும் தெரியும். படம் பார்ப்பவர்கள் அதற்கென வழங்கப்படும் கண்ணாடியை அணிந்து கொண்டுதான் படம் பார்க்க வேண்டும். படத்தில் ஒருவர் கத்தியை எடுத்து வீசுவாரானால் அந்தக்கத்தி எம்மை நோக்கி வருவதுபோல் இருக்கும். நாம் சடுதியாக தலையைக் குனிந்து கொள்வோம். படத்தில் ஒருவர் காறித் துப்புவாரானால் அந்தத் துப்பல் எமது முகத்தை நோக்கிவரும். இது முப்பரிமாணப் படத்தின் தன்மை.

தற்காலத்தில் நான்காவது பரிமாணப் படங்களும் வந்துள்ளன. முப்பரிமாணத்துடன் மேலதிகமாக சிலவற்றை நாம் உணரமுடியும். அதாவது புயல்வீசுகிறது என்றால் புயற் காற்றின் வேகத்தை தியேட்டரில் நாம் உணர்வோம். பனி பெய்தால் தியேட்டருக்குள் உண்மையாகவே பனி கொட்டும். நிலத்திலே ஏற்படும் அதிர்வுகளை நாம் காலுக்கடியில் உணர்வோம். அதற்கென தியேட்டரையே தயார்பண்ணியிருப்பார்கள்.

'லண்டன் ஐ' யில் ஏறுவதற்கு முன்னர் எங்களுக்கு ஒரு நான்கு பரிமாணப்படத்தைக் காட்டுகிறார்கள். அந்தப்படத்தில் சிறுமி ஒருத்தி தனது தந்தையாருடன் 'லண்டன் ஐ' கண்ணாடிக் கூண்டுக்குள் இருந்து இலண்டன் மாநகரைப் பார்க்கிறாள். பருந்துப் பார்வையாக அவள்காணும் காட்சிகளை நாமும் பார்த்தும் உணர்ந்தும் கொள்கிறோம். படத்திலே தேம்ஸ்நதி, பாராளுமன்றம், பிக்பென் மணிக்கூண்டுக் கோபுரம், தேம்ஸ்நதியின் மேலுள்ள பாலங்கள் இவையெல்லாம் எமக்கு கைக்கெட்டிய தூரத்தில் எம்மைநோக்கி வந்துபோகின்றன. நாம் எமது கைகளை நீட்டி அவற்றை ஸ்பரிசிக்கவும் ஆசைப்படுகிறோம். கலர் கலரான காட்சிகள், அவற்றிற்கேற்ற நவீன பாணியிலான இசை. தேம்ஸ் நதியில் இடம்பெறும் வாணவேடிக்கையின்போது வாணக்கொட்டுகளில் இருந்து சொரியும் நெருப்புப் பொறிகள் எம்மைச் சுட்டெரித்து விடுமோ என ஏற்படுகிற பயம்.... திடீரென இலண்டன் நகரத்தில் பனிகொட்டுகிறது. நாமும் அந்தப்பனியிலே நனைகிறோம்! - எப்படி? தியேட்டருக்குள் செயற்கையாகப் பனிப் பொழிவை ஏற்படுத்திவிடுகிறார்கள். நிலத்திலே காலுக்கடியில்

அதிர்வு. இப்படியெல்லாம் புதிய புதிய அனுபவங்களை அதிநவீன தொழில்நுட்பம் மூலம் ஏற்படுத்தி விடுகிறார்கள். பார்க்கப் பார்க்கப் பரவசமாக இருக்கிறது.

எத்தனைகோடி இன்பம் வைத்தாய் இறைவா இறைறைவா என இயற்கையைப் பார்த்து மெய்மறந்து பாடுவான் பாரதி. பாரதியின் அந்த வரிகளை அங்கே செயற்கையின் துணைகொண்டு ஆக்கிக் காட்டுகிறார்கள்.


'இலண்டன் ஐ'யினது முக்கியத்தை அறிந்துகொள்ள சில தரவுகள் எமக்கு உதவுகின்றன. உலக அதிசயங்களைப் பார்க்க வருடா வருடம் செல்லும் உல்லாசப் பயணிகளின் தொகையுடன் ஒப்பிட்டு நோக்க எமக்கு இந்தத் தரவுகள் உதவுகின்றன. இந்த 'இலண்டன் ஐ'யை பார்த்து மகிழ வருடத்தில் 37இலட்சத்து ஐம்பதினாயிரம் பேர்வரை வருகிறார்கள். ஈஜிப்ற் பிரமிட்களைப்பார்க்க 30 இலட்சம் மக்கள் வருடத்தில் செல்கிறார்கள். தாஜ்மகாலைப் பார்க்க 24 இலட்சம் மக்களே வருடத்தில் செல்கிறார்களாம். இவை 'இலண்டன் ஐ' பற்றிய கைநூலில் காணப்படும் தகவல்கள். இந்தத் தகவல்களையெல்லாம் எமக்கு வாசித்துக்காட்டி மைத்துனரின் மகள் சந்தியா பெருமைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

அதனைக் கேட்டுக்கொண்டிருந்த எனது மனைவி கூறினாள், "இலண்டன் ஐ எமக்குப் பிரமிப்பைத் தருகிறதுதான். ஆனால் இதனைப் பார்க்கவென்றே யாரும் இலண்டனுக்கு வருவதில்லை வந்த இடத்தில் பார்க்கிறார்கள்; அவ்வளவுதான். ஆனால் உலக அதிசங்கள் அப்படியல்ல. அவற்றுக்குப் பின்னால் வரலாறுகள் இருக்கின்றன. உதாரணமாக தாஜ்மகாலை எடுத்துக்கொண்டால் அது உலகின் சாகா வரம்பெற்ற காதல் சின்னம். மன்னன் ஷாஜகான் தன் மனைவியின் நினைவாகக் கட்டி எழுப்பிய காதற்கோட்டை. தாஜ்மகாலின் அழகையும் கலை நுட்பத்தையும் பார்த்த வெளிநாட்டவர்கள் அது மனிதப்படைப்பல்ல தெய்வப்படைப்பு என அதிசயித்துக் கூறியிருக்கிறார்கள். உலக அதிசயங்களை இந்தவேடிக்கை மையத்துடன் ஒப்பிடக்கூடாது.." என விளக்கம் கொடுத்தாள்.

**மேடம் ரூசட் (Madame Tussatd) மெழுகுப் பொம்மை அருங்காட்சிச் சாலை.**

இலண்டன் செல்பவர்கள் தவறாமல் பார்க்க வேண்டிய இடங்களில் ஒன்று மேடம் டூசட் அருங்காட்சிச் சாலை. அங்கு உலகத் தலைவர்களின் சிலைகள் உள்ளன. அவற்றோடு நின்று புகைப்படம் எடுத்துக்கொள்ளலாம் என்ற விபரத்தை மைத்துனர் என்னிடம் கூறியிருந்தார். அந்த அருங்காட்சிச் சாலையை அடைந்தபோது நுழைவாயிலில் நீண்ட கியூவரிசை இருப்பதைப் பார்த்தேன். சிலைகளைப் பார்ப்பதற்கா இந்த நீண்ட வரிசை என எண்ணினேன்.

நான் இலண்டனில் இருந்த காலத்தில் அவதானித்த ஆங்கிலேயர்களது கியூவரிசைப் பழக்கம் பற்றிச் சொல்லித்தான் ஆகவேண்டும். எந்த இடத்திலும் அவர்கள் கியூவரிசை முறையைத்தான் பின்பற்றுவார்கள். எந்தக் காரணம் கொண்டும் முண்டியடித்து முன்செல்ல மாட்டார்கள். பஸ்ஸில், றெயிலில் ஏறும்போதும் வங்கியில், தபாற்கந்தோரிலும் எங்கு பார்த்தா லும் கியூ ஒழுங்கைப் பின்பற்றுவார்கள். ஒரு கருமபீடத்தை




மெழுகுப் பொம்மை –
விஞ்ஞானி ஐன்ஸ்டீன்




**மெழுகு மாளிகையில் எமது கார்ப் பயணம்.**
**மகாராணி எலிஸெபத் பார்க்கிறார்.**

அடைவதற்கு இரண்டு பேர்மட்டுமே இருந்தால்கூட பக்கம் பக்கமாக நிற்கமாட்டார்கள் ஒருவர் பின்னாக ஒருவராகத்தான் நிற்பார்கள். சிறுவர்கள்கூட மிகவும் பொறுமையாக கியூவிலே நிற்பார்கள். கியூ பழக்கம் அவர்களது இரத்தத்தில் ஊறிய ஒரு பழக்கம் என்றே நான் காண்கிறேன்.

கியூவில் எங்களது முறை வந்ததும் ரிக்கற் வாங்கிக்கொண்டு உள்ளே சென்றோம். உள்ளே சென்று பார்த்தால் ஒரே பிரமிப்பாக இருந்தது. சிலைகள் யாவும் சத்தியத்தின் சத்தியமான உயிர்ப்போடு இருந்தன. மறைந்து போனவர்களும், இன்று உயிரோடுள்ளவர்களுமான உலகப் பிரபலங்களை உயிரோட்டத்துடன் சிலையாக வடித்திருந்தார்கள். அந்தச் சிலைகளின் கண்களில் ஒளிரும் பரவசம், உதட்டோரத்தில் நெளியும் புன்னகை, வெள்ளைத்தோலின் ஊடாக தெரியும் நீலநிற நாடி நரம்புகள், கன்னக் கதுப்புகளில் எட்டிப்பார்க்கும்

பூனை மயிர் - என மெழுகு வார்ப்புக் கலையின் அற்புதத்தை அங்கு கண்டேன்.

நாம் வாழ்நாளில் சந்திக்க முடியாத, தொட்டுக்கொள்ள முடியாத பிரபலங்களோடு நின்று நாம் புகைப்படம் எடுத்துக் கொள்ளலாம். இளைஞர்களும் சிறுவர்களும் தமக்குப் பிடித்த விளையாட்டு வீரர்கள், பாடகர்கள் ஆகியோருடன் நின்று படம் எடுத்துக்கொண்டார்கள். சிலர் ஹொலிவூட் நடிகர்களுடன் நின்று படம் எடுத்தார்கள். இந்திரா காந்தியும் மகாத்மா காந்தியும் அருகருகே நின்றார்கள், நெல்சன் மண்டேலா ஒரு புறத்தில் நின்றிருந்தார். இளவரசி எலிசபெத் குடும்ப சமேதரராய் நின்றிருந்தார். ஹிட்லர் தனக்கேயுரிய கம்பீரத்துடன் நின்றிருந்தார். கிரிக்கட் வீரர் டெண்டுல்காருடன் பலர் படம் பிடித்துக் கொண்டு நின்றார்கள். இதில் முக்கியமாக நான் கவனித்த விடயம் என்வென்றால் இந்தப் பிரபலங்கள் எவ்வாறு ஆடை அணிகளுடன் காட்சிதருவார்களோ அதனையும் நுணுக்கமாகக் கவனித்துச் செயற்பட்டிருக்கிறார்கள் என்பதுதான்.

இவற்றைப் பார்த்துவிட்டு வேறொரு பகுதிக்குச் சென்றால் அது இருண்ட பகுதியாக விளங்கியது. பன்னிரண்டு வயதுக்குக் குறைந்த சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், இரத்த அழுத்தம் உள்ளவர்கள், அந்தப் பகுதிக்குள் செல்லவேண்டாம் என்ற அறிவிப்பு அங்கு காணப்பட்டது.

கூட்டத்தோடு கூட்டமாக அந்த இருண்ட பகுதிக்குள் தள்ளப்பட்டோம். இருளான பகுதிக்குள் இருந்து கோரமான உருவம் ஒன்று வீரிட்டுக் கத்தியபடி எங்கள்முன் பாய்ந்தது. முன்னால் சென்றவர்கள் பயத்தினால் ஏதோ மொழியில் கத்தினார்கள். “ஐயோ” என எனது மொழியில் நான் கத்தினேன். பெண்களின் அலறல் பயப்பிராந்தியை அதிகமாக்கியது. நான்கு அடி முன்னேறியிருப்போம், ஒரு சிதைவடைந்த முகத்தோடு ஒருவன் தவழ்ந்து வந்து காலடியில் பயமுறுத்தினான். அதையும் தாண்டி முன்னால் நகர்ந்தால் ஆடைகளிலிருந்து இரத்தம் சொட்டச் சொட்ட இன்னொருவன் எங்களை நோக்கிக் கைகளை நீட்டியபடி ஓடிவந்தான். மனைவி என்பின்னால்

உறைந்து மறைந்து கொண்டாள். பலரும் அலறியடித்தபடி அரண்டோடிக்கொண்டிருந்தார்கள். ஆனானப்பட்ட பேய்கள் எல்லாம் அங்கே இருந்தன. எங்கிருந்தாவது ஏதாவது எங்கள் மேல் வந்து விழுந்து விடுமோ என்று பயந்து நடுங்கியபடி நடந்தோம்.

வேறொரு கட்டிடத்துக்குள் நுழைந்தோம்.

இலண்டனில் புகழ் பெற்ற 'பிளனட்டோறியம்' என்று அதனைக் குறிப்பிடுகிறார்கள். அங்கு டிஜிட்டல் தொழில் நுட்பம்மூலம் ஆகாயத்தை - பிரபஞ்சத்தை, வட்ட வடிவிலான திரையில் படைத்து அதிலே கோள்கள் சுழல்வதைக் காட்டுகிறார்கள். கோள்களுக்கு இடையிலான தூரங்கள், கோள்களுக்கு இடையிலான உருவ வேறுபாடுகள், இரவு பகல்களின் தோற்றப்பாடுகள் அத்தனையும் தத்ரூபமாக அமைந்திருந்தன.

இவற்றையெல்லாம் தாண்டி மறுபகுதிக்குள் நடந்தால் முற்காலத்தில் எப்படியெல்லாம் கொலைத்தண்டனை நிறைவேற்றினார்கள் என்பதை விளக்கும் செயன்முறைக்காட்சி காண்பித்தார்கள். கழுவேற்றும் காட்சி, கத்தியால் தலையைத் துண்டாடும் காட்சி, இவற்றின் பின்னால் கையில் விளக்கு ஏந்தியபடி தாயொருத்தி பிணக்குவியல்களுக்குள் யாரையோ தேடிக்கொண்டிருந்தாள்.

அங்கிருந்து பயப்பிராந்தியுடன் வெளியே வந்தோம். வாசலில் மெழுகு நாய் ஒன்று ஒவ்வொருவரையும் பார்த்து தன்பாட்டில் தலையாட்டிக் கொண்டிருந்தது. அங்கே ஒருவர் எழுதுகோலால் எழுதுவதும் பின் சிந்தித்து தலையாட்டிக் கொண்டிருப்பதுமாகக் காட்சிதந்தார்.

இதன் பின்னர் தொடராக வந்து கொண்டிருந்த பழையமொடல் கார்களில் ஏறி பிறிதொரு அதிசய உலகினுள் பயணிக்க வைக்கிறார்கள். பண்டைய அரசர்கள், பிரபுக்கள், மகாராணிகள், பிச்சைக்காரர்கள், வாளேந்தும் வீரர்கள், செங்கோல்மன்னர்கள், கோமாளிகள், அறிஞர்கள், என நாங்கள் பயணித்த காரின் இருமருங்கிலும் நின்று எங்களுக்கு கையசைக்கிறார்கள். சிலர் தலை அசைத்துப் புன்னகைக்கிறார்கள். இந்தப் பயணத்தின்போது

‘சிரியுங்கள் உங்கள் புகைப்பட இலக்கத்தைக்குறித்துக் கொள்ளுங்கள்’ என எழுதியிருப்பதைக் கவனித்தேன். அந்தப் புகைப்படங்களை நாம் வெளியேறும்போது வாசலில் பெற்றுக் கொண்டோம்.

மெழுகிலே செய்த உருவங்களால் இதுவரை நேரமும் எம்மை ஆட்டிப்படைத்திருக்கிறார்களே என நினைத்து வியந்துபோனேன்.

இந்த மெழுகுப்பொம்மை அருங்காட்சிச் சாலை 1902ஆம் ஆண்டு மேடம் டூசட் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. 1925இல் மின்சாரக் கசிவினால் பல பொம்மைகள் எரிந்து போயினவாம். 1940ஆம் ஆண்டில் உலக மகா யுத்தத்தின்போது விமானத் தாக்குதலால் 352 தலை அச்சுக்கள் சேதமாகினவாம்.

1794 இல் மேடம் டூசட் தனது 89ஆவது வயதில் காலமானார். தற்போது இந்த மெழுகுப் பொம்மை கண்காட்சிச்சாலை அவரது வாரிசுகளின் பராமரிப்பில் உள்ளது.



# 7

# பிரித்தானிய அருங்காட்சியகத்தில் எமது முன்னோரின் அரும்பெருஞ் செல்வங்கள்

எங்களது இலண்டன் பயணத்தின் முக்கிய நோக்கம் அங்கு நடைபெற்ற உலகத்தமிழியல் மாநாட்டில் கலந்து கொள்வதுதான் என்பதை முன்னரே குறிப்பிட்டிருந்தேன். அந்த மாநாடு முடிவடைந்த மறுநாள் இலண்டன் நகரினை பேராளர்கள் சுற்றிப்பார்ப்பதற்கு மாநாட்டு அமைப்பாளர்கள் ஒழுங்கு செய்திருந்தனர். அதில் இலங்கை இந்திய மலேசியப் பேராளர்கள் சிலர் கலந்து கொண்டனர். அவ்வாறு பேராளர்களுடன் சேர்ந்து சுற்றிப்பார்த்த இடங்களில் ஒன்றுதான் பக்கிங்காம் அரசமாளிகை.

நாங்கள் அந்த மாளிகையை உள்ளே சென்று பார்க்கக் கூடிய காலநேரத்தில் செல்லாததால் அந்த மாளிகை தொடர்பான விடயங்கள் அடங்கிய விபரங்களை முன்னாலுள்ள தகவல் வழங்கும் நிலையத்தில் பெற்று அறிந்து கொண்டோம்.

அந்த மாளிகை இங்கிலாந்து அரசரின் அதிகாரபூர்வமான இல்லமும் பணியிடமும்

ஆகும். இந்த அரண்மனைக்கு செல்லும் பாதையை மோல் (Mall) என அழைக்கிறார்கள்.

இந்த மாளிகை 1703ஆம் ஆண்டில் பக்கிங்காம் பிரபு ஷெவ்வீல்ட்டுக்காகக் கட்டப்பட்டதாம்.. பின்பு1761ல் மூன்றாவது ஜோர்ஜ் என்பவருக்கு விற்கப்பட்டது. அவரது வாரிசான நான்காவது ஜோர்ஜ் அதனைத் திருத்தி அமைத்தார். 1837ல் அரசி விக்டோரியா பொறுப்பேற்றபின்னர் இந்த மாளிகை அரச குடும்பத்தினரின் இடமாகியது.1901ல் ஏழாம் எட்வேர்ட் மன்னர் அரியணை ஏறிய பின்னர் நடன அறை, பிரமாண்ட நுழைவாயில், மார்பிள் அறை, பிரமாண்ட படிகள், கூடங்கள் யாவும் பாலாடை வெள்ளை நிறமும் தங்க முலாமும் பூசப்பட்டன. 1913ல் மேலும் அம்மாளிகையின் முகப்புப் பகுதிகள் திருத்தி அமைக்கப்பட்டன. ஆனாலும் இந்த மாளிகை இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது ஜேர்மன் வெடி குண்டுகளால் அழிந்தது. பின்னர் புனருத்தாரணம் செய்யப்பட்டது. இவ் அரண்மனையில் 19 பெரிய அறைகளும் 52 முக்கிய படுக்கை அறைகளும் 188 பணியாளர் படுக்கை அறைகளும் 92 அலுவலகங்களும், 78 கழிப்பறைகளும் உள்ளன.



**சுற்றுலாவில் கலந்துகொண்ட பேராளர்களில் ஒரு பகுதியினர்.**

1990ல் இருந்து அரண்மனையின் ஒரு பகுதி பொது மக்கள் பார்வைக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட 19 பெரிய அறைகளில் உலகின் மிகப்பிரபலமான ஓவியர்கள் தீட்டிய ஓவியங்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன.

பக்கிங்காம் அரண்மனைக்கு வெளியே கண்ணைக்கவரும் இரண்டு பூந்தோட்டங்கள் உள்ளன. இவற்றில் 350 வகையான பூக்கள் பூத்துக்குலுங்கி பார்வையாளர்களை மகிழ்விக்கின்றன. அருகே அரச குடும்பத்தினருக்குச் சொந்தமான குதிரைலாயங்கள் உள்ளன. இவற்றிற்குத் தெற்குப் புறத்தில் மிகப்பெரிய ஏரி ஒன்றுள்ளது. இந்த அரண்மனையைச் சுற்றிப்பார்க்க சுமார் மூன்று மணி நேரம் எடுக்கும் எனக் கணக்கிட்டுள்ளார்கள்.

அரண்மனைக்கு அண்மித்தான பகுதியில் மிகப்பெரிய பணக்காரர்களும் ஹொலிவூட் நட்சத்திரங்களும் வசிக்கின்றனர் என அறிய முடிந்தது. இந்தியத் தொழில் அதிபர்களான இந்துஜா சகோதரர்களுக்கும் இப்பகுதியில் ஒரு மாளிகை இருப்பதாகவும் அதனை அவர்கள் 1000 கோடி இந்தியரூபாய் கொடுத்து வாங்கினார்கள் எனவும் அறியமுடிந்தது.

அரண்மனையைப் பார்க்கவென தினமும் நூற்றுக்கணக்கான வெளிநாட்டவர்கள் கூடுகின்றனர். பலர் அரண்மனையின் முன்நின்று தம்மைப் புகைப்படம் எடுத்துக் கொள்கின்றனர். இந்த அரண்மனையின் முன் அரசகாவலர்கள் எந்த நேரமும் ஆடாமல் அசையாமல் நின்று கொண்டிருப்பார்கள். தினமும் பகல் 11மணிக்கு அவர்களது பணிமாற்றம் இடம்பெறும். அக்காட்சியைக் காண்பதற்கெனவும் அவ்வேளையில் பலர் அரண்மனையின் முன்னால் காத்திருப்பர்.

இந்த அரண்மனையில் முதன்முதலிலில் வசித்த அரசி விக்டோரியா என்பதை முன்னரே குறிப்பிட்டிருந்தேன். 1200 வருட பிரித்தானிய அரச வரலாற்றில் இந்த அரசியின் அரசாட்சிக்காலம் மிகமுக்கியமானது. பிரித்தானிய வரலாற்றில் அதிககாலம் அரசோச்சியவர் இவரே. இவர் 64 வருடகாலம்



**விக்டோரியா மகாராணியின் சிலையின் முன்னால் சீனத் தம்பதிகளின் திருமணம்**

அரசாட்சி செய்தார். (1837-1909) இவர் தனது 18ஆவது வயதிலேயே அரசியாக முடி சூட்டப்பட்டார். இவரது மாம னாரான அரசர் நான்காவது வில்லியம் அவர்கள் பிள்ளைகள் இல்லாமல் இறந்துவிடவே வாரிசான இவருக்கு அரசாட்சி வந்துசேர்ந்தது. இவரது காலத்திலேதான் பிரித்தானியா உலகின் பெரிய வல்லரசாக இருந்தது. நமது நாடாகிய இலங்கை உட்பட உலகின் காற்பங்கு நிலப்பரப்பு பிரித்தானிய வல்லரசின் கீழ் இருந்தது. 1877ல் இவர் இந்தியாவின் பேரரசியாகவும் பிரகடனப்படுத்தப்பட்டார். இவருக்கு 9 பிள்ளைகள். 40 பேரப்பிள்ளைகள். 37 பீட்டப்பிள்ளைகள். இவர்களுக்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள அரச குடும்பங்களில் திருமணங்கள் செய்துவைத்து ஐரோப்பா எங்கும் தனது உறவுகளை விஸ்தரித்தார் மகாராணி.

தற்போதுள்ள இரண்டாவது எலிசபெத் மகாராணி இவரது பூட்டியாவர். இவரது தாயார்தான் முதலாவது எலிசபெத் மகாராணி. அவர் 102 ஆண்டுகள் வாழ்ந்தவர். (1900-2002) தாயாரது வாழ்க்கை யையும் நடைமுறைகளையும் பின்பற்றி அமைதியாக வாழ்க்கை நடத்தும் இந்த மகாராணியின்மேல் நாட்டு மக்கள் பெருமதிப்பு வைத்திருக்கிறார்கள்.

எலிசபெத் மகாராணி 21-04-1926ல் பிறந்தவர். தற்போது இவருக்கு வயது 88 ஆகிறது. இவருக்கு நான்கு பிள்ளைகள். சார்ள்ஸ் இளவரசர்(1948), இன்று இவர் வேல்ஸ் இளவரசர் என அழைக்கப்படுகிறார். இளவரசி ஆன் (1950), இளவரசன் ஆன்ட்ரூ (1960) இன்று அவர் டியூக் ஒப் யோக் என அழைக்கப்படுகிறார்,

இளவரசர் எட்வேர்ட் (1964) இப்போது ஏர்ள் ஒப் வெஸெக்ஸ் என அழைக்கப்படுகிறார். சார்ள்ஸ் இளவரசர் முதலில் டயானாவை திருமணம் செய்தவர். இவர்களிடையே மனமுறிவு ஏற்பட்டு விவாகரத்தில் முடிந்து விட்டது. இதற்குக் காரணம் சாள்ஸ் இளவரசர் கமீலா பாக்கர் என்பவருடன் இரகசியத் தொடர்பு கொண்டிருந்ததுதான் எனக் கூறப்படுகிறது. கமீலா ஏற்கனவே திருமணமானவர்.



**விக்டோரியா மகாராணி**

சாள்ஸைத் திருமணம் செய்வதற்காக சொந்தக் கணவனிடமிருந்து விவாகரத்துப் பெற்றவர். அரச சம்பிரதாயம் விவாகரத்துப் பெற்ற ஒருவரை மறுமணம் செய்ய ஏற்றுக்கொள்வதில்லை. ஆனாலும் பெரும் சர்ச்சைகளுக்கும் சிக்கல்களுக்குமிடையே சாள்ஸ்- கமிலா திருமணம் நடந்தேறியது.

சாள்ஸ் இளவரசருடனான திருமண முறிவின்பின் டயானா பிரபல செல்வந்தரான டோடி என்பவருடன் இரகசியத் தொடர்பு கொண்டிருந்தார். இருவரும் பாரீஸ் நாட்டில் கார் விபத்துக்குள்ளாகி இறந்தனர். அது தொடர்பாக அரச குடும்பத்தினரைச் சம்பந்தப் படுத்தி பாரதூரமான செய்திகள் வெளிவந்தன.

இவற்றையெல்லாம் எலிசபெத் மகாராணி பொறுமையுடன் தாங்கிக்கொள்ள வேண்டியிருந்தது.

பட்டத்து இளவரசர் சாள்ஸுக்கும் டயானாவுக்கும் பிறந்தவர்கள் வில்லியமும் ஹரியும் இவர்களும் பட்டத்து இளவரசர்கள்தான். இவர்கள் இருவருமே காதலித்து திருமணம் செய்துகொண்டவர்கள். அண்ணா வில்லியம் கேற் மிடில்ரன் என்ற பெண்ணையும், தம்பி

ஹரி செல்ஸி என்ற பெண்ணையும் காதலித்து மணந்தார்கள். இந்தப் பெண்கள் இருவருமே அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். இதன்காரணமாக பத்திரிகைகளில் இவர்களைப் பற்றிய செய்திகளும் கிசுகிசுக்களும் வெளிவந்து தற்போது அடங்கிப் போயுள்ளன.


இந்த பக்கிங்காம் மாளிகையின் எதிர்ப்புறத்தில் விக்டோரியா அரசியின் அழகான சிலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இச்சிலையோடு ஒட்டிய படிக்கட்டுகளில் அமர்ந்து பலர் புகைப் படம் எடுத்துக் கொள்கிறார்கள்

இந்த விக்டோரியா மகாராணியின் சிலையின் முன்னால் நின்று சுற்றுலாவரும் சோடிகள் சிலர் தமது திருமணத்தை நடத்துவார்களாம். நாங்கள் அங்கு சென்றவேளை ஒரு சீன இளஞ்சோடியின் திருமணத்தைக் கண்டு களிக்கக் கூடியதாக இருந்தது. அந்தத் திருமணத் தம்பதிகளுக்கு நாமும் வாழ்த்துத் தெரிவித்து மகிழ்ந்தோம்.

**பிரித்தானிய அருங்காட்சியகம்**

இந்த அருங்காட்சியகம் 250 வருட வரலாற்றைக்கொண்டது. 1660ல் பிறந்த சேர் ஹான்ஸ் ஸ்லேன் என்ற வைத்தியர் தனிப்பட்ட ரீதியில் அருங்காட்சிப் பொருட்களைச் சேகரிக்கத் தொடங்கினார். 1753ல் அவர் இறந்தபோது 79575 பொருட்களை அவர் சேகரித்திருந்தார். தான் இறந்தபின் அவற்றைத் தேசியச் சொத்தாக்கும்படி அப்போதிருந்த இரண்டாவது ஜோர்ஜ் மன்னரிடம் வேண்டியிருந்தார். அதற்கு அமையவே பிரித்தானிய அருங்காட்சியகம் உருவாக்கப்பட்டது. 1759 ஜனவரிமாதம் 15ஆம் திகதி பொதுமக்களின் பார்வைக்கு இந்த அருங்காட்சியகம் திறந்துவைக்கப்பட்டது.


அதன்பின்னர் பல பொருட்கள் இங்கு அன்பளிப்புகளாக வந்து சேர்ந்தன. அக்காலத்தில் புகழ்பெற்றவரான உலகம் சுற்றும் கடலோடியும் அவுஸ்திரேலியாக் கண்டத்தைக் கண்டுபிடித்தவருமான கப்ரின் ஜேம் குக் என்பவர் தனது கடல்பயணங்களின்போது கிடைத்த அரிய பொருட்களை இந்த அருங்காட்சிச்சாலைக்கு



**விக்டோரியா மகாராணியின் கீரிடத்தில் பொறிக்கப்பட்ட கோஹினூர் வைரம்**



**சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட 5000 ஆம் வருடங்களுக்கும் முந்திய இலச்சினைகள்**



**அசோக மன்னனின் (கி.மு 3ஆம் நூற்) தூண் ஒன்றிலிருந்து பெறப்பட்ட பிராமி எழுத்துக்கள்.**
**(இந்திய மொழி வரிவடிவங்களின் முன்னோடி)**

வழங்கினார். சேர் வில்லியம் ஹமில்ரன், கிறீக் தேசத்திலிருந்து பல அரிய பொருட்களை இரண்டு வள்ளங்களில் அனுப்பிவைத்தார். சாள்ஸ்ரவுண்லி என்பவர் உரோமா புரிப் பொருட்களை விற்றார். நெப்போலியன் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அங்கிருந்து ஈஜிப்ற் தொல்பொருட்கள் கிடைத்தன. 1816ல் ஏதென்ஸ் நகரத்திலிருந்து பலவிதமான மாபிள் கற்கள் கிடைத்தன. எல்கின் பிரபு கிறீஸ் நாட்டுத் தொல்பொருட்களை 1802ல் விற்றார். உலகநாடுகளில் அக்காலகட்டத்தில் இருந்த பிரித்தானியத் தூதுவர்கள் பலர் அந்தந்த நாடுகளில் இருந்த தொல்பொருட்களைத் தமதாக்கி அனுப்பிவைத்தனர். மேற்குறிப்பிட்ட தகவல்கள், பிரித்தானிய அருங் காட்சியகத்தைப் பற்றிய தக வல்கள் அடங்கிய பிரசுரங்களில் காணப்படுகின்றன.

ஆனாலும் உள்ளே சுற்றிப் பார்த்தபோது ஓர் உண்மை புலப் பட்டது. பிரித்தானியர்கள் உலக நாடுகள் பலவற்றைக் கைப்பற்றி தமது ஆட்சியின் கீழ்வைத்திருந்த காலத்தில் அந்த நாடுகளில் உள்ள தொல்பொருட்செல்வங்கள் பலவற்றை சூறையாடித் தமது



**இலங்கையில் இருந்து கொண்டுசெல்லப்பட்ட மகாயான பௌத்தமத பெண் தெய்வத்தின் (தாரா) வெண்கலச் சிலை (கி.பி. 8 ஆம் நூற்றாண்டு)**

நாட்டிற்கு எடுத்துச் சென்றுள்ளனர். அவை இன்று இந்த அருங்காட்சியகத்தின் காட்சிப்பொருட்களாக இருக்கின்றன.

எமது இலங்கைத் தீவிலிருந்து கொண்டு செல்லப்பட்ட பல பொருட்களும் அந்த அருங்காட்சியகத்தில் உள்ளன. அவற்றுள் 'தாரா' என்ற புத்த சமய பெண்தெய்வத்தின் சிலை என் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தது. கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சிலை எனக் குறிப்பிட்டுள்ளார்கள். பெண்தெய்வத்தின் வலது கரம் வரதகரமாக அமைக்கப்பட்டுள்ளது. வரதகரம் என்பது கொடுக்கும் கரம். வரமளிக்கும் கரம். அந்தத் தெய்வச் சிலை எனக்கு காசியில் அமைந்திருக்கும் அன்ன பூரணியின் சிலையை ஒத்ததான உணர்வினைத் தந்தது. இந்தச் சிலை மட்டக்களப்புக்கும் திருகோணமலைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்டு, சேர். றொபேட் பிறவுன்றிக் என்பவர் அதனை 1830ல் பிரித்தானியாவுக்குக் கொண்டுவந்துள்ளார். அனுராதபுரக் காலத்தில் மகாயான பௌத்தம் இலங்கையில் நிலவியதற்கு இச் சிலை சான்று பகர்கிறது என்ற குறிப்புகள் சிலையின் அருகில் காணப்படுகின்றன.

'மகாயான பௌத்தத்தில் கௌதம புத்தரைக் கடவுளாகக் கொள்வர். மகாயான பௌத்தம் சைனா, யப்பான் போன்ற நாடுகளில் தற்போது கைக்கொள்ளப்படுகிறது. இலங்கையில் தற்போது கைக்கொள்ளப்படும் தேரவாத பௌத்தத்தில் புத்தர் கடவுளாகக் கொள்ளப்படுவதில்லை. தேரவாத பௌத்தம் இலங்கையில் இருந்து கம்போடியா, தாய்லாந்து, பர்மா, லாஓஸ் போன்ற நாடுகளுக்குப் பரவியுள்ளது' என்ற தகவலை ஞா. பாலச்சந்திரனின் 'அங்கோர் உலகப்பெருங்கோயில்' (2013) பயணக் கட்டுரையில் படித்த ஞாபகம் அப்போது எனக்கு ஏற்பட்டது.

சிந்துவெளி நாகரீகம் பற்றி வாசகர்கள் அறிந்திருக்கலாம். வட இந்தியாவில் உள்ள சிந்து நதிப்பிரதேசத்திலே 5000 ஆண்டு களுக்கு முன்னர் ஒரு பழைமையான நாகரிகம் நிலவியுள்ளது என்பதையும் அங்கு சிவ வணக்கம் நிலவியுள்ளது என்பதையும் சேர். ஜோன் மார்ஷல், சேர் அலெக்ஸாண்டர் கண்ணிங்காம் முதலான

பேரறிஞர்கள் 1920 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி செய்து உலகுக்கு அறிவித்தனர். அங்கு ஹரப்பா, மொகஞ் சதாரா என்னும் நகரங்கள் இருந்தன. அந்நகரங்களில் பாழடைந்து கிடக்கும் பல விதமான கட்டி



**இலங்கையை ஆண்ட இராவண மன்னனின் சிலை**

டங்கள், சிற்பங்கள், கற்சிலைகள், தாயத்துகள், மிருகங்களின் உருவங்கள், மனிதர் யோகியர் உருவங்கள், என்பன காண்பவர்கள் எல்லோரையும் வியக்கவைத்தன. அங்கே கண்டெடுக்கப்பட்ட நாணயங்கள் முத்திரைகள் முதலியவற்றைக்கொண்டு 5478 ஆண்டுகளுக்கு முன்னரே சிவவழிபாடு இருந்தது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் கருத்தூன்றிக் கவனித்த சேர் ஜோன் மார்ஷல் என்னும் ஆராய்ச்சியாளர் சைவசமயம் சிந்துவெளி நாகரீகத்துக்கு முந்தியது என்றும் அது உலகிலேயே மிகவும் பழைமை வாய்ந்தது என்றும் அது இன்றும் நிலவிவருகிறது என்றும் கூறியுள்ளார். பிரித்தானிய அருங்காட்சியகத்தில் இந்தச் சிந்துவெளி நாகரீக அகழ்வுகளில் கண்டெடுக்கப்பட்ட இலச்சினைகள் பலவற்றை நான் பார்த்தேன். 5000 வருடங்களுக்கு முற்பட்ட எமது பண்பாட்டு வேர் ஒன்றை அங்கே பார்த்தது எனக்குப் பெரும் மகிழ்வையும் மன நிறைவையும் தந்தது.

நானும் மனைவியும் சிலவருடங்களின் முன்பு உலக அதிசயங்களில் ஒன்றெனக் கருதப்படும் தாஜ்மகாலைப் பார்க்கச் சென்றிருந்தோம். தாஜ்மகாலின் பிரமாண்டத்திலும் அழகிலும் மயங்கிய எங்களுக்கு ஒரு விடயம் மனதைப் பெரிதும் உறுத்தியது. தாஜ்மகாலின் நான்கு பக்கச் சுவர்களிலும் பதித்து

வைக்கப்பட்ட நவரத்தினங்கள் பல தோண்டி எடுக்கப்பட்டு சுவர்களிலே சிறு கோறைகள் காணப்பட்டன. அங்கு பதித்து வைக்கப்பட்ட நவரத்தினங்கள் தீபெத், சைனா, ஸ்ரீலங்கா, பேர்ஸியா, ஆப்பகானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து பெறப்பட்டதாக வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. பிரித்தானியர்கள் தமது ஆட்சிக் காலத்தில் இந்த நவரத்தினங்களைத் தோண்டி எடுத்து தமது நாட்டுக்குக் கொண்டு சென்று விட்டார்கள் எனக் கூறப்படுகிறது.

இந்த இடத்தில் கோஹினூர் வைரம் பற்றியும் கூற வேண்டியுள்ளது. உலகில் அதிகம் அறியப்பட்டதும் விலை மதிப்பற்றதுமான இந்த வைரம் இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்டது. வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களில் இந்து முஸ்லீம், முகலாயர், பேர்சியர், ஆப்கன், சீக்கியர், மற்றும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் சண்டையிடப்பட்டு கைமாறிக்கொண்டே இருந்தது. இறுதியாக கிழக்கிந்திய கம்பனி மூலமாகக் கைப்பற்றப்பட்டு மகாராணி விக்டோறியாவிடம் கையளிக்கப்பட்டது. விக்டோறியா மகாராணி 1877ல் இந்தியாவின் பேரரசியாக அறிவிக்கப்பட்டபோது மகாராணியின் கிரீடத்தில் பதிக்கப்பட்டது.


இந்தக் கோஹினூர் வைரத்தின் விலை மதிப்பைக் கூறுவதானால் இதனை விலை கொடுத்து வாங்கும் பணத்தில் உலக மக்கள் அனைவருக்கும் இரண்டரை நாட்கள் உணவளிக்க முடியும் என ஒரு வரலாற்று ஆசிரியர் கூறியுள்ளார்.

இந்த வைரம் இந்தியாவுக்குச் சொந்தமானது அதனைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள் என அவ்வப்போது இந்திய நாட்டின் சார்பில் கோரிக்கைகள் வைக்கப்படுகின்றன. அதற்குப் பதிலளித்த இங்கிலாந்தின் பிரதமர் டேவிட் கமரூன் அதனைத் திருப்பித் தரமாட்டோம். அப்படித் திருப்பித்தந்தால் பிரித்தானிய அருங்காட்சியகம் சோபை இழந்து விடும் என்று கூறியுள்ளார்.

பிரித்தானிய அருங்காட்சியகம் காலத்துக்குக் காலம் வளர்ச்சியடைந்து தற்போது பலபிரிவுகளாக பலகட்டிடங்களில் இயங்கிவருகிறது. பிரித்தானிய நூலகம், இயற்கை வரலாற்று அருங்காட்சியகம், போர் தொடர்பான அருங்காட்சியகம், டவர் லண்டன் அருங்காட்சியம் எனப் பலபிரிவுகள் உள்ளன.

உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் பல்வேறு அருங்காட்சிப் பொருட்களை பிரித்தானியர்கள் எப்படியெல்லாம் கொண்டுவந்து சேர்த்தார்கள் என்ற பலதரப்பட்ட விமர்சனங்களுக்கு அப்பால் அவர்கள் அவ்வாறு அந்தப்பொருட்களைக்கொண்டு சென்று தமது நாட்டில் பாதுகாப்பாக வைத்துக் காட்சிப்படுத்துவதனால் ஒரு பெரும் நன்மை ஏற்பட்டிருக்கிறது என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இங்குள்ள அருங்காட்சியகங்கள் மனிதப் பண்பாட்டின் கதையை அதன் தொடக்க காலத்திலிருந்து தற்காலம்வரை விளக்கி ஆவணப்படுத்துகின்றன. இத்தகைய பல்துறைசார்ந்த பரிணாம வளர்ச்சித் தடயங்களை இங்குதான் ஒன்றுசேரக் காணமுடிகிறது.

இந்த அருங்காட்சியகங்களில் ஏழு மில்லியனுக்கும் அதிகமான பொருட்கள் இருப்பதாக அறிய முடிந்தது. அவற்றையெல்லாம் பார்ப்பது சாத்தியமில்லை. பார்த்தவை எனது சிந்தையில் ஏற்படுத்திய உணர்வலைகளையே இங்கு பதிவுசெய்துள்ளேன்.



# 8

# பிரித்தானிய இயற்கை வரலாற்று அருங்காட்சியகமும் 'இம்பீரியல்' போர் வரலாற்று அருங்காட்சியகமும்

இலண்டனில் உள்ள பிரித்தானிய அருங்காட்சியகம் காலத்துக்குக் காலம் வளர்ச்சியடைந்து தற்போது பல பிரிவுகளாகப் பலகட்டிடங்களில் இயங்கி வருகிறது என்பதை சென்ற அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தேன். அத்தகைய பிரிவுகளில் ஒன்றாக விளங்குவது இயற்கை வரலாற்று அருங்காட்சியகம்.

கூர்ப்புக் கொள்கை என்று கூறப்படும் உயிரினங்களின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை அறிமுகம் செய்தவர் சாள்ஸ் டார்வின் என்ற சிந்தனையாளர். அவரது உருவச் சிலையை இந்த அருங்காட்சியகத்தின் மாடிப்படியின் வாசலில் அமைத்திருக்கிறார்கள்.

இந்த அருங்காட்சியகத்தைச் சுற்றிப் பார்த்தபோது சார்ள்ஸ் டார்வினின் கூர்ப்புக் கொள்கையின் பல்பரிமாணங்களைக் காணக் கூடியதாக இருந்தது. இவர் 1859ல் எழுதி வெளியிட்ட உயிரினங்களின் தோற்றம் (The




டைனோஸோர்

Origin of species) என்ற நூலில் தனது கூர்ப்புக் கொள்கையை விளக்கியுள்ளார்.

கூர்ப்புக் கொள்கைக்கு அமைய அவர் மனிதன் குரங்கிலிருந்து பிறந்தவன் எனக் குறிப்பிட்டார். அவருடைய இந்தக் கூற்று இங்கிலாந்தில் பெரும் வாதப்பிரதிவாதங்களை எற்படுத்தியது. அதற்கு முக்கியமான காரணம் இங்கிலாந்தில் ஆண்டாண்டுகாலம் நிலவிவந்த கடவுள் கொள்கைக்கு மாறானதாக இவரது கூர்ப்புக் கொள்கை இருந்ததுதான்.

டார்வின் தனது கூர்ப்புக்கொள்கையை எழுந்தமானத்தில் கூறிவிட வில்லை. தன் நண்பர் ஒருவரின் உதவியுடன் கப்பலில் ஐந்து வருடங்கள் பயணம் செய்து உலகை வலம்வந்து பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அதுவரை அறியப்படாத பலவிநோதமான விலங்குகளின் எலும்புகளைச் சேகரித்தார். ஊர்வன, நடப்பன, பறப்பன என எல்லாவிதமான உயிரினங்களையும் ஆராய்ந்தார். அவை இடத்துக்கிடம் மாறுபட்டிருப்பதையும் சில ஒற்றுமைகளைக் கொண்டிருப்பதையும் கண்டு வியந்தார். தான் சேகரித்த எலும்புகளுக்குச் சொந்தமானவை முற்றாக அழிந்து

போயிருக்கும் என்று முதலில் யூகித்தார் ஆனால் பின்னர் அந்த விலங்குகளில் இருந்துதான் தற்போதைய சிறிய அளவிலான விலங்குகள் தோன்றியிருக்கவேண்டும என்று பகுத்தறிந்தார். அதன்பின்னரும் தொடர்ந்து ஆராய்ச்சிகள் மேற்கொண்டு தனது முடிவுகளை நூலாக வெளியிட்டார்.

டார்வினின் கூர்ப்புக் கொள்கை மீதான எதிர்ப்பாளர்கள் இன்றும் இருக்கிறார்கள். ஆனாலும் உலகளாவிய ரீதியில் அவரது கூர்ப்புக் கொள்கை மாணவர்களுக்குத் தொடர்ந்தும் கற்பிக்கப்படுகிறது. உயிரினங்களின் தோற்றம் வளர்ச்சி பற்றிய மனுக்குல அறிவை விருத்தி செய்ததில் டார்வின் என்ற தனி ஒரு மனிதன் மிகப்பெரிய பங்களிப்பைச் செய்திருக்கிறார் என்பதுதான் உண்மை.

இந்த இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தில் கடந்த நானூறு வருடங்களாக உலகளாவிய ரீதியில் சேகரிக்கப்பட்ட 700 இலட்சம் பொருட்கள் இருப்பதாக அறிய முடிந்தது.

இந்த அருங்காட்சியகத்தின் நுழைவாயில் மண்டபம் மிகப்பெரியது. இந்த மண்டபத்தின் நடுவிலே மிகப்பெரிய 'டைனோஸோர்' என்ற பிராணியின் எலும்புக் கூட்டைக் காட்சிப் படுத்தியுள்ளார்கள். டைனோஸர் என்பது பலகோடி வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த ஒரு விலங்கினம். இந்த மண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கும் டைனோஸருக்கு 'டிப்பி' என்று அங்குள்ளவர்கள் செல்லப்பெயர் வைத்திருக்கிறார்கள். டைனோஸர் என்பது பல்லிபோன்ற தோற்றமுடிய பிராணி. இதில் சிறிதும் பெரிதுமான பல்வகை இனங்கள் உள்ளன. இதுவே உலகின் முதலாவதாகக் காட்சிப்படுத்தப்பட்ட மிகப்பெரிய டைனோஸர் என்று குறிக்கப்பட்டுள்ளது. இந்த விலங்கின் நீளம் 26 மீற்றர். இந்த விலங்குக்கு 70 முள்ளந்தண்டு எலும்புளும் 292 ஏனைய எலும்புகளும் உள்ளன. இதனை அமெரிக்காவில் இருந்து கொண்டுவந்து 1905ல் இந்த அருங்காட்சியத்தில் வைத்துள்ளார்கள். இந்த விலங்கு நீண்ட கழுத்தையும் நீண்ட வாலையும் உடையது. அதன் உடம்பு பீப்பா போன்று தோற்றமளிக்கிறது. கால்கள்

பாரிய தூண்கள் போன்று அமைந்துள்ளன. கூரிய பற்கள் கொண்ட இந்த விலங்குகள் சிங்கத்தின்வாயின் கடிப்பலத்தை விட மூன்று மடங்கு கடிப்பலம் உடையதாம். ஆனாலும் இவை தாவர போஷணிகள். இந்த டைனோஸோர்தான் இந்த அருங்காட்சியகத்தின் கவனயீர்ப்பாக அமைந்துள்ளது.

ஆரம்பகாலங்களில் இந்த விலங்கின் வால் பகுதியை நிலத்திலே படர விட்டிருந்தார்களாம். ஆனால் 1993ல் மேற்கொண்ட ஆய்வுகளின்படி இந்த டைனோஸரின் வால் நிலத்திலே படியாமல் தூக்கியபடி வைத்துள்ளார்கள். இந்த விலங்கு தனது சமநிலையைப்பேணி நகர்வதற்கு வால் உயர்ந்தே இருக்க வேண்டும் எனக் கண்டறிந்துள்ளார்கள்.

இந்த டைனோஸர் விலங்குகளைவைத்து சிறுவர்க்கான ஆங்கிலப்படங்கள் பல சிலகாலத்திற்கு முன்னர் திரையிடப்பட்டமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இந்த அருங்காட்சியகத்தில் உயிரற்ற பலவிதமான பறவைகள், ஜந்துக்கள், இரத்தினக் கற்கள், வண்ணத்துப் பூச்சிகள் விலங்குகள், மனிதரின் மண்டை ஓடுகள், மிருகங்களின் மண்டை ஓடுகள், தாவரங்கள், உலோகங்கள் எனப் பலவற்றைப் பார்க்கலாம். இவற்றுள் பெரும்பாலானவை பத்து லட்சம் ஆண்டுகளுக்கு முந்தியவை. பல்வேறு நாடுகளிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டவை.

இங்கே ஒரு பறவையின் முட்டை பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இதனை யானைப்பறவையின் முட்டை எனக் குறித்திருக்கிறார்கள். இது 88 சென்ரிமீற்றர் நீளமும் நடுப்பகுதியில் 76 சென்ரிமீற்றர் சுற்றளவும் கொண்டது. இந்த முட்டைக்குச் சொந்தமான யானைப்பறவை மூன்று மீற்றர் உயரமும் 500 கிலோ எடையும் உடையது. 1650 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த இந்தப்பறவையினம் தற்போது உலகில் இல்லை என்ற தகவலும் அங்கே காணப்பட்டது. இந்த அருங்காட்சியகத்தை சார்ள்ஸ் டார்வின் வாழ்ந்த இல்லத்தருகே அமைத்துள்ளார்கள். அந்த இல்லத்தையும் தூரப்பார்வையாகப் பார்க்கமுடிந்தது.




யானைப் பறவையின் முட்டை

**இம்பீரியல் போர் அருங்காட்சியகம்**


இந்தக்கட்டுரையை வாசகர்கள் வாசித்துக் கொண்டிருக்கும் வேளையில் முதலாவது உலகமகாயுத்தத்தின் நூற்றாண்டை நினைவு கூரும் நிகழ்ச்சிகள் உலகின் சில நாடுகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

முதலாம் இரண்டாம் உலகப்போரில் பெரும் பாதிப்படைந்த நாடுகளில் இங்கிலாந்தும் ஒன்றாகும். அந்தப் போரில் இங்கிலாந்து எதிர்கொண்ட பலதரப்பட்ட அழிவுகளையும், அந்தப் போர்களில் பாவிக்கப்பட்ட ஆயுதங்களையும், போரில் இருந்து மீண்ட வரலாறுகளையும், இந்த அருங்காட்சியகத்தில் காட்சிப் படுத்தியுள்ளார்கள்.

இந்த அருங்காட்சியகம் போரின் போது இங்கிலாந்து மக்களிடையே காணப்பட்ட தேசபக்தி, தியாகம், மற்றும் வீரம் போன்ற நற்பண்புகளை எடுத்தியம்புவதாகவும் இன்றைய தலைமுறையினருக்கு நாட்டுப்பற்றை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. இந்த இடத்தில் முதலாம் இரண்டாம்



சார்ள்ஸ் டாவின்




**2ஆம் உலக யுத்தப் போர்ப் பீரங்கிகள்**

போர்களைப்பற்றிய பின்னணியை அறிந்துகொள்ளுதல் பொருத்தமானதாக அமையும்.

**முதலாம் உலகப்போர்**

ஆஸ்திரிய நாட்டு பட்டத்து இளவரசனான பிரான்சிஸ் பெர்டினாந்தும் அவருடைய மனைவியும் காரில் சென்றபோது 1914 ஜூன் 28 ஆம்திகதி சுட்டுக்கொல்லப்பட்டனர். சுட்டவன் செர்பிய நாட்டைச் சேர்ந்தவன். இதன்காரணமாக செர்பியாமீது ஆஸ்திரியா படையெடுத்தது. நாடு பிடிக்கும் ஆசையில் இருந்த ஜேர்மனி ஆஸ்திரியாவுக்கு ஆதரவாக போரில் குதித்தது. அதேவேளை ஹங்கேரி, துருக்கி, பல்கேரிய நாடுகளும் ஜேர்மனியுடன் சேர்ந்து கொண்டன.

செர்பியாவுக்கு ஆதரவாக பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, இத்தாலி, ஜப்பான், சீனா ஆகிய நாடுகள் போரில் ஈடுபட்டன. பின்னர் அமெரிக்காவும் இவர்களுடன் இணைந்துகொண்டது.

புதிய தொழில் நுட்பங்களில் இயந்திரத் துப்பாக்கிகள் உயர்தரமான கனரகப் பீரங்கிகள் வான்வழிப்போர்முறை, நீர்மூழ்கிகள் என்பன போரின் தாக்கத்தைப் பெரிதாக்கின.

இந்தப்போரில் ஜெர்மனிப்படைகள் விஷவாயுவைப் பயன்படுத்தின. ஆரம்பத்தில் ஜேர்மனிக்கு வெற்றிகள் கிடைத்தன. ஆனாலும் பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நேச நாடுகளின் படைகள் 1918ல் ஜெர்மனிக்குள் நுழைந்தன. ஜெர்மனி சரணடைந்தது. 1561நாட்கள் நடைபெற்ற இப்போரில் 2 கோடிப்பேர் மாண்டனர். யுத்தம் முடிந்து உலகம் முழுவதும் பரவிய விஷக்காய்ச்சலால் மேலும் 2 கோடிமக்கள் மாண்டனர்.

**இரண்டாம் உலகப்போர்**

இரண்டாம் உலகப்போரின் கதாநாயகனும் வில்லனும் ஒருவரே. அவர்தான் ஹிட்லர். முதல் உலகப்போரின்போது ஜெர்மனி படையில் இராணுவ வீரராக இருந்த ஹிட்லர்



**2ஆம் உலக யுத்தப் பதுங்கு குழி**

இரண்டாம் உலகப்போரின்போது ஜேர்மனியின் சர்வாதிகாரியாக விளங்கினார். அவர் பெயரைக் கேட்டாலே உலகம் நடுங்கியது. 1938ல் ஜெர்மனியின் சர்வாதிகாரியாகப் பதவியேற்ற ஹிட்லர் 1936 செப்டெம்பர் முதலாம் திகதி போலந்து மீது படையெடுத்தார்.

செப்டெம்பர் 3ல் பிரிட்டனும் பிரான்ஸும் ஜேர்மனி மீது படையெடுத்தன. 1940 ஜூன் மாதத்திற்குள்ளாக பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளை ஜெர்மனி தன் ஆளுகைக்கு உட்படுத்தியது. இந்த இரண்டாம் உலகப்போர் உலகம் முழுவதும் நடைபெற்றது. தென்கிழக்கு ஆசிய நாடுகளில், வட ஆபிரிக்காவின் பாலை வனத்தில், கடல்பகுதிகளில் போர் நிகழ்ந்தது. 1945ல் ஹிட்லர் தற்கொலை செய்துகொண்டார். ஜப்பான் இறுதிவரை போரிட்டது. 1945 ஆகஸ்ட் 6ஆம் திகதியிலும் 9ஆம் திகதியிலும் அமெரிக்கா, ஜப்பான் நகரங்களான ஹிரோஷிமா, நாகசாக்கி ஆகிய நகரங்களில் அணுக்குண்டு போட்டது. ஜப்பானியர் நிபந்தனையின்றி அடி பணிந்தனர். ஆறு வருடங்களாக இடம்பெற்ற இரண்டாம் உலகப் போர் 1945 செப்டெம்பர் 2ல் முடிவுற்றது.

இந்த அணுக்குண்டின் தாக்கம் பற்றி வரலாற்று ஆசிரியர்கள் பின்வருமாறு பதிவு செய்துள்ளனர்: 'அமெரிக்க விமானப்படையைச் சேர்ந்த பிரிகேடியர் பால் டிப்பெட்ஸ் ஜப்பானிய நகரான ஹிரோஷமா மீது ஒரு பி-29 விமானத்தில் பறந்து கொண்டிருந்தார். அடுத்த சில நொடிகளில் அந்த விமானத்திலிருந்து 16 கிலோ டன் யுரேனிய அணுக்குண்டு வீசப்பட்டது. ஒரு பராசூட் விரிந்தது. சூரியனைப்போன்ற வெளிச்சம் தோன்றியது. அவ்வளவுதான், ஹிரோஷிமா நகரம், நரகமாகியது. பரசூட் உருகுவதைப் பார்த்துக் கொண்டிருந்த இளம்பெண்களின் கண்கள் உருகின. முகம் வெடித்தது. நகரம் முழுக்கத் தீப்பிடித்து எரிந்தது. வெப்பநிலை 4000 டிகிரியைத் தாண்டியது. இரும்பு உருகி ஓடியது. மனித உடல்கள் ஆவியாகின. உதவிகோரி நீட்டப்பட்ட கைகளிலிருந்து நகங்களும் தோல்களும் உதிர்ந்தன. அணுக்குண்டு வெடித்த வேகத்தில் நகரம் முழுவதும் இருந்த வீடுகள் நொருங்கின. உள்ளிருந்தவர்கள் உயிரோடு எரிந்துபோனார்கள். சில நொடிகளில் ஆயிரக் கணக்கானவர்கள் மாண்டனர்".

இரண்டாம் உலகப்போரில் ஐக்கிய இராச்சியத்தின் பெருமையை உலகுக்கு உணர்த்தியவராக வின்ஸ்டன் சர்ச்சில் கருதப்படுகிறார். பிரித்தானிய அரசியல்வாதிகளில் மிக முக்கியமானவராகக் கருதப்படும் இவர் இரண்டாம் உலகமகாயுத்தத்தின் போதும் மீண்டும் 1951 முதல் 1955 வரையிலும் ஐக்கிய இராச்சியத்தின் பிரதமராக இருந்தவர்.

சர்ச்சில் மிகச்சிறந்த பேச்சாளர், பிரித்தானிய இராணுவத்தின் அதிகாரி, வரலாற்றியலாளர், அவர் நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர்.

அவரே இரண்டாம் உலகமகா யுத்தத்தில் பிரித்தானியாவை அடிபணியாது நிமிரவைத்தார் என்பது வரலாறு.

இந்த இம்பீரியல் போர் அருங்காட்சியகத்தைப் பார்வையிட்ட போது எமது நாட்டில் இடம்பெற்ற இனவிடுதலைக்கான போர் நிலவரங்கள எனது மனதில் படம்போல ஓடிக்கொண்டிருந்தன.

யுத்தத்தில் பாவிக்கப்பட்ட பெரிய பீரங்கிகள், துப்பாக்கிகள், கப்பல்களின் பாகங்கள், கைத்துப்பாக்கிகள், தொலைபேசி உபகரணங்கள், பதுங்கு குழிகள், றொக்கட் லோஞ்சர்கள், ஆட்டிலறிகள், கடல்மூழ்கிக் கப்பல்கள், கைக்குண்டுகள், வாகனங்கள், போர்க்கால பத்திரிகைகள், தொலைத் தொடர்புச் சாதனங்கள், போர்வீரர்கள் அணிந்த உடைகள், அவர்கள் பெற்ற பட்டயங்கள் - விருதுகள், போர்க்காலத்தில் வாழ்ந்த ஒரு குடும்பத்தின் இடர்சுமந்த வாழ்க்கை, இப்படியாகப் பலதரப்பட்ட விடயங்களை அங்கே காட்சிப்படுத்தியுள்ளார்கள்.

இவற்றைவிட இங்குள்ள மண்டபம் ஒன்றில் முதலாம் இரண்டாம் உலகப்போர்களின்போது எடுக்கப்பட்ட கறுப்பு வெள்ளைப் படக்காட்சிகளைக் காண்பிக்கிறார்கள். ஆகாயத்திலிருந்து விமானக் குண்டுத்தாக்குதல், மக்கள் சிதறி ஓடுதல், கட்டிடங்கள் சேதமடைதல், போர் வீரர்கள் மரணமடைதல், போரில் கனரக வாகனங்களில் இருந்து பீரங்கித்தாக்குதல், வீடுகள் பற்றி எரிதல், குண்டு வீச்சுகளைத் தொடர்ந்து எங்கும் புகைமண்டலமாகக் காட்சிதருதல் தமது உயிரைத்துச்சமாக மதித்து போர்வீரர்கள் முன்னேறி எதிரியைத் தாக்குதல் போன்றவை இப்படக்காட்சியில்

அடங்கியுள்ளன. இந்தப் படக்காட்சியை அங்குள்ள பாடசாலை மாணவர்கள ஆர்வமாகப் பார்க்கிறார்கள். தங்கள் மூதாதையர் தமது நாட்டைக் காப்பாற்ற எத்தகைய விலை கொடுத்துள்ளார்கள் என்பதை மாணவர்கள் உணர்வுபூர்வமாக அறிந்துகொள்கிறார்கள்.

நாட்டுப்பற்றை ஏற்படுத்தும் வகையில் நடந்து முடிந்த போரின் தடயங்களை பிரித்தானியர்கள் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குக் காட்சிப்படுத்துகிறார்கள்.

'போரின் தடயங்கள் நாட்டுப்பற்றை தூண்டவல்லன என்ற காரணத்தினால் எமது நாட்டில் போரின் சுவடே தெரியாமல் அழிக்கப்பட்டுவிட்டன' என்ற எண்ணம்தான் இந்த அருங்காட்சி யகத்தைவிட்டு வெளியேவந்தபோது, எனது எண்ணத்தில் ஓடியது.

**கார்ல் மாக்ஸ் கல்லறை**

'மானுட சமூகங்கள் தங்களை எவ்வாறு உற்பத்தியும் மறு உற்பத்தியும் செய்து கொள்கின்றன என்பதை ஆய்வு செய்வதன்மூலம் அறிவியல் பூர்வமான அடிப்படையில் மானுட வரலாற்று வளர்ச்சியை புரிந்துகொள்ள முடியும்' என்று வெளிச்சமிட்டுக் காட்டியதன் மூலம் மானிட வரலாற்றை ஓர் அறிவியலாக உயர்த்தியவர் கார்ல் மாக்ஸ்.

இன்று மார்க்சியக் கொள்கையைப் பின்பற்றுபவர்கள் தொகை 130 கோடி என அறிய முடிகிறது. வேறு எந்தக் கொள்கையையும் இத்தனைபேர் பின்பற்றவில்லை என்பதும் இங்கு முக்கியமான விடயமாகிறது. மார்க்ஸின் சிந்தனைகளைப் பல்வேறு குழுக்கள் பல்வேறு வகையாக விளக்கியுள்ளன. இவர்களுள் மார்க்சிய லெனினிய வாதிகள், டிரொஸ்கியிச வாதிகள், மாவோயிச வாதிகள், தாராண்மை மார்க்சிய வாதிகள் என்போர் அடங்குவர்.

ஜெர்மனியில் பிறந்த கார்ல்மாக்ஸினால் தனது சொந்த நாட்டிலேயே நிம்மதியாக இருக்க முடியவில்லை. அவரது கருத்துக்களுக்கு அக்காலத்தில் எதிர்ப்பாளர்கள் பலர் அங்கு இருந்தனர். வெறுப்படைந்த மார்க்ஸ் குடும்பத்தினருடன் பிரான்ஸுக்கு குடிபெயர்ந்தார். அரசியல் ரீதியான பிரச்சினைகள் அங்கும் தொடர்ந்தன. அவர் நாட்டைவிட்டு




**கார்ல் மாக்ஸ் – கல்லறை**
**ஆசிரியரின் அஞ்சலி**

வேளியேறவேண்டுமென பிரெஞ்சு அரசாங்கம் கட்டளையிட்டது. அக்காலத்தில் ஐரோப்பாவில் இருந்து வெளியேறிய அரசியல் ஏதிலிகளுக்குரிய புகலிடமாக இங்கிலாந்து இருந்தது. மார்க்ஸ் அங்கு சென்று தனது இறுதிக்காலத்தைக் கழித்தார்.

அவர்சென்ற வேளையில் பிரமாண்டமாகக் கட்டியெழுப்பப்பட்ட பிரித்தானிய அருங்காட்சியகத்தின் கட்டுமான வேலைகள் நிறைவுற்றிருந்தன. மார்க்ஸ் நாள் தவறாது அங்கு சென்று தினமும் 12 மணிநேரம் அருங்காட்சியகத்திலிருந்த நூல்நிலையத்தில் புத்தகங்களுடன் நேரத்தைச் செலவழித்தார். அதுவே அவரது ஆராய்ச்சிக் களமாகவும் இருந்தது. 40 வருடகாலம் அங்கிருந்த

நூல்களைப் படித்து ஆராய்ச்சி செய்து எழுதிய நூல்தான் 'மூலதனம்' (Das Capital). அந்த நூலின் முதல் தொகுதி 1867ல் வெளிவந்தது.

இலண்டன், ஹைகெட் இடுகாட்டில் உள்ள கார்ல் மாக்ஸின் கல்லறைக்கு மலர்சாத்தி அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினோம்.

இவரது கல்லறையில் பொதுவுடமை அறிக்கையின் இறுதிவரியான - உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் (Workers of all land Unite) என்ற வசனமும், 'மெய்யியலாளர்கள் உலகை விளக்குவதற்கு மட்டுமே பலவழிகளைக் கையாண்டுள்ளனர் - நோக்கம் அதனை மாற்றுவதே' (The Philosophers have only interpreted the world in various Ways – the point however is to change) என்ற வரிகளும் பொறிக்கப்பட்டுள்ளன.

1954ஆம் ஆண்டில் பெரிய பிரித்தானிய பொதுவுடமைக் கட்சியினர், மார்க்ஸின் கல்லறையை அமைத்தனர். இதில் லோரன்ஸ் பிராட்ஷா என்பவரால் உருவாக்கப்பட்ட மார்க்ஸின் மார்பளவு சிலை உள்ளது.

இந்த மாமேதையின் சிலையைச் சென்று பார்த்து அஞ்சலி செலுத்தக் கட்டணம் வசூலிக்கிறார்கள். அதுதான் மனதுக்கு நெருடலாக உள்ளது.

❍ ❍ ❍



# 9

# இலங்கை நண்பர்களும் 'ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழ்' அறிமுகவிழாவும்

எமது இலண்டன் பயணத்திற்கான முக்கிய நோக்கம் அங்கு நடைபெற்ற உலக இலக்கிய மாநாட்டில் கலந்து ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிப்பதே என்பதை இக்கட்டுரைத் தொடரின் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருந்தேன்.

நாம் அந்த மாநாட்டில் பங்குகொள்வோம் என்பது முடிவானதும் 'ஞானம்' 150 ஆவது சிறப்பு மலராக வெளிவந்த 'ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழி'ன் அறிமுக விழாவை இலண்டனில் நடத்தலாம் என்ற ஆலோசனையை எழுத்தாளர் வவுனியூர் உதயணன் தெரிவித்தார்.

வுவுனியூர் இரா. உதயணன் பற்றி இலக்கிய உலகில் அறியாதார் இருக்கமுடியாது. இலண்டனில் வாழ்ந்துகொண்டு வவுனியூர் என்ற தனது பிரதேசத்தை உலகெங்கும் ஒலிக்கச்செய்து ஈழமண்ணுக்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் இவர் சிறுகதை, நாடகம், நாவல் ஆகிய துறைகளில் பிரகாசித்துக் கொண்டிருப்பவர். 'விதிவரைந்த பாதையிலே'

என்ற நாவலுக்கு 2008ல் சாகித்திய விருதினைப் பெற்றவர். 'பனிநிலவு' நாவலுக்கு கொடகே நிறுவனத்தின் தேசிய விருதையும் தமிழ்நாடு கு. சின்னப்பபாரதி அறக் கட்டளை விருதையும் பெற்றவர். இந்த நாவலும் 'நூலறுந்தபட்டங்கள்' என்ற நாவலும் இந்தி, மலையாளம், சிங்களம் ஆகிய மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டவை என்பதும் குறிப்பிடத்தக்கது. திரு. உதயணன் 'ஞானம்' சஞ்சிகையின் வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டிவருபவர்.

அவரது ஆலோசனையை ஏற்று, ஈழத்துப் போர் இலக்கிய சிறப்பிதழின் பிரதிகளை நாங்கள் இலண்டனுக்குப் புறப்படுவதற்கு முன்னரே விமானப் பொதியில் அனுப்பி வைத்தோம்.

விழாவை இலண்டனில் ஏற்பாடு செய்வதில் அதிக அக்கறையுடன் செயற்பட்டவர்களில் நூலியலாளர் திரு. செல்வராஜா அவர்களும் முக்கியமானவர்.

இந்த விழாவுக்கு யார் யாருக்கு அழைப்பிதழ்கள் கொடுக்க வேண்டும் என ஆலோசனை கூறியதோடு தனது சார்பிலும் பலரை விழாவுக்கு அழைத்துச் சிறப்புச் செய்தவர் இணுவில் திரு. சச்சிதானந்தன் அவர்கள். இவர், உரும்பராய் இந்துக் கல் லூரியில் நான் மாணவப் பருவத்தில் எழுதித் தயாரித்து நடித்த நாடகமொன்றில் நடித்தவர். இலண்டனில் லூசியம் சிவன்கோயில் நிர்மாணத்தில் பெரும்பங்காற்றியவர். சமூக மேம்பாட்டுச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருபவர்.

இந்த வெளியீட்டு விழா 24-08 2013 அன்று மாலை இலண்டன் லூசியம் சிவன் கோயிலில் சுடரொளி ஆசிரியர் திரு. ஐ. ரி. சம்பந்தன் அவர்கள் தலைமையில் இடம்பெற்றது.

ஐ.ரி. சம்பந்தன் அவர்கள் சுடரொளி வெளியீட்டுக் கழகம் என்ற அமைப்பினூடாகப் பல இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டு வருபவர். சமூக சேவையாளராகவும் விளங்குபவர். ஞானம் சஞ்சிகையுடன் அவருக்கு நெருங்கிய தொடர்பிருந்தது. 'கலைச்செல்வி' ஆசிரியர் சிற்பி சரவணபவன் அவர்களது பவளவிழா மலரை 'ஞானம்' வெளியிடுவதற்கு பலவழிகளிலும் பக்கபலமாக நின்று செயற்பட்டவர்.




Winston Churchill




Speakers's Corner

திரு மு. நித்தியானந்தன், இளைய அப்துல்லா, திரு. தி .பிரபாகரன் ஆகியோர் விழாவில் நூல்விமர்சனம் செய்தார்கள். இவர்களில் திரு. மு. நித்தியானந்தன் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளராக இருந்த காலத்தில் நான் எழுதிய 'குருதிமலை' நாவலுக்கு குரும்பசிட்டி சன்மார்க்கசபை நடத்திய அறிமுக விழாவில் விமர்சன உரை நிகழ்த்தியவர். இளைய அப்துல்லாஹ் இலங்கையில் இருந்த காலத்திலும் இங்கிலாந்து சென்ற பின்னரும் 'ஞானம்' சஞ்சிகையில் சிறுகதைகள், கவிதைகள் எழுதியதோடு 'மற்றவை நேரில்' என்ற பத்தியையும் தொடராக எழுதியவர். இலண்டன் 'தீபம்' தொலைக்காட்சியில் பணிபுரிந்த ஊடகவியலாளர். இவர்கள் மூவரது விமர்சனங்களும் வெவ்வேறு கோணங்களில் மிகவும் கனதியானவையாக அமைந்தன. இளைய அப்துல்லாஹ் தனது விமர்சன உரையின் இறுதியில் போர் இலக்கியச் சிறப்பிதழைப்போன்று "ஈழத்துப் புலம்பெயர் இலக்கியச் சிறப்பிதழை"யும் ஞானம் வெளிக்கொணரவேண்டும் என்ற வேண்டுகோளையும் முன்வைத்தார்.

விழாவை மங்கல விளக்கேற்றி ஆரம்பித்ததோடு முதற் பிரதியையும் பெற்றுச் சிறப்பித்தவர்கள் டாக்டர் நவரட்னம் தம்பதிகள். இத்தம்பதிகள் இலங்கையில் இருந்த காலத்தில் எனது பெரிய தந்தையாரான பிரம்மஸ்ரீ. து. குமாரசாமி ஐயர் அவர்களைத் தமது குருவாக ஏற்று அவருடன் நெருக்கமாக உறவு பூண்டிருந்தவர்கள்.

கருத்துரை வழங்கியவர் இங்கிலாந்தில் பிரபல சட்டத்தரணியாக விழங்கும் பஷீர் அவர்கள். இவர் இலங்கையில் நடைபெற்ற சர்வதேச இலக்கிய விழாவிலும் உலக இலக்கிய மாநாட்டிலும் பங்குபற்றி ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்த காலத்தில் என்னோடு தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டவர்.

இந்த அறிமுகவிழா எமக்குப் பெரிதும் மன நிறைவைத் தந்த விழாவாக அமைந்ததோடு எமக்குத் தெரிந்த பல நண்பர் களையும் சந்தித்து அளவளாவக் கூடிய சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

இனி இலண்டனில் இருந்த காலத்தில் நான் அவ்வப்போது அவதானித்த சில விடயங்களை இங்கு பதிவு செய்ய விளைகிறேன்.



Nelson’s Coloumns

இலண்டனில் உள்ள வீதியோரங்களில் நடந்தால் எதிரே எப்படியும் ஒரு இலங்கைத் தமிழரையோ அல்லது இந்தியத் தமிழரையோ காண முடிகிறது.

பல இலங்கை இந்திய உணவுக் கடைகள் மற்றும் பலசரக்குக் கடைகள் ஆங்காங்கே காணப்படுகின்றன.

இந்தியாவில் இருந்து வந்த குஜராத்திக்காரர்களின் துணிக்கடைகள், மினி மார்க்கட்டுகளையும் சைனாக்காரர்களின் வியாபார ஸ்தலங்கள் பலவற்றையும் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்திய சினிமாப்பட 'சீ.டீ'க்கள் கடைகளில் தாராளமாகக் கிடைக்கின்றன. இந்தச் 'சீ.டீ.'களில் இந்திய தமிழ் ஹிந்தி சினிமாக்களைப் பார்ப்பது இலண்டன்வாழ் தமிழ்மக்களின் பொழுதுபோக்காக இருக்கிறது. வீட்டில் வளரும் அடுத்த சந்ததியின் காதுகளில் தமிழ்ச் சொற்கள் விழவும் தமிழர்வாழ்க்கை முறைகளை அவர்கள் தெரிந்து கொள்ளவும் தமிழரின் பண்பாட்டு அம்சங்களைத் தெரிந்து கொள்ளவும் இந்திய தமிழ்ச் சினிமாக்கள் உதவுவதாக சில பெற்றோர்கள் நம்புகிறார்கள்.

இலண்டனில் உள்ள ஒவ்வொரு ஊர்களில் அருகிலும் ஒவ்வொரு பூங்கா அமைந்திருக்கிறது. அங்கு தேகப்பயிற்சி செய்பவர்கள், சிறுவர்களைப் பூங்காவுக்கு அழைத்து வருபவர்கள், காற்றோட்டமாக அமர்ந்து புத்தகம் வாசிப்பவர்கள், சைக்கிள் ஓடப்பழகுபவர்கள், எனப் பல்வேறு வகையான பொழுது போக்குகளிலும் ஈடுபடுபவர்களையும் காணலாம்.

நான் முன்னர் குறிப்பிட்ட இலண்டன் பிறிட்ஜ்ஜின் சிறிது தூரத்தில் மாவீரன் நெல்சன் நினைவுச் சதுக்கம் (Nelson's Coloumns) அமைந்திருக்கிறது. நெல்சன் ஒரு கடற்படைத் தளபதியாக விளங்கியவன். 1805ல் பாரிய கடல்யுத்தம் ஒன்று பிரான்ஸ் நாட்டுக்கும் ஆங்கிலக் கடற்படைக்கும் இடையில் நடந்தது. அந்தப்போரில் பிரான்ஸ் கடற்படையைத் தோல்வியுறச் செய்த நெல்சனின் நினைவாக 170 அடி உயரத்தில் ஒரு தூணை எழுப்பியுள்ளார்கள். இத்தூணின் அடிப்பாகத்தில் நாற்புறமும் பெரிய சிங்கங்களில் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நெல்சனின் உருவச்சிலையும் அங்கு அமைக்கப்பட்டுள்ளது. இச்சதுக்கத்தை அழகுபடுத்த நீரூற்றுகள்

அமைக்கப்பட்டுள்ளன. எப்போது பார்த்தாலும் இந்தச் சதுக்கத்தின் அருகில் சுற்றுலாப்பயணிகள் நிறைந்து காணப்படுகின்றனர். நூற்றுக்கணக்கான மாடப்புறாக்கள் அங்கு காணப்படுகின்றன. இந்தப்புறாக்கள் சுற்றுலாப்பயணிகளைச் சூழ்ந்துகொண்டு அவர்கள் கொடுக்கும் உணவுகளை உண்பதோடு அவர்களைச் சுற்றித் திரிகின்றன. சில அவர்களது தோள்களில் அமர்ந்து மகிழ்வூட்டுகின்றன.

அங்கிருந்து சற்றுத் தூரம் நடந்து சென்றால் பேச்சாளர் பகுதி (Speakers's Corner) என்ற இடத்தை அடையலாம். அந்த இடத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் மக்கள் வந்து கூடுவார்களாம். அந்த இடத்தில் இருந்து நீங்கள் எதைப்பற்றியும் பேசலாம், யாரையும் விமர்சிக்கலாம் உங்கள் பேச்சைக்கேட்க ஒரு கூட்டம் தயாராக இருக்கும்.

எமது நாட்டில் இனவிடுதலைக்கான போர் உச்சம் பெற்றிருந்த காலகட்டத்தில் எம்மவர்கள் பலர் இந்த இடத்தில் இருந்து போருக்கான நியாயப்பாட்டை விளக்கினார்கள் என்றும் அறிய முடிகிறது. இந்தப் பேச்சாளர் பகுதியில் பல அரசியல் தலைவர்கள் பேச்சுக்கலையில் பயிற்சிபெற்றார்கள் எனவும் கூறுகிறார்கள். இரண்டாம் உலகப்போரில் இங்கிலாந்துக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்த வின்ஸ்டன் சேர்ச்சில் தனது பேச்சுக்கலையை வளர்த்துக் கொண்டதும் இந்த இடத்திலேதானாம்.

இலண்டன் நகர் பல்லினமக்களின் வதிப்பிடம் என்பதை ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருந்தேன். ஆபிரிக்கா ஆசியாக் கண்டங்களில் இருந்து சென்றவர்கள் சீனா, இத்தாலி கிறீஸ், துருக்கி சைபிரஸ் போலந்து, அவுஸ்திரேலியா, நியூசீலாந்து மற்றும் கனடா அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்தும் மக்கள் பிரித்தானியாவுக்குள் சென்று குடியேறியிருக்கிறார்கள்.

ஐரோப்பிய ஒன்றியம் (European Union) என்பது இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஐரோப்பாவில் அரசியல் மற்றும் பொருளாதார ஒற்றுமை ஏற்பட நிறுவப்பட்ட அமைப்பாகும். போருக்குப்பின் நடைபெற்ற சமுதாய மறுசீரமைப்புப் பணியின் முக்கிய அம்சமாக ஐரோப்பிய ஒன்றியம் உருவானது. 1993 நவம்பர்

1 ஆம் தேதி 'மாசுடிரிச' ஒப்பந்தம் செயல்படத் தொடங்கியபோது ஐரோப்பிய ஒன்றியம் முறைப்படி நிறுவப்பட்டது. காலத்துக்குக் காலம் பலவேறு ஐரோப்பிய நாடுகள் இவ்வமைப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இறுதியாக 2007இல் ரூமேனியா, பல்கேரியா ஆகிய நாடுகள் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

ஐரோப்பிய ஒன்றியம் உருவாக்கப்பட்டதிலிருந்து பிரித்தானியா எதிர்பாராத பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவதாக அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். ஐரோப்பிய ஒன்றியத்தில் இதுவரை டென்மார்க், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நோர்வே, சுவீடன், நெதர்லன்ட், சுவிற்சலாந்து உட்பட 31 நாடுகள் அங்கத்துவ நாடுகளாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் பிரித்தானியாவுக்குள் வீஸா பெறாமலே உள்நுழைய முடியும். இதனைப் புலம்பெயர்ந்து சென்ற நம்மவர்களில் பலர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதைக் காணமுடிகிறது. ஐரோப்பிய நாடுகளில் அந்தந்த நாட்டின் மொழியைக் கற்றுக் கொள்ளவேண்டிய கட்டாயம் இருக்கிறது. அந்த நாட்டின் மொழியிலேதான் கல்விகற்க வேண்டியுமுள்ளது.

இதனைத் தவிர்ப்பதற்காக அனேகர் பிரித்தானியாவில் தம் பிள்ளைகளின் ஆங்கில மொழிக் கல்விக்காக இலண்டனை நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர்.

ஐரோப்பிய நாடுகளில் இருந்து வருபவர்கள் பிரித்தானி யாவிலேயே தங்கிவிடுகிறார்கள். இவர்கள் சொந்தமாக இங்கு வீடுகளை வாங்குவதால் வீடுகளின் விலை ஏறிக்கொண்டே போகிறது. தொழில் வாய்ப்புகளைப் பெறுவதிலும் கடும்போட்டி நிலவுகின்றது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் இருந்து பிரித்தானியாவுக்கு வருபவர்களுக்கு விஸா அனுமதி தேவையற்றிருப்பதினால் எப்படியான ஒருவர் நாட்டிற்குள் வருகிறார் என்பதைக் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறது. சட்ட விரோதக் குடியேற்றக்காரர்கள், போதைப் பொருள் கடத்துவோர் ஆள் கடத்தல்காரர்கள், எனப் பலதரப்பட்டவர்களும் உள்நுழைந்து விடுகின்றனர்.

ஐரோப்பிய ஒன்றியம் உருவானதிலிருந்து பிரித்தானிய மக்கள் தமது சொந்த நாட்டை விட்டு வெளியேறி வெற்று நாடுகளில்

புகலிடம் தேடிக்கொண்டிருப்பதாகவும் அந்த நிலைமைக்குக் காரணம் அரசாங்கத்தின் ஐரோப்பியக் கொள்கையே என ஒரு சாரார் அரசியல் கண்டனங்கள் தொடுக்கிறார்கள்.

எனது உறவினர் ஒருவர் டென்மார்க்கில் நீண்டகாலம் வாழ்ந்தவர் தற்போது இந்த ஐரோப்பிய ஒன்றிய உடன்படிக்கையின் பிரகாரம் இலண்டனுக்கு வந்து இலண்டன் வாசியாகிவிட்டார். அதற்கான காரணத்தை நான் வினவியபோது தனக்கும் மனைவிக்கும் டென்மார்க்கிலிருந்து மாதா மாதம் பென்ஷன் வருவதாகவும் அதனைப் பெற்றுக்கொண்டு இலண்டனில் தான் வேறு தொழில்பார்த்து வாழ்வதாகவும் கூறினார். தனது பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு இலண்டன் வாழ்க்கையே எற்றது என்றும் கூறினார்.

பிரித்தானியாவில் தமிழரின் பாரம்பரிய இசைநடன கலைகளைப் பயில்வதற்கு அதிக வசதிகள் இருப்பதாக அறிந்தேன். இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளிலில் இத்தகைய பாரம்பரியக் கலைகள் வளர்வதைவிட இங்கு அதிக வசதிகளுடன் வளர்ச்சியடைவதாகக் கூறுகிறார்கள். தகுதிபெற்ற 50க்கும் மேற்பட்ட இசை நடன ஆசிரியர்கள் இங்கு இருப்பதாக அறிய முடிந்தது. சில பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் இலவச இசை நடன வகுப்புகள் இடம்பெறுகின்றன.

பிரித்தானிய அரசு 60 வயது நிறைவடைந்தவர்களுக்குப் பல சலுகைகளை வழங்குகிறது. ரயில் பேருந்துப் பயணங்களுக்கு இலவச பாஸ்களை வழங்குகிறது. 65 வயதாகிவிட்டால், பராமரிப்புச் செலவாக ஒரு தொகைப்பணத்தை வாராவாரம் வழங்குகிறது. இதைத்தவிர இருப்பிட வசதியையும் அதற்கான வாடகைப் பணத்தையும் வழங்குகிறது.

ஈழத்தில் இருந்து புலம்பெயர்ந்து வந்த அனேகர் இத்தகைய வசதிகளைப் பெற்றுள்ளனர். தஞ்சம்கோரி வந்தவர்களுக்கும் இத்தகைய வீட்டுரிமை கிடைக்கிறது. இதன்காரணமாக தஞ்சம் கோரி வந்தவர்களில் அநேகர் சபையால் வழங்கப்படும் வீடுகளில் வசிக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

எனது பால்ய நண்பன் ஒருவனைச் சந்தித்தபோதுதான் இத்தகவல்களை நான் அறிந்து கொண்டேன். அவனது பெயர்

ஸ்ரீராமச்சந்திரன். நானும் அவனும் சிறுபராயத்தில் இணைபிரியாத நண்பர்களாக இருந்தோம். சிறுவயதில் நான் வாசிப்புப் பழக்கத்தை மேற்கொள்ளவும் காலக்கிரமத்தில் எழுத்தாளனாக உருவாகுவதற்கும் அவனது நெருக்கமான நட்பு பெரிதும் உதவியிருக்கிறது. அந்த நண்பன் இலண்டனில் வாழ்கிறான் என்ற செய்தியை நான் ஏற்கனவே அறிந்திருந்தேன். இந்த நண்பனை நீண்டகாலத்தின் பின் நான் தேடிச்சென்று அளவளாவி மகிழ்ந்தேன்.


பிரித்தானிய வெள்ளைக்கார இளைஞர்கள் அனேகமாக இலங்கையைச் சேர்ந்த தமிழ்ப்பெண்களை விரும்பித் திருமணம் செய்வதையும் சமீப காலங்களில் அவதானிக்க முடிகிறது. அதற்கான அங்கீகாரத்தை பெண்களின் பெற்றோர்களும் வழங்கும் காலம் கனிந்திருப்பதாகவே தோன்றுகிறது. எப்படியெனில் முதலில் தாலிகட்டும் திருமணம் தமிழ் முறைப்படி நடைபெறுகிறது. அடுத்து கிறிஸ்தவ தேவாலயத்தில் இடம்பெறுகிறது. இந்தத் தமிழர்களின் போக்கு இந்துக்களின் மதமாற்றத்துக்கும் இட்டுச்செல்வதாக ஒரு நண்பர் குறைப்பட்டுக் கொண்டார்.

இந்தப்பயணத்தில் எனது பள்ளிப்பருவ சகமாணவர்கள் சிலரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. சுந்தரலிங்கம் பள்ளிப்பருவத்தில் நான் எழுதித் தயாரித்த நாடகத்தில் நடித்தவர். கனகாம்பிகை, சோமசுந்தரி ஆகியோர் உயர்வகுப்பில் என்னோடு கல்விகற்றவர்கள். இவர்களில் கனகாம்பிகை எனது உயர்வகுப்பு மாணவர் மன்றச் செயற்பாடுகளில் எனக்கு உறுதுணையாக இருந்து செயற்பட்டவர், பேச்சாற்றலும் இலக்கிய ஆர்வமும் நிறைந்தவர். இவர்களைவிட எனது கிராமமாகிய புன்னாலைக்கட்டுவன் கிராம முன்னேற்றத்தில் என்னுடன் தொடர்புகொண்டு உழைத்துவரும் சூரிய நாராயணன் ஆகியோர் குறிப்பிடப்பட வேண்டியவர்கள்.

இவர்களை நான் சந்தித்தபோது அறிந்துகொண்ட முக்கிய விடயம் யாதெனில் இவர்கள் புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழ்ந்ததில் கிடைத்த பெரும்பேறு இவர்களது அடுத்த சந்ததி கல்வியில் உச்சங்களைத் தொட்டதுதான் என நினைக்கிறேன். எமது நாட்டில் உயர்கல்வி பெறுவதில் இருக்கக்கூடிய தடைகள்

# பிரித்தானியப் பிரதமரால் பாராட்டப்பட்ட மௌலியா செல்வராஜா பிரதமரின் மனைவி செர்ரி பிளேயருடன்





## Schoolgirl author gets praise from Tony Blair

by ALISON KNIBB

A LUTON schoolgirl is hoping The Dangerous New World will be a good place for her to launch her writing career.

Maulia Selvarajah, who is only 10, has had her first book published after Prime Minister Tony Blair suggested her work should appear in print.

The Hart Hill pupil was one of three Luton school children to be taken to Downing Street by Luton South MP Margaret Moran in December. They enjoyed tea with the Blairs and there Maulia presented her book to him.

Her father Norman has since published it and is hoping it will soon be available in leading bookshops.

The Dangerous New World is about four children who, while playing in the park, stumble across a tunnel leading to another world.

Maulia, of Hallwicks Road, Luton, said: "We were reading a book at school called Whose Side Are You On? and this inspired me to write The Dangerous New World. It has a similar theme but in Whose Side they reach a different world when a boy goes into a picture. In mine it's a tunnel and secret

எதுவும் அங்கு இல்லை. பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கொள்வதற்கான தரப்படுத்தல்கள் எதுவும் அங்கில்லை. திறமைசாலிகள் பல்கலைக் கழகங்களில் சேர்ந்து பல்வேறு துறைகளில் பட்டதாரிகளாகி விடுகிறார்கள். சட்டத்துறை, கணினி, கணக்காளர், வைத்தியத்துறை உட்பட இன்னும் பலதுறைகளில் இவர்களது பிள்ளைகள் முன்னணிவகிக்கிறார்கள். ஆங்கிலம் நாட்டின் அரச மொழியாக இருப்பதும் இதற்கான வாய்ப்பை அதிகரித்திருக்கிறது.

இலக்கியத் துறையில் ஆர்வமுள்ள இளந்தலைமுறையொன்றும் உருவாகி வருவதையும் அறிந்து கொண்டேன். நூலியலாளர் என். செல்வராஜாவின் மகள் மௌலியா பதின்மூன்று வயது நிரம்பியபோதே ஆங்கிலத்தில் இரண்டு சிறு நாவல்களை எழுதியுள்ளார். பத்து வயதிலேயே இவர் எழுதிய Dangerous New World என்ற நூலினை எழுதி அப்போது பிரதமராக இருந்த Tony Blair இன் பாராட்டைப் பெற்றிருக்கிறார். இவரது மற்ற நூல் Secret of Mansion என்பதாகும். அத்தோடு சிறுகதைப்போட்டி ஒன்றில் ‘Turning a New Leaf’ என்ற சிறுகதையை எழுதி முதற் பரிசினைப்பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவற்றைவிட, உள்ளூராட்சி நகர மன்றத் தேர்தல்களிலும் பல ஈழத் தமிழர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். சசிகலா என்ற பெண் தெரிவு செய்யப்பட்டு கவுன்சிலராக இருந்திருக்கிறார். கல்வி தொடர்பான விடயங்களில் இலங்கைத் தமிழர்கள் பெரும் பாய்ச்லை ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதை நான் சந்தித்த நண்பர்கள் பலரும் எடுத்துக் கூறினார்கள்.

இலண்டனில் இருந்த காலகட்டத்தில் நான் சந்தித்த முக்கிய இலக்கியப் பிரமுகர்களில் ஒருவர் திரு பத்மநாப ஐயர். இவர் ஈழத்து இலக்கியத்துக்குப் பெரும் பங்காற்றிவரும் இலக்கிய ஆர்வலர். ஈழத்து இலக்கிய உலகில் மட்டுமல்ல, தமிழக இலக்கிய உலகிலும் நன்கு அறியப்பட்டவர். வெளியீட்டுத் துறையிலும் ஆக்கங்களைத் தொகுப்பதிலும் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவர். தரமான, நேர்த்தியான பல நூல்களைப் பதிப்பித்தவர். தனது வாழ்வில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக

ஈழத்து இலக்கியத் துறையிலும் வெளியீட்டுத் துறையிலும் தனக்கென ஒரு முத்திரையை பதித்துக்கொண்டவர். இலக்கியப் பங்களிப்புக்காக கனடிய இயல் விருது பெற்றவர். இலண்டன் தமிழர் நலன்புரிச்சங்க ஆண்டுத் தொகுதிகளாக அவர் வெளிக்கொணர்ந்த ‘கிழக்கும் மேற்கும்’, ‘இன்னுமொரு காலடி’, ‘யுகம் மாறும்’ ‘கண்ணில் தெரியுது வானம்’ ஆகியவை அவர் பதிப்பித்த நூல்களில் பெரும் வரவேற்பைப் பெற்றவை,

இலண்டனில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டில் எனது ஆய்வுக்கட்டுரை வாசிக்கப்பட்டபின் அவர் என்னை நேரில் சந்தித்துப் பாராட்டினார். அதன்பின்னர் அவரது இல்லத்திற்கு இரண்டு தடவைகள் சென்று நாம் அவரை சந்தித்தோம். அச்சந்திப்புகளின் போது அவர் பல பயன்மிக்க நூல்களை எமக்கு அன்பளிப்புச் செய்தார். அத்தோடு எம்மிடம் ஒரு வேண்டுகோளையும் முன்வைத்தார். ‘ஈழத்துப் புலம்பெயர் இலக்கிய’த் தொகுப்பை வெளிக்கொணரவேண்டும் அதற்கான கட்டமைப்பு தற்போது ஞானத்திடம் உள்ளது எனக்கூறி உற்சாகப்படுத்தினார்.

இலக்கிய கர்த்தாக்களில் என்னை வந்து சந்தித்தவர்களில் டாக்டர் அம்பி அவர்களும் முக்கியமானவர். அவர் ஞானம் சஞ்சிகையில் சில ஆக்கங்களை எழுதியுள்ளார். ‘கண்டேன் கைலாசம்’ என்ற பயண இலக்கிய தொடரின் ஆசிரியர் இவர்.

பிரபல எழுத்தாளரான இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் நீண்டகாலம் இலண்டனில் வாழ்பவர். அங்கு கல்விகற்றவர். பெண்ணிய சிந்தனையாளர். பலநாவல்கள் சிறுகதைகள், கட்டுரைகள் எழுதிப் புகழ்பெற்றவர். ஞானம் சஞ்சிகையிலும் இவரது கட்டுரைகள் பிரசுரமாகியுள்ளன. உலக இலக்கிய மாநாட்டில் அவரைச் சந்தித்து இரண்டு நாட்கள் உரையாடும் வாய்ப்புக்கிடைத்தது.

கவிஞரும் சிறுகதை ஆசிரியரும் கட்டுரையாளருமான நவஜோதி ஜோகரட்னம் லண்டன் தமிழ் தொலைக்காட்சியிலும் வானொலியிலும் அறிவிப்பாளராகவும் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் பணிபுரிந்த அனுபவம்மிக்கவர். ஞானம் சஞ்சிகை நடத்திய சிறுகதைப்போட்டிகள் சிலவற்றில் பரிசுகள் பெற்றவர். அவர்



**பத்மநாப ஐயருடன் ஆசிரியர்**

தற்பொது பாமுகம் FA TV யில் அறிவிப்பாளராகவும் மகரந்தச் சிதறல் என்ற நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் விளங்குகிறார். அவர் என்னையும் மனைவியையும் தனித்தனியாகப் பேட்டிகண்டு தலா அரை மணிநேர தொலைக்காட்சி நிகழ்ச்சியை ஒளிபரப்புச் செய்தார். இந்தப் பேட்டி நிகழ்ச்சிகளில் நேயர்கள் பங்குகொள்ளும் நிகழ்சியாக சுவாரஸ்யம் மிகுந்ததாக அமைந்தது

இந்த இலண்டன் பயண இலக்கியத் தொடர் இந்த அத்தியாயத்தடன் நிறைவு பெறுகிறது. எமது இலண்டன் பயணம் வெற்றிகரமாக அமைய பெரிதும் உதவியவர்கள் எனது மைத்துனர் பா. சுதாகரன் அவர்களும் அவர்களது குடும்பத்தினரும் குறிப்பாக அவர்களது மகள் சந்தியாவும்தான். அவர்களின் உதவியால்தான் நாம் இலண்டனில் பல இடங்களையும் சுற்றிப்பார்க்க முடிந்தது. அவர்களுக்கு எமது அன்பையும் நன்றியையும் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

இத்தொடரை அவ்வப்போது வாசித்து உற்சாகமூட்டிய வாசகர்களுக்கும் எமது நன்றி உரியது.

❍ ❍ ❍

# ஆசிரியரின் நூல்கள்

1. காலதரிசனம் *(சிறுகதைகள்)*
2. புதிய சுவடுகள் *(நாவல்)*
3. குருதிமலை *(நாவல்)*
4. லயத்துச் சிறைகள் *(நாவல்)*
5. கவ்வாத்து *(குறுநாவல்)*
6. புரிதலும் பகிர்தலும் *(நேர்காணல்கள்)*
7. அவுஸ்திரேலியப் பயணக்கதை *(பயண இலக்கியம்)*
8. அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும் *(சிறுகதைகள்)*
9. தி. ஞானசேகரன் சிறுகதைகள் *(சிறுகதைகள்)*
10. வட இந்தியப் பயண அனுபவங்கள் *(பயண இலக்கியம்)*
11. எனது இலக்கியத் தடம் - பாகம் 1 *(கட்டுரைகள்)*
12. இலண்டன் பயண அனுபவங்கள் *(பயண இலக்கியம்)*
13. புன்னைநகர் மான்மியம் *(கட்டுரைகள்)*
14. தி. ஞானசேகரன் வழங்கிய
முன்னுரைகள், அணிந்துரைகள் *(அச்சில்)*
15. பார்வையும் பதிவும்
(பல்துறைக் கட்டுரைக்கோவை) *(அச்சில்)*



ஐம்பது வருடங்களுக்கு மேலாக இலக்கியத்துறையில்
இயங்கிவரும் தி.ஞானசேகரன்,
சிறுகதை, நாவல், குறுநாவல், விமர்சனம், கட்டுரை,
பயண இலக்கியம், நூற்பதிப்பும் வெளியீடும்,
இதழியல் ஆகிய துறைகளில் ஈடுபட்டு வருகிறார்.

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்ட
இவர் வைத்தியராகத் தொழில் புரிகிறார்.

இலங்கை அரசின் 'கலாபூஷணம்' விருது பெற்றவர்.

இதுவரை 15 நூல்களை எழுதியுள்ளார்.
இவற்றுள் 'குருதிமலை', 'புதிய சுவடுகள்' ஆகிய
நாவல்கள் 'இலங்கை தேசிய சாகித்திய விருதி'னைப்பெற்றவை.
'லயத்துச் சிறைகள்', 'கவ்வாத்து' ஆகிய நாவல்கள்
மத்தியமாகாணச் சாகித்திய விருதினைப் பெற்றவை.

இவரது 'குருதிமலை' 1992–1993 காலப்பகுதியில் இந்தியாவின்
மதுரை அமெரிக்கன் கல்லூரியில் முதுமாணி (M.A)
பட்டப்படிப்புக்குப் பாடநூலாக விளங்கியது.
இவரது 'அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும்' என்ற
சிறுகதைத் தொகுதி தற்போது
இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் கலைமாணி (B.A)
பட்டப்படிப்புக்குப் பாடநூலாக விளங்குகிறது.

இவரது 'குருதிமலை' என்ற நாவல்
சிங்கள மொழியில் 'தலென யகட' என்ற மகுடத்தில்
மொழிபெயர்க்கப்பட்டு கொடகே நிறுவனத்தினரால்
வெளியிடப்பட்டுள்ளது.
இவரது பத்துச் சிறுகதைகள் அடங்கிய சிறுகதைத் தொகுதி
'பரதேசி' என்ற மகுடத்தில் சிங்கள மொழியில்
மொழிபெயர்க்கப்பட்டு
கொடகே நிறுவனத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டு முதல்
'ஞானம்' என்ற மாதாந்த கலை இலக்கிய சஞ்சிகையை
பதினைந்து வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து
வெளியிட்டு வருகிறார்.

ISBN: 978-955-8354-50-6